Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் 24 | சுடர்: 28 | கதிர்: 225 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஆனி 25, செவ்வாய் 09.07.2013



தெளிவான வானிலை. சிறு மழைக்கான சாத்தியம் உண்டு.

30°C 28°C

**இந்தியா**



பக். 06

கட்டடம் இடிந்து வீழ்ந்தது ஐதராபாத்தில் 10 பேர் சாவு

**உலகம்**



பக். 07

எகிப்திலும் உள்நாட்டுப் போர் எச்சரிக்கின்றார் ரஷ்ய ஜனாதிபதி புடின்

**விளையாட்டு**



பக். 23

விம்பிள்டன்: அன்டி முரே சம்பியன்

# '13' ஐ ஒழிப்பதற்கு இந்தியா விடாது

## பஸிலிடம் தெளிவாகக் கூறி அனுப்பினோம் என தமிழ்க் கூட்டமைப்பிடம் உறுதியளித்தார் மேனன்

கொழும்பு, ஜூலை 9

அரசமைப்பின் '13' ஆவது திருத்தத்தை ஒழிப்பதற்கு இந்திய அரசு ஒரு போதும் இடம்கொடுக்காது. இதில் இந்தியா மிகத் தெளிவாக இருக்கிறது. டில்லிக்கு வந்த அமைச்சர் பஸில் ராஜபக்ஷவிடமும் இதனை ஆணித்தரமாக கூறியிருக்கிறோம். இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை பாதுகாப்போம். இவ்வாறு நேற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் உறுதிபடத் தெரிவித்தார் இந்தியத் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன்.



> "'13' தொடர்பான தனது நிலைப்பாட்டில் இருந்து இந்திய மத்திய அரசு ஒருபோதும் பின்வாங்காது - பிசகாது. அதில் மிகத் தெளிவாகவும் உறுதியாகவும் இருக்கிறோம் என்றார் மேனன்.

அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் இந்தியப் பயணத்துக்குப் பின்னர் இந்திய வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட, 13 ஆவது திருத்தம் தொடர்பான அறிக்கை இந்திய மத்திய அரசின் நிலைப்பாடு என்றும் அதிலிருந்து இந்தியா சற்றேனும் பின்வாங்காது என்றும் சிவ்சங்கர் மேனன் கூட்டமைப்பிடம் கூறியுள்ளார்.

இலங்கைக்கு மூன்று நாள் பயணமாக வருகை தந்த இந்தியத் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன், முதலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மாலை 6 மணிக்கு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்

தொடர்ச்சி: பக்கம் 21

## நவாலிப் படுகொலை நினைவு இன்று



நவாலி சென் பீற்றர்ஸ் தேவாலய படுகொலை நினைவு நாள் இன்றாகும். 1995ஆம் ஆண்டு இதே நாளில் விமானக் குண்டு வீச்சில் படுகொலை செய்யப்பட்ட 147 பேரின் நினைவாக இன்று சென்.பீற்றர்ஸ் தேவாலயத்திலும், நவாலி ஸ்ரீகதிர்காம முருகன் ஆலயத்திலும் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

சென்.பீற்றர்ஸ் தேவாலயத்தில் இன்று காலை 5.30 மணிக்கு விசேட வழிபாடுகள் இடம்பெறும். அதே வேளை ஸ்ரீகதிர்காம முருகன் ஆலயத்தில் மாலை 5 மணிக்கு பூசைகள் இடம்பெறவுள்ளன.

'முன்னேறிப் பாய்தல்' இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் குறித்த தேவாலயத்தில் தஞ்சமடைந்திருந்த சமயம் அதன்மீது தாக்குதல் நடத்தப்பட்டது. (ஐ-50)

## விபத்தில் சிப்பாய்கள் இருவர் சாவு

கிளிநொச்சி, ஜூலை 9

முல்லைத்தீவு, முறிகண்டி ஏ-9 வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் படைச் சிப்பாய் இருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்கள். இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் முறுகண்டி, இந்துபுரம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இருவரது சடலமும் கிளிநொச்சி பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

இரண்டு படைச்சிப்பாய்களும் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த வேளை, எதிரே வந்த டிப்பர் வாகனத்துடன் மோதி விபத்து நேர்ந்துள்ளது.

டிப்பர் வாகனத்தை செலுத்தி வந்த சாரதியும் உதவியாளரும் மாங்குளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக மாங்குளம் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். (ஐ-6)

## வடமாகாணத்தில் முதலில் சிவில் நிர்வாகமே தேவை

### அரசிடம் கோருகிறது ஐ.தே.க.

கொழும்பு, ஜூலை 09

வடக்கு மாகாண சபைத் தேர்தல் மிகவும் முக்கியமான தேர்தலாகச் சர்வதேசத்தால் அவதானிக்கப்படுகிறது. இந்த நிலையில் வடக்கில் முதலில், சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்த வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கோரிக்கை விடுத்தார்.

கொழும்பு இராஜகிரியவில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைக் கூறினார்.



இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:

வடக்கு மாகாண சபை உட்பட மூன்று மாகாண சபைகளின் தேர்தல்களை நடத்துவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. தேர்தல் சுதந்திரமாகவும் நீதியாகவும் நடத்தப்படுவதற்கான உத்தரவாதத்தை அரசு வழங்க வேண்டும். ஆனால் தற்போதே தேர்தலுக்கு முன்னோடியாக அரசு தானம் வழங்க ஆரம்பித்து விட்டது.

குறிப்பாக மூக்குக் கண்ணாடி மற்றும் விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்கள் போன்றவற்றைத் தேர்தல் நடைபெறவுள்ள மாகாணங்களில், அரசு தானமாக வழங்குகின்றது. அத்துடன் அரச சொத்துக்களும் பயன்படுத்தப்படுகின்றன-என்றார். (த)

## செப்ரெம்பர் 21இல் வடக்குத் தேர்தல்

யாழ்ப்பாணம், ஜூலை 9

வடக்கு, மத்திய, வடமேல் மாகாண சபைகளுக்கான தேர்தல் செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி இடம்பெறவுள்ளதுடன் இதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு நாளை மறுதினம் வியாழக்கிழமை அல்லது எதிர்வரும் 14 ஆம் திகதி தேர்தல்கள் ஆணையாளரால் விடுவிக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

வடக்கு மாகாண சபைக்கு முதன்முறையாக இந்த வருடமே தேர்தல் நடத்தப்படவுள்ளது. இதற்காக வடமாகாண சபையை உருவாக்கும் பத்திரத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கையெழுத்திட்டார். அத்துடன் மத்திய, வடமேல் மாகாண சபைகளும் அன்றையதினமே கலைக்கப்பட்டுள்ளன.

செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி தேர்தலை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கான அறிவிப்பை தேர்தல்கள் ஆணையாளர் வெளியிடுவார் என்றும் தெரிய வருகிறது. (த-5)

## சிங்கள மீனவர் வெளியேறும் வரை முல்லையில் போராட்டம் தொடரும்

முல்லைத்தீவு, ஜூலை 9

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள சிங்கள மீனவர்களை வெளியேற்றக் கோரி முல்லைத்தீவு மாவட்டக் கடற்றொழிலாளர் அமைப்புகளின் சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட உண்ணாவிரதப் போராட்டம் நேற்று ஆரம்பமானது. சிங்கள மீனவர்கள் வெளியேற்றப்படும்

தொடர்ச்சி: பக்கம் 21



## இன்று கூடுகிறது தெரிவுக் குழு

கொழும்பு, ஜூலை 9

'13' ஆவது அரசமைப்புத் திருத்தம் மற்றும் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு ஆகியவை தொடர்பில் ஆராய நாடாளுமன்றத் தெரிவுக் குழு இன்று செவ்வாய்க் கிழமை முதல்முறையாகக் கூடவுள்ளதாக அதன் தலைவரும் அமைச்சருமான நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

இன்று பிற்பகல் 3 மணியளவில் நாடாளுமன்றக் கட்டடத்தில் இந்தக் கூட்டம் இடம்பெறவுள்ளதாக அவர் கூறினார். (த)

## ஏமாற்றினார் சிப்பாய் நஞ்சருந்தினார் யுவதி

கிளிநொச்சி, ஜூலை 9

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த யுவதி ஒருவர் நஞ்சு அருந்திய நிலையில் கிளிநொச்சி பொது வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது. இராணுவத்தில் பணியாற்றிய சிப்பாய் ஒருவர் தன்னைக் காதலித்து திருமணம் செய்வதாக ஏமாற்றிய நிலையில் தான் மனமுடைந்து நஞ்சு அருந்தியதாக குறித்த பெண் 'உதயன்' பத்திரிகைக்குத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

நான் எனது உறவினர்களுடன் கொழும்பு சென்று யாழ்ப்பாணத்துக்கு திரும்பிக்கொண்டிருந்த சமயம் (2010 ஆண்டு) பஸ்ஸில் இந்த இராணுவ சிப்பாயை சந்தித்தேன். அவர் எனது தொலைபேசியை வாங்கி இலக்கத்தைப் பெற்றுக்கொண்டார். பின்னர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு இருவரும் பழகி வந்தோம். அவர் என்னை திருமணம் செய்வதாகக் கூறி நீண்ட நாள்களாக காதலித்து வந்தார். 2011 ஆம் ஆண்டு

தொடர்ச்சி: பக்கம் 21

உதயன்
09/07/2013

## சஞ்சீவ பண்டாரவுக்கு விளக்கமறியல்

கொழும்பு,ஜூலை 09

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் சம்மேளனத்தின் ஏற்பாட்டாளர் சஞ்சீவ பண்டாரவை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கோட்டை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பிணை நிபந்தனையை மீறியமை தொடர்பில் விசாரிப்பதற்காக அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் சம்மேளனத்தின் ஏற்பாட்டாளர் சஞ்சீவ பண்டாரவை நேற்றுத் திங்கட்கிழமை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கோட்டை நீதிவான் நீதிமன்றம் அழைப்பாணை விடுதிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

## மூத்த பத்திரிகையாளர் செல்லப்பா நடராசா நேற்றுக் காலமானார்



யாழ்ப்பாணம்,ஜூலை 09

மூத்த பத்திரிகையாளரும், எழுத்தாளரும், நாடாளுமன்ற முன்னாள் அறிக்கையாளருமான செல்லப்பா நடராசா தமது எண்பத்திரெண்டாவது வயதில் நேற்றுக் காலமானார்.

தினகரன் பத்திரிகையில் ஆறு வருடங்கள் உதவி ஆசிரியராகப் பதவி வகித்த காலத்தில் இவர் பல இலக்கிய ஆக்கங்களை எழுதியவர். பின்னர் இருபத்தைந்து வருடங்கள் நாடாளுமன்றத்தில் சிரேஷ்ட ஹன்சார்ட் அறிக்கையாளராகப் பணியாற்றியவர். நாடாளுமன்றம் அதன் செயற்பாடுகள், ருசிகரமான விவாதங்கள் குறித்த இவரது படைப்புக்கள் பல.

தமது பணி ஓய்வின் பின்னரும் பல வகை சார்ந்த கட்டுரைகளைப் படைத்தார். உதயன், சஞ்சீவி பத்திரிகைகளில் எம்மவரின் பண்பாட்டு விழாக்களை குறித்த கட்டுரைகளைத் தாம் நோய்வாய்ப்படும் காலம் வரை படைத்துப் பலரின் பாராட்டைப் பெற்றவர். (அ)

# இந்தியாவின் கவலைகளை கணக்கெடுக்காது இலங்கை

## பி.ரி.ஐ செய்தி நிறுவனம் கூறுகிறது

புதுடில்லி,ஜூலை 09

இந்தியா கவலை வெளியிட்டிருந்த போதிலும், இலங்கை அரசு 13 ஆவது திருத்தச்சட்டத்தை நீர்த்துப்போக வைக்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம் என்று பி.ரி.ஐ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

புதுடில்லிச் சந்திப்புக்களை முடித்துக் கொண்டு கொழும்பு திரும்பிய அமைச்சர் பஸில் ராஜபக்ஷ வெளியிட்டுள்ள கருத்துக்களை வைத்தே, பி.ரி.ஐ செய்தி நிறுவனம் இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

நாம் ஒரு பிரேரணையைக் கொண்டு வந்தால், அதை வழக்கமாக விலக்கிக் கொள்ளமாட்டோம்.மக்கள் விரும்பினால் தான் அதைத் திரும்பப் பெறுவோம். மக்களின் விருப்பப்படி நாங்கள் அவ்வாறு நடந்து கொண்டதற்கு நிறைய உதாரணங்கள் உள்ளன. இந்த விவகாரத்தில் இந்தியா வலியுறுத்தியதா என்பதில் சில விடயங்கள் நிச்சயமாக இரகசியமாகவே இருக்க வேண்டும். என்று அமைச்சர் பஸில் ராஜபக்ஷ கூறியுள்ளார்.

எனவே, இந்தியாவின் கவலைகளைப் பொருட்படுத்தாமல், 13 ஆவது திருத்தச் சட்டத்தைப் பலவீனப்படுத்தும் முயற்சிகளை இலங்கை தொடர்ந்து முன்னெடுக்கலாம் என்றும் பி.ரி.ஐ எதிர்வு கூறியுள்ளது. (த)

# சிவில் சமூகத்தினருக்கு மனித உரிமை செயலமர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 9

மனித உரிமைகள் தொடர்பான செயலமர்வு, சிவில் சமூகத்தினருக்கு நடத்தப்படவுள்ளது. இதில் பங்கெடுக்க விரும்பும் சிவில் சமூகங்கள், இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியக் கிளைக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு அதன் இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்துளார்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் சிவில் சமூகங்கள் இடையே மனித உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான செயலமர்வு நடத்தப்படவுள்ளது. கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களுக்கே இந்தச் செயலமர்வு ஏற்பாடாகியுள்ளது.

> “தமது நிறுவனங்கள் ஊடாகவே இந்த விண்ணப்பங்களை அனுப்ப வேண் டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயலமர்வில் பங்குபற்ற விரும்பும் சிவில் சமூகத்தவர்கள், அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள், கழகங்கள் என்பன விண்ணப்பிக்க முடியும். தமது நிறுவனங்கள் ஊடாகவே இந்த விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு வாரங்களுக்குள் இந்த விண்ணப்பங்கள் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

## லஞ்சம் பெற்ற பிரதேச சபை தலைவர் மாட்டிக் கொண்டார்

கொழும்பு, ஜூலை 9

மண் கொண்டு செல்வதற்கு அனுமதிப்பத்திரம் வழங்குவதற்காக ரூ.1.5 மில்லியன் இலஞ்சம் பெற்றார் என்ற குற்றச்சாட்டின் மீது பிரதேச சபைத் தலைவர் ஒருவர் இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வலல்லாவித்த பிரதேச சபை தலைவரான உதெனி அத்துகோரல என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டவர் என்று தெரிய வருகின்றது.

பெந்தோட்டை பிரதேச சபையின் தலைவரிடமிருந்து குறித்த தொகை பணத்தை சம்பந்தப்பட்டவர் பெற்றுக் கொண்டமைக்காக கைது செய்யப்பட்டிருப்பதாக முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசரும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் தலைவருமான ஜெகத்பால பெத்தபெண்டி கூறியுள்ளார்.

பொலிஸார் மூலம் கிடைத்த ஒருதகவலையடுத்தே ஆணைக்குழுவின் அதிகாரிகள் சம்பந்தப்பட்ட பிரதேச சபைத் தலைவரைக் கைது செய்தார்கள் என்று முன்னாள் நீதியரசர் கூறியுள்ளார்.

தெற்கு கடுகதி வீதியுடன் இணைப்பதற்காக துணை வீதியொன்றை அமைப்பதற்கென மண் எடுத்து செல்வதற்கு அனுமதிப் பத்திரம் வழங்குவதற்காகவே கைது செய்யப்பட்டவர் இலஞ்சம் கேட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சந்தேக நபர் இலஞ்சப் பணத்தில் முதல் தவணையாக 500, 000 ரூபாவை கைது செய்யப்படுவதற்கு முன் பெற்றிருந்தார் என்று கூறப்படுகின்றது. (ப)

## இந்திய மீனவர் விளக்கமறியலில்

மன்னார்,ஜூலை 09

தலைமன்னார் கடற்பரப்பில் கைதுசெய்யப்பட்ட 21 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 19ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிவான் ஆனந்தி கனகரட்னம் உத்தரவிட்டார்.

கைதுசெய்யப்பட்ட 21 இந்திய மீனவர்களையும் மன்னார் நீதிவான் ஆனந்தி கனகரட்னம் முன்னிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை முற்படுத்தியபோதே அவர் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

கடந்த சனிக்கிழமை இரவு இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து 5 படகுகளில் மீன்பிடியில் ஈடுபட்டுக்கொண்டிருந்ததாகக் கூறப்படும் 21 இந்திய மீனவர்களையும் கடற்படையினர் கைதுசெய்தனர். (த-12)

## இலங்கை நிறுவனங்களுக்கு சென்னையில் கடும் பாதுகாப்பு

சென்னை,ஜூலை 09

இந்தியா, சென்னை நகரில் இயங்கி வரும் இலங்கை நிறுவனங்களுக்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தியாவின் பீகார் மாநிலத்தில் புத்தகாயாவிலுள்ள மகாபோதி கோவிலில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இடம்பெற்ற 5 வெடிப்புச் சம்பவங்களில் இருவர் காயமடைந்தனர். இந்தச்சம்பவத்தை தொடர்ந்தே சென்னை நகரில் இயங்கி வரும் இலங்கைசார் நிறுவனங்களுக்குப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைவாக 5,000 பொலிஸார் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை, எழும்பூரிலுள்ள மாஹா போதி சமூகத்தினருக்கும் நுங்கப்பாக்கத்திலுள்ள இலங்கை துணை தூதரகத்துக்கும் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக இந்தியப் பொலிஸார் தெரிவித்தனர். (த)

## பணிப் பகிஷ்கரிப்பினால் ரயில் பயணிகள் பாதிப்பு



கொழும்பு,ஜூலை 09

ரயில் தொழிற்சங்கக் கூட்டமைப்பு நாடளாவிய ரீதியில் மேற்கொண்டுள்ள பணிப் பகிஷ்கரிப்பைத் தொடர்ந்து ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ரயில் பயணிகள் போக்குவரத்துச் செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு முதல் ரயில் தொழிற்சங்கக் கூட்டமைப்பானது 48 மணித்தியாலப் பணிப்பகிஷ்கரிப்பை ஆரம்பித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து தபால் சேவைகள் பாதிப்படைந்துள்ளதுடன் வாராந்த விடுமுறையைக் கழித்துவிட்டு நேற்றுத் திங்கட்கிழமை தமது அலுவலகப் பணிகளுக்கு திரும்பியுள்ள அரச, தனியார் ஊழியர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் போக்குவரத்துச் செய்வதில் பலத்த சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

சம்பள உயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இந்த பணிப் பகிஷ்கரிப்பை ஆரம்பித்துள்ளதாக ரயில் தொழிற்சங்க ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் ஜானக பெர்னாண்டோ தெரிவித்தார்.

இதேவேளை, ரயில் தரப்படுத்தல் தொழிற்சங்க ஒன்றியத்துடன் தொடர்புடைய 11 தொழிற்சங்கங்கள் இந்தப் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளதாகவும் தமது பிரச்சினைகள் தொடர்பில் அதிகாரிகளுடன் மூன்று மணி நேரப் பேச்சுக்களில் ஈடுபட்ட போதும் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கவில்லை' என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (த)

# வனபரிபாலன அதிகாரிகள்-மக்கள் வவுனியா பாரதிபுரத்தில் முறுகல்

வவுனியா,ஜூலை 09

வவுனியா, பாரதிபுரத்தில் பொதுமக்களுக்கும் வன இலாகா அதிகாரிகளுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

குறித்த பிரதேசத்தில் கடந்த 40 வருடங்களாக வசித்து வரும் மக்களை வன பரிபாலனத் திணைக்களம் அங்கிருந்து வெளியேறுமாறு அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

இதற்கு அந்தப் பிரதேச மக்கள் தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

பாரதிபுரம் கிராம பிரதேசத்தில் வசித்து வரும் இந்த மக்கள் கடந்த 40 வருடங்களுக்கு முன்னர் மலையகத்திலிருந்து இங்கு வந்து குடியேற்றப்பட்டவர்கள்

இவ்வாறாக 240 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் அங்கு வசித்து வருகின்ற நிலையில் அவர்கள் குடியேறியுள்ள பிரதேசம் வனபரிபாலனத் திணைக்களத்துக்கு உரியது என் குறிப்பிட்டு அந்த மக்களை அங்கிருந்து வெளியேறுமாறு வன பரிபாலனத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் பாரதிபுரம் பிரதேசத்தில் 200 ஏக்கர் வனப் பிரதேசம் அழிக்கப்பட்டுப் புத்தளத்தைச் சேர்ந்த 400 குடும்பங்களைக் குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் சிவசக்தி ஆனந்தன் குறிப்பிட்டார்.

> ”பாரதிபுரம் கிராம பிரதேசத்தில் வசித்து வரும் இந்த மக்கள் கடந்த 40 வருடங்களுக்கு முன்னர் மலையகத்திலிருந்து இங்கு வந்து குடியேற்றப் பட்டவர்கள்

அரசினதும் அமைச்சர் ரிசாத் பதியுதீனதும் திட்டத்துக்கு அமைய இந்தப் பக்கச்சார்பான நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக சிவசக்தி ஆனந்தன் குற்றஞ் சுமத்தியுள்ளார். (த)

# அச்செழு படை முகாமுக்கு மிக விரைவில் 'மூடுவிழா'

## 'தட்டு முட்டு சாமான்கள்' கட்டப்படுகின்றன

அச்சுவேலி, ஜூலை 9

அச்செழு இராணுவ முகாமை மூடி விடுவதற்கான ஆயத்த வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

முகாமை மூடுவதற்கு முன்னோடியாக இராணுவத்தினரின் பயன்பாட்டில் இருந்த உபகரணங்கள், தளபாடங்களை அகற்றும் முயற்சியில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் பெரிய முகாமாகவும் பலாலி இராணுவத் தளத்துக்கு அடுத்த நிலையில் பாதுகாப்பு மிகுந்த முகாமாகவும் இருந்து வந்தது அச்செழு இராணுவ முகாம். 240 ஏக்கருக்கு குறையாத விஸ்தீர ணத்தில் 84 குடியிருப்பு இல்லங்களையும் உள்ளடக்கியதாக மாசிவன் – மூன்று சந்தி குறுக்கு வீதியை மத்தியாகக் கொண்டு இந்த முகாம் அமைந்திருந்தது. பல காவல் அரண்களுடன் மிக மிக உயர் நிலையில் அச்செழு முகாம் செயற்பட்டு வந்துள்ளது.

1995 ஆம் ஆண்டில் இருந்து செயற்பட்ட இந்த முகாம் முக்கியமான சிவில் நிர்வாகத் தளமாகவும் விளங்கியதோடு சந்தேக நபர்கள் மற்றும் குற்றவாளிகளின் முக்கியமான விசாரணைத் தளமாகவும் விளங்கியது.

1996 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மக்கள் மீளக்குடியேறிய பின் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் இருந்த போதிலும் சமாதானம் நிலவிய காலப் பகுதியில் அயல் பிரதேசங்களில் மக்கள் குடியேறுவதற்கும் விளைநிலங்களில் பயிர்ச்செய்கை நடவடிக்கை மேற்கொள்வதற்கும் அனுமதிக்கப்பட்டனர்.

இராணுவ முகாம் பிரதேசத்தில் நூற்றுக் கணக்கான ஏக்கர் நிலம் பயிர்ச் செய்கைக்கு அனுமதிக்கப்படாமல் இருந்தது. முகாம் மூடப்படுவதை அடுத்து குறித்த பிரதேச மக்களின் பயன்பாட்டுக்கு உரியதாக வருவதை அடுத்து அச்செழு மக்கள் மத்தியில் மகிழ்ச்சி நிலவுவதை அவதானிக்க முடிந்தது. அச்செழு முகாம் மூடப்பட்டு வருவதை அடுத்து வலி.வடக்கு (தெல்லிப்பழை) பிரதேச செயலகத்தைச் சேர்ந்த பிர தேசத்தில் அச்செழு முகாம் பொருள்கள் ஏற்றி இறக்கப்படு கின்றன. பெரும்பாலும் இந்த மாதம் முடிவதற்கு முன்னர் முகாம் முழுமையாக அப்புறப்படுத்தப்பட்டு குறித்த பிர தேசம் மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டு விடும் எனக் கூறப்படுகின்றது. (ஒ-11)

## ஹாட்லியின் ஆண்டு நிறைவையொட்டி கல்விக் கண்காட்சி, கலை நிகழ்ச்சிகள்

### நாளைமுதல் நான்கு தினங்கள்



வடமராட்சி, ஜூலை 9

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் 175 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி கல்விக் கண்காட்சி, விளை யாட்டுப் போட்டி, கலை நிகழ்வு, மலர் வெளியீடு ஆகிய நிகழ்வுகள் நாளை புதன்கிழமை தொடக்கம் 13 ஆம் திகதி சனிக்கிழமை வரை நான்கு தினங்கள் அதிபர் என்.தெய்வேந்திரராஜா தலைமையில் நடைபெறும்.

முதல் நிகழ்வாக நாளையும் மறுநாளான வியாழக்கிழமையும் கல்விக் கண்காட்சி நடைபெறவுள்ளது. இந்தக் கண்காட்சியை அனைத்துப் பாடசாலை மாணவர்களும் பார்வையிட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கல்விக் கண்காட் சிக்கு பிரதம விருந்தினராக வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் வை.செல்வராஜா கலந்து கொண்டு ஆரம்பித்து வைப்பார்.

மூன்றாம் நாள் நிகழ்வாக 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை விளையாட்டு, கலை நிகழ்வுகள் இடம்பெறும். இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் கலந்து கொண்டு சிறப்பிப்பார்.

இறுதி நாளான நான்காம் நாள் நிகழ்வாக 13 ஆம் திகதி சனிக்கிழமை மலர் வெளியீடும் போட்டிகளில் வெற்றி பெற்றோர்களுக்குப் பரிசளிப்பு நடைபெறும். இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் கலந்து கொள்வார். (ஒ-8)

## வேலணை பிரதேச செயலகத்தில் நேற்று நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், ஜூலை 9

'பவ்ரல்' அமைப்பின் நடமாடும் சேவை நேற்றைய தினம் வேலணை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. இன்று புங்குடுதீவு சர்வோதய நிறுவனத்தில் இடம்பெறும். நேற்றைய நடமாடும் சேவையில் அடையாள அட்டைகளுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட அதே சமயம், காலம் தாழ்ந்த பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுகள் பொலிஸ் அறிக்கைகள் வழங்குதல் உட்பட முக்கிய தேவைகள் குறித்த பதிவுகள் இதன்போது இடம்பெற்றன.



இந்த நடமாடும் சேவையில் வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன், பிரதேச சபைத் தலைவர் எஸ்.சிவராசா, 'பவ்ரல்' அமைப்பின் திட்டப் பணிப்பாளர் என்.ஸ்ரீதரன், வடபகுதிக்கான இணைப்பாளர் உட்பட திணைக்களங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள், சமரதான நீதிவான்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

வேலணை பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த எண்ணூறுக்கும் அதிகமானவர்கள் இதில் கலந்து கொண் டு தங்களுக்கான தேவைகள் குறித்த விவரங்களை வழங்கினார்கள். (ஒ-7)

## முகாமைத்துவ உதவியாளர் நேர்முகத் தேர்வு நாளை

யாழ்ப்பாணம், ஜூலை 9

மாகாண முகாமைத்துவ உதவியாளர் சேவை வகுப்பு III இல் ஆள்சேர்ப்புச் செய்வதற்கான நேர்முகத்தேர்வு நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

உரியவர்கள் ஆவணங்களுடன் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலு வலகங் களுக்கு வருமாறு வடமா காண பிரதி பிரதம செயலாளர் எஸ்.துரைராஜா கேட்டுள் ளார்.திறந்த போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைய 280 பேர் நேர்முகத் தேர்வுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தெரிவு செய்யப்பட்டவர்கள் புகைப்பட பிரதியுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், திருமணமான பெண்களாயின் புகைப்பட பிரதியுடன் விவாகச் சான்றிதழ், புகைப்படப் பிரதியுடன் தேசிய அடையாள அட்டை, புகைப்பட பிரதியுடன் ஜி.சீ.ஈ. சாதாரண தர மற்றும் உயர்தர பரீட்சை பெறுபேற்று சான்றிதழ், கிராம அலுவலரால் வழங்கப்பட்டு பிரதேச செயலரால் உறுதிப்படுத்தப்பட்ட நற் சான்றிதழ் அல்லது வதிவிடச் சான்றிதழ் என்பவற்றை சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் கடந்த ஏப்ரல் 12 ஆம் திகதிக்கு முன்னர் உள்ள 6 வருடங்களில் ஆகக் குறைந் தது 3 வருடங்களாயினும் வடக்குமாகாணத்தில் தொடர்ச்சியாக வசித்தமை உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

மாற்றுத் திறனாளியாயின் அது பற்றிய மருத்துவச் சான்றிதழ், வாக்காளர் இடாப்பின் மூலப்பிரதி, குடும்ப அட்டை மூலப் பிரதியுடன் நேர்முகத்தேர்வுக்கு வருகை தருமாறு கோரப்படுகின்றனர்.

யாழ்ப்பாண விண்ணப்பதாரிகள் யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்துக்கு, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைவிண்ணப்பதாரிகள் முல்லைத்தீவு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்துக்கும், வவுனியா, மன்னார் விண்ணப்பதாரிகள் மன்னார் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்துக்கும் வருகை தருமாறு கோரப்பட்டுள்ளது. (ஐ-4)

## நெடுந்தீவுக்குச் சென்ற பஸ் திருத்துநரை தீண்டியது பாம்பு

யாழ்ப்பாணம், ஜூலை 9

நெடுந்தீவு உள்ளூர் போக்குவரத்தில் உள்ள பஸ்கள் பழுதடைந்ததை அடுத்து அவற்றைத் திருத்தியமைக்கவென யாழ்ப்பாணத்தில் இருந்து வருகை தந்த இயந்திர திருத்துநர் பாம்புக் கடிக்கு இலக்கானார்.

நேற்று திங்கட்கிழமை பஸ்ஸின் திருத்த வேலைகளை மேற்கொண்டிருந்த சமயம் பாம்பால் கடியுண்டார்.

சுருட்டைப் பாம்பு இவரைத் தீண்டியதை அடுத்து கடியுண்ட எஸ்.ஸ்ரீரங்கநாதன் எனப்படும் இயந்திர திருத்துநர் உடனடியாக நெடுந்தீவு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதை அடுத்து அம்புலன்ஸ் மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (வ-7)

## வடக்கில் மோசமாகப் பாதிக்கப்படும் கருத்துச் சுதந்திரம்

# சர்வதேச கண்காணிப்பாளரை உடன் கடமையில் நிறுத்தவும்

## வலியுறுத்துகிறது 'கபே'

கொழும்பு, ஜூலை 9

வடமாகாணத்தில் போருக்குப் பின்னர் இராணுவ மயமாக்கல் அதிகரித்துக் காணப்படுவதாலும், அரசியல் உரிமையும், கருத்துச் சுதந்திரமும் மோசமாக பாதிக்கப்பட்டிருப்பதாலும், சர்வதேச கண்காணிப்பாளர்களை வடமாகாணத்தில் இப்போதே கடமையில் ஈடுபடுத்த வேண்டும் என்று 'கபே' அமைப்பின் நிர்வாக இயக்குநர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்தார்.

வடமாகாண சபைத் தேர்தலின் போது பொதுநலவாய அமைப்பிலிருந்து சர்வதேச கண்காணிப்பாளர்களை அழைக்க தேர்தல்கள் திணைக்களம் தயாராகவுள்ளது.

இது தொடர்பில் தேர்தலில் போட்டியிடவுள்ள அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுடன் பேச்சு நடத்தி இணக்கம் காண நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் எம். எம்.மொகமட் தெரிவித்துள்ளார்.

இருப்பினும், பொதுநல வாய அமைப்பு அல்லது ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து சர்வதேச தேர்தல் கண் காணிப்பாளர்களை வர வழைக்க தேர்தல்கள் ஆணையாளரோ, அரசோ இப்போதே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான சுயாதீன அமைப்பான கபே தெரிவித்துள்ளது.

கால தாமதமாகி, சர்வதேச கண்காணிப்பாளர்கள் வருகை தருவது மோசடிகள் அதிகரிக்கவே வழிவகுக்கும் என்று அந்த அமைப்பின் நிர்வாக இயக்குநர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்தார்.

வடமாகாணத்தில் போருக்குப் பின்னர் இராணுவ மயமாக்கல் அதிகளவில் காணப்படுவதாலும் அங்கு அரசியல் உரிமைகளும், கருத்துச் சுதந்திரமும் மோசமாக பாதிக்கப்பட்டிருப்பதாலும் சர்வதேச கண்காணிப்பாளர்களை முன்கூட்டியே கடமையில் ஈடுபடுத்த வேண்டியது அவசியம் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (வ-5)

## தென்மராட்சி பாடசாலைகளில் நடமாடும் பற்சிகிச்சை

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவும் பாடசாலை பற்சிகிச்சைப் பிரிவும் இணைந்து தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் நடமாடும் பற்சிகிச்சை சேவையை ஆரம்பித்துள்ளன.

முதல் கட்டமாக நேற்று தென்மராட்சி தெற்குப் பிரதேச பாடசாலைகளுக்கான நடமாடும் பற்சிகிச்சை வாரம் நாவற்குழி மகாவித்தியாலயத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த வாரத்தில் நாவற்குழி, மறவன்புலோ, தனங்களப்பு, கோவிலாக் கண்டி, கைதடி–நாவற்குழி ஆகிய பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் பொது சுகாதார பரிசோதகர்களால் நடத்தப்பட்ட பற்சிகிச்சை முகாம்களில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு பாடசாலை பற்சிகிச்சை பிரிவினரால் பற்சிகிச்சை அளிக்கப்படவுள்ளது. எதிர்வரும் 15 ஆம் திகதி தொடக்கம் 19 ஆம் திகதி வரை கைதடிப் பிரதேச பாடசாலைகளில் பற்சிகிச்சை வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## 13 வருடங்களின் பின் நாளைமுதல் பூசைகள்

தென்மராட்சி, ஜூலை 9

பளைவேம்பொடுகேணி நவுணவெளி அம்பாள் ஆல யத்தில் 13 வருடங்களின் பின்னர் நாளை புதன்கிழமை நித்திய பூஜைகள் ஆரம்ப மாகும். பிராயச்சித்த கிரி யைகள் இன்று மாலை ஆரம்பமாகும்.

2000 ஆம் ஆண்டு மார்ச் 26 ஆம் திகதி இரவு இடம்பெற்ற போர் இடர்களால் இடம் பெயர்ந்த வேம்பொடு கேணி பிரிவு மக்களில் ஒரு பகுதியினர் கடந்த மாதம் மீளக் குடிய மர அனுமதிக்கப்பட்டனர்.

போர்வேளையில் சேதமடைந்து காணப்பட்ட ஆலய கட்டடம் மற்றும் சுற்றாடல் பகுதி மீளக் குடியமர்ந்த மக்களால் புனரமைக்கப்பட்டு நித்திய பூஜைக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ஒ-9)

## கண்ணீர் அஞ்சலி



சோமசுந்தரம் சிறீக்காந்தன் (பத்தர்) நேற்று முன்தினம் (07.07.2013) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது நண்பர் சோமசுந்தரம் சிறீக்காந்தனது பிரிவால் துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

அதிகாரி செல்லமுத்து வீதி, நவாலி.

**நண்பர்கள் (நதியா நகைமாடம்)**
**கஜன், அஜந்தன், விக்கி, கரன்**

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் பிரதி அதிபர் பாலபவான் அவர்களின் பாசமிகு மாமனார்

### சுப்பிரமணியம்

(ஓய்வு பெற்ற பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், மாவட்டச் செயலகம், மன்னார்)

நேற்றுக் காலமானதையிட்டு அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு யாழ். மத்திய கல்லூரிச் சமூகம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.

(சி/10292) **ஆசிரியர் வட்டம், யா/யாழ். மத்திய கல்லூரி.**

# நேற்று மட்டும் மூன்று பேர் கைதடி முதியோர் இல்லத்தில்

யாழ்ப்பாணம், ஜூலை 9

கைதடி அரச முதியோர் இல்லத்தில் நேற்று திங்கட்கிழமை மட்டும் மூன்று வயோதிபர்கள் கைவிடப்பட்ட நிலையில் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்த வயோதிபர்களில் கணவன், மனைவி அடங்குவர் என இல்லப் பொறுப்பதிகாரி கூறினார்.

நுணாவிலைச் சேர்ந்த பொன்னம்பலம் வீரசிங்கம் (வயது-80) அவரது மனைவி வீரசிங்கம் இராஜேஸ் வரி (வயது-68) ஆகிய இருவரும் எவரது துணையும் இன்றி நோய் வாய்ப்பட்ட நிலையில் கைதடி முதியோர் இல்லத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

பிரதேச கிராம உத்தியோகத்தர் ரி.தயானந்தி மற்றும் சமுகசேவைகள் உத்தியோகத்தர் வி.சண்முகநாதன் ஆகியோரின் உதவியுடன் இவர்கள் இல்லத்தில் இணைக்கப்பட்டனர்.

அதேசமயம் சங்கானையைச் சேர்ந்த வேலாயுதம் பூமணிதேவி (வயது-73) என்ற வயோதிப மாதுவும் யாரும் இல்லாத நிலையில் இல்லத்தில் இணைக்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-17)

## வீடு வீடாகச் சென்று பனம் நாற்றுக்கள் விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூலை 9

யாழ்.குடாநாட்டில் இம்முறை போகத்துக்கு பனம் நாற்றுக்கள் வீடுவீடாகச் சென்றே மக்களுக்கு விநியோகிக்கப்பட்டு நடுகை செய்யப்படும்.

இந்த புதிய நடைமுறையின் கீழ் குடாநாட்டில் மட்டும் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நாற்றுக்கள் நடுகை செய்யப்படும் என்று பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சிவரெத்தினம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: கடந்த போகங்களில் பனம் விதைகள் மற் றும் நாற்றுக்கள் என்பன நடுகை செய் யப்பட்டன. இவற்றை உரிய முறையில் பராமரிப்பதற்கு அமைப்புக்கள் எவையும் முன்வரவில்லை. எனவே இனிவரும் காலங்களில் நடுகை செய்யப்படும் பனம் நாற்றுக்களை பாதுகாப் பதற்கு புதிய திட்டம் ஒன்றை நடைமுறைப் படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பனம் நாற்றுக்களை மக்களுக்கு விநியோகித்து அவர்கள் தமது வீட்டு வளவுகள் மற்றும் வெற்றுக் காணிகளில் நடுகை செய்து பராமரிக்க வேண்டும்-என்றார். (வ-17)

## தொழில்நுட்பத்துறை; மாணவர் அனுமதி

தென்மராட்சி, ஜூலை 9

வட்டு இந்துக் கல்லூரியில் ஜி.சீ.ஈ. உயர் தரத்தில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட தொழில்நுட்பத்துறை எதிர்வரும் 15 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது. இத்துறையில் பயில விருப்பும் ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் சித்தியடைந்த மாணவர்கள் மற்றும் புதிதாக இணைந்து கொள்ள விரும்பும் அயல் பாடசாலை மாணவர்களும் உரிய ஆவணங்களுடன் வருகை தந்து அனுமதி யைப் பெற்றுக் கொள்ளலாம் என்று கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார். (ஒ)

## மரண அறிவித்தல்

### திருமதி சின்னத்துரை செல்லம்மா (தங்கம்மா)



உடுவிலைப் பிறப்பிடமாகவும் பாரதி வீதி, பத்தமேனி அச்சுவேலியை வசிப்பிடமாகவும் தற்போது உடுவிலில் வசித்து வந்தவருமான திருமதி.சின்னத்துரை செல்லம்மா (தங்கம்மா) கடந்த 05.07.2013 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி- சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஆறுமுகத்தின் அன்பு சகோதரியும் காலஞ்சென்ற மாணிக்கம் தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற மாணிக்கம் சின்னத்துரையின் பாசமிகு மனைவியும் சுகுணாதேவி (இளைப்பாறிய ஆசிரியர்), அபிமன்னன், சிறிரஞ்சினிதேவி, சிறிரசிகலாதேவி (பிரான்ஸ்), சிறிகிரிதரன் (பிரான்ஸ்), சிறிகுமார் (ஜேர்மனி), சிறிசுரேந்திரன், சிறிமுரளிதரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும் மகேஸ்வரன் (இளைப்பாறிய சிறைச்சாலை உத்தியோகத்தர்), காலஞ்சென்ற றஞ்சிதமலர் (தாதி, மாவட்ட வைத்தியசாலை, தெல்லிப்பளை), பாலகுருநாதன் (இளைப்பாறிய பாதுகாப்பு உத்தியோகத்தர், காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத் தாபனம்), சிறிரஞ்சினி (பிரான்ஸ்), சுஜாதா (ஜேர்மனி), விமலாவதி, சுகந்தி (ஜேர்மனி) ஆகியோரின் மாமியும் சபேசன் (சிறைச்சாலை உத்தியோகத்தர்), ஜான்சி, மயூரன் (மேல் நீதிமன்ற மொழிபெயர்ப்பாளர்), நிறோஜினி, நர்மதா, பத்மகாந்தன் (ஆசிரியர்), தட்சாயினி (ஆசிரியர்), டானியல் சுரேன், விஸ்ணுஜன் (மாணவன்), சக்திநாதன் (4ஆம் வருட மருத்துவ மாணவன்- பெலாராப்), டாக்டர்.சக்திகா (ஆயுர்வேத வைத்தியர்), ஜகசக்தி, ஹரிசக்தி (மாணவன்), செந்தூரன் (பிரான்ஸ்), செலின் (பிரான்ஸ்), சரண் (பிரான்ஸ்), மீரா (ஜேர்மனி), செரின் (ஜேர்மனி), சாருஜன் (ஜேர்மனி), பிரதீபா (பிரான்ஸ்), தினேஸ் (பிரான்ஸ்), காலஞ்சென்ற சரண்ஜன், கீர்த்திகா, துசியந்தி (மாணவி), சுஜீவா (ஜேர்மனி), எரிக் (ஜேர்மனி), சுஜானு (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் விதுஷன் (மாணவன்), சரவணா, அஸ்மிதா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10.07.2013 புதன்கிழமை நடைபெற்று பூதவுடல் பூவோடை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

(30719)

## மரண அறிவித்தல்

### இராசிங்கர் சுப்பிரமணியம்

(ஓய்வு பெற்ற பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், மாவட்டச் செயலகம், மன்னார்)



தையிட்டிப்புலம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் புத்தூரை வசிப்பிடமாகவும் கொண்ட இராசிங்கர் சுப்பிரமணியம் நேற்று 08.07.2013 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசிங்கர்-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் திருமதி.பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் பவானி, புஸ்பதேவி (பிராந்திய கணக்கீட்டு அலுவலகம், தபால் திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் லோகநாதன் (மின்சார சபை, சுன்னாகம்), பாலபவான் (மத்திய கல்லூரி, பிரதி அதிபர், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனும் கோகுலன், சாகித்தியன், தீபிகா, கஜானி, பிரார்த்தனா, பிரஷாந், சாஜிரூபன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.07.2013) செவ்வாய்க்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று புத்தூர் கிந்துசிட்டி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(30726) **தகவல்: குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

திருமதி

### சர்வலோகநாயகி கணபதிப்பிள்ளை



சுதுமலையை வாழ்விடமாகவும் கொழும்பில் வசித்தவருமாகிய திருமதி சர்வலோகநாயகி கணபதிப்பிள்ளை நேற்று(08.07.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தையா (மலாயன் பென்சனியர்)-செல்லம்மா தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்ற சி.கணபதிப்பிள்ளையின்(இளைப்பாறிய ஆசிரியர்), அன்பு மனைவியும், திரிபுரநாயகி, சிறிதங்கநாயகி, சிறிஸ்காந்தன், சிறிகணநாதன் ஆகியோரின் அன்புத் தாயும், சிவலோகநாதன், ஜெகதீஸ்வரன், சாந்தினி, சர்வாம்பாள் ஆகியோரின் மாமியும், கோகுலன், யதுகுலன், ஐயந்தன், தினேஸ், சிந்துயா, சஞ்சீவன், வைஸ்ணவி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (09.07.2013) செவ்வாக்கிழமை காலை 08.00மணி தொடக்கம் பி.ப.1.00மணி வரை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு பி.ப. 2.00மணியளவில் தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**சி.சிவலோகநாதன்**
(மருமகன்)

**35A, இராஜசிங்க வீதி, கொழும்பு-06**
**TEL: 0714185107**

## மரண அறிவித்தல்



### திருமதி மேகலா மேர்சி சரவணமுத்து

யாழ்ப்பாணம் - அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட மேகலா மேர்சி சரவணமுத்து கடந்த (01.07.2013) திங்கட்கிழமை கணவர், பிள்ளைகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் மீளாத்துன்பத்தில் ஆழ்த்தி விட்டு கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற V.W. சிதம்பரப்பிள்ளை (இளைப்பாறிய மக்கள் வங்கி முகாமையாளர்)-திருமதி E.I. சிதம்பரப்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியை) தம்பதியரின் அருமைப் புதல்வியும், காலஞ்சென்ற Dr.R. சரவணமுத்து - திருமதி D. சரவணமுத்து (கொழும்பு) தம்பதியரின் அன்பு மருமகளும், வேதாரணியம் இரட்ணஜோதியின் (ராசா) அன்பு மனைவியும், சாமுவேல் ஈனோக், தலீத்தா ஆகியோரின் பாசமிகு தாயும், இன்பகுமா (UK), ஜீவகரன் (UK), றூபி, Dr. கௌசலா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை எதிர்வரும் 11.07.2013 வியாழக்கிழமை பிற்பகல் ஒருமணிக்கு பரி. அன்ட் றூஸ் தேவாலயம் (Harrow-HA2. 9ER. UK) இல் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**இன்பகுமார் (சகோதரன்)**
Tel: + 44 (O) 208 518 4608
email: INPAKUMAR@AOL.COM.

(சி/10311) (45.6.3)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்

### கதிர்காமு இளையதம்பி

இன்பத்தில் 12★05★1932
துன்பத்தில் 11★06★2013

அன்பு முகம் கொண்டு ஆறுதல்
பொழிந்து இவ்வுலக வாழ்வில்
தூண் என துணை நின்ற இதயத்
தெய்வமே – நீர்
இல்லாமல் போகவில்லை
இறையோடு இணைந்து விட்டீர் – எம்
நினைவோடு கலந்து விட்டீர்

கடந்த 11.06.2013 அமரத்துவமடைந்த எமது குடும்ப விளக்கு கதிர்காமு இளையதம்பியின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (09.07.2013) செவ்வாய்க்கிழமை பி.ப 6.00 மணியளவில் வேம்படி உடுத்துறை சமுத்திரத்திலும் நடைபெற்று எதிர்வரும் 11.07.2013 வியாழக்கிழமை அன்னாரின் வீட்டில் நடைபெறும் வீட்டுக்கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத்தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு பலவழிகளிலும் உதவி புரிந்தோருக்கும், புதுக்குடியிருப்பு விசுவமடு, கிளிநொச்சி வர்த்தக சங்கத்தினருக்கும் மற்றும் நேரில் வந்தும் தொலைபேசியிலும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர் வளையங்கள், பதாதைகள், கண்ணீர்அஞ்சலிப் பிரசுரம் மூலம் துயர் பகிர்ந்தோருக்கும் குறிப்பாக கிளிநொச்சி வைத்தியசாலை மருத்துவர், தாதியர், ஊழியர்களுக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

இந்த அழைப்பை நேரில் வந்து தரமுடியாமைக்கு வருந்துகின்றோம். இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அன்பர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உம் ஆன்ம ஈடேற்றத்துக்காக பிரார்த்திக்கின்றோம்.

202/1, விசுவமடு மேற்கு, விசுவமடு. T.P 0770858197 **குடும்பத்தினர்.**

தனியார் பாடசாலை நிர்வாகி

## பணத்துடன் தலைமறைவு

தென்மராட்சி ஜூலை 9
சாவகச்சேரி நகரப் பகுதியில் இயங்கி வந்த ஆங்கில தனியார் பாடசாலையின் நிர்வாகி பெருந்தொகைப் பணத்துடன் தலைமறைவானார்.
அந்தப் பாடசாலையில் கற்ற 100இற்கும் மேற்பட்ட பிள்ளைகளின் கல்வி நிலை குறித்து பெற்றோர் கவலை தெரிவித்தனர்.
வங்கிகளில் கடன் மற்றும் பெற்றோரிடமிருந்து பெற்ற பெருந்தொகைப் பணம் ஆகியவற்றுடன் நிர்வாகி தலைமறைவாகி விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.
தனியார் கல்வி பாடசாலைகள் பதிவு செய்யப்படல் வேண்டுமென சாவகச்சேரி நகர சபையினால் அறிவிக்கப்பட்டது. இதனை அடுத்து உரிய சான்றிதழ்கள் பெற்று வருவதாகக் கூறி நிர்வாகி கடந்த ஜூன் மாதம் கொழும்பு சென்றவர் தான் இன்னமும் திரும்பவில்லை.
இவருடன் தொடர்பு கொள்ள முடியாத நிலைகாணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. பணம் செலுத்தியே மாணவர்களை பெற்றோர்கள் இப்பாடசாலையில் சேர்த்துள்ளனர். அங்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு மாதச் சம்பளம் வழங்கப்படவில்லை.
இதனால் ஆசிரியர்கள் பாடசாலையில் இருந்து விலகினால் மாணவர்களின் கல்வி இடைநடுவில் கைவிட வேண்டிய நிலைக்கு தள்ளப்படும் எனவும்.
வேறு பாடசாலைகளில் மாணவர்களை இணைக்க முடியாத நிலையும் ஏற்படலாமென பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.
இதேவேளை நிர்வாகிக்கு கடன் கொடுத்த வங்கிகள் உட்பட பலர் பாடசாலைக்கு வந்து செல்கின்றனர்.
நிர்வாகி வெளிநாடொன்றுக்குச் சென்றுள்ளதாகவும் இதனை உறுதிப்படுத்த முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். (எ-9)

வடக்கில் போர் பாதித்த மக்களுக்கு

# கொழும்பு தெற்கு றோட்டரிக் கழகம் வழங்கவிருக்கும் உதவிகள்



கொழும்பு, ஜூலை 9
வடபகுதியில் குறிப்பாகப் போரால் பாதிக்கப்பட்ட வன்னி வாழ் மக்களுக்குக் கொழும்பு தெற்கு கோட்டமட்ட றோட்டரிக்கழகம் வெளிநாடுகளில் உள்ள பல இணைக் கழகங்களின் அனுசரணையுடன் பல்வேறு வாழ்வாதார பணிகளை செய்து வழங்கத் தீர்மானித்துள்ளது.
இந்தத் தகவலை கொழும்பு தெற்கு கோட்டத்தின் றோட்டரிக் கழக புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள ட்ருஷன் ஹன்டி தமக்களிக்கப்பட்ட வரவேற்பு நிகழ்ச்சியில் தெரிவித்தார்.
கொழும்பு கலதாரி ஹோட்டலில் இந்த நிகழ்வு இடம் பெற்றது. கொழும்பு தெற்கு கோட்ட றோட்டரிக் கழகத்தின் 36 ஆவது தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள ட்ருஷன் ஹன்டி கழக உறுப்பினர்கள் தம் மீது வைத்துள்ள நம்பிக்கைக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு தமது கழகம் போர் பாதித்த பகுதிகளிலும் ஏனைய பகுதிகளிலும் மேற்கொள்ளவிருக்கும் மனிதாபிமான நடவடிக்கைகளை விளக்குகையில் கூறியதாவது:-
யாழ்ப்பாணத்தில் சங்கானைப் பகுதியில் வேலையற்று இருக்கும் இளம் பெண்களுக்கு தொழில் வாய்ப்புக்களை பெறுவதற்கான பயிற்சிகளை மேற்கு அவுஸ்திரேலிய பிரெஷ்வோட்டர் பே றோட்டரி கழக ஆதரவுடன் வழங்கத் திட்டமிட்டுள்ளது.
அதுபோலவே மலேஷியாவின் கோலாலம்பூர் பெரு நகர கழகத்தின் ஆதரவில் வன்னிப் பகுதிகளில் குளங்கள் அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. மாற்றுத் திறனாளிகளால் இயக்கி பயன்படுத்தக் கூடிய திருத்தம் செய்யப்பட்ட முச்சக்கரவண்டிகள் வழங்கப்படும். இதற்குச் சர்வதேச மருத்துவ மற்றும் சுகாதாரஸ்தாபனம்அனுசரணை வழங்கும். கனடாவிலுள்ள பில்ட் சேஞ் நிறுவனத்தின் அனுசரணையில் வடக்கில் போர் பாதித்த மக்களுக்கு கழிவறைகளையும் கிணறுகளையும் மேம்படுத்துவதற்கு உதவிகள் வழங்கப்படும்.
ஆஸ்திரேலியாவின் வட மேல் வேல்ஸ் மாவட்ட பேர் வூட் கழகம் கிளிநொச்சி மாவட்டத்தில் ஜெயபுரம் மத்தியில் கல்வி நிலையம் அமைக்க அனுசரணை வழங்கியுள்ளமையையும் அவர் சுட்டிக்காட்டினார். (ப)

### சாவகச்சேரி ஆலய விக்கிரகம், தகடுகள் அபகரிப்பு

தென்மராட்சி ஜூலை 9
சாவகச்சேரிநுணாவில் மேற்கு கொல்லங்கிராய் பிள்ளையார் ஆலயம் கடந்த வெள்ளிக்கிழமை இரவுதிருடர்களின் கைவரிசைக்கு இலக்கானது.
ஆலயத்தினுள் நுழைந்த திருடர்கள் ஆலயத்தின் விக்கிரகங்களை அப்புறப்படுத்தி அங்கிருந்த தங்கத் தகடுகளையும், 100 வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்த வெண்கலத்திலான விநாயகர் விக்கிரகத்தையும், பித்தளைப் பொருள்களையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.
திருட்டுச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஒ-9)

ஆலயங்களில் திருவிழாவின் போது

## ஹெலி மூலம் மலர் தூவல் ஆகமங்களுக்கு முரணானது

சமயப் பெரியோர் கண்டனம்

யாழ்ப்பாணம், ஜூலை 8
இந்து ஆலயங்களில் இடம்பெறும் திருவிழாக் காலத்தில் ஹெலி மூலம் சுவாமிக்கு மலர் தூவி வழிபாடுகள் மேற்கொள்வது சைவ ஆகமங்களுக்கு முரணானது. எனவே இதனைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சமயப் பெரியார்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
ஆலயங்களில் பாரம்பரிய முறைகளின் படி சுவாமிக்கு மலர் தூவி வணக்கம் செலுத்தும் வழிபாடுகளில் தற்போது ஹெலிகள் ஊடாக சுவாமிக்கு மலர் தூவப்படுகிறது. இந்தச் செயற்பாடு சைவ ஆகம முறைகளுக்கு முரணாகவுள்ளது.
எனவே இதனைத் தவிர்த்து ஆகம விதி முறைமைகளுக்கு அமைவாக இந்து ஆலயங்களில் பூரியா பைகளில் மலர்களைக் கொண்டு வந்து சுவாமிக்கு மலர் தூவி



வழிபாடு செய்யலாம்.
ஆலய நிர்வாகத்தினர் இதனைப் பின்பற்றுவதற்கான விடயங்களை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக இந்து சமயத்தின் பாரம்பரியங்களைப் பாதுகாக்கலாம் எனவும் தெரிவித்துள்ளனர். (வ-14-7)

## கோப்பாய் லயன்ஸ் கழக 29 ஆவது பதவியேற்பு





வலி.வடக்கு, ஜூலை 9
கோப்பாய் லயன்ஸ் கழகத்தின் 29 ஆவது பதவியேற்பு நிகழ்வு சனிக்கிழமை இரவு கோண்டாவில் இராஜேஸ்வரி மண்டபத்தில் வைத்தியகலாநிதி லயன் எஸ்.குணதாசன் தலைமையில் இடம்பெற்றது.
இந்த நிகழ்வில் 2013,2014 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக உறுப்பினர்களுக்கான சத்தியப் பிரமாணத்தையும் பதவியேற்பையும் கடந்தகால மாவட்ட ஆளுநர் லயன் பிரியந்த பெர்னான்டோ நிகழ்த்தி வைத்தார்.
கோப்பாய் பிரதேச செயலரால் பரிந்துரை செய்யப்பட்ட இருபாலையைச் சேர்ந்த வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட குடும்பம் ஒன்றுக்கு சமூக சேவைத் திட்டத்தின் கீழ் வீட்டுக் கூரை போடுவதற்கான பண உதவி செய்யப்பட்டதுடன் உடுபுடைவையும் வழங்கப்பட்டன.
கல்வி அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்கள் 30 பேருக்கான சீருடைகள் மற்றும் முன்பள்ளி சிறார்களுக்கான சீருடைகள் வழங்கல் என்பவற்றுடன் செங்குந்தா இந்துக் கல்லூரிக்கு வேண்டிய காகிதாதிகள் வழங்கப்பட்டன. சுற்றுச்சூழல் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 40 குடும்பங்களுக்குத் தலா ஐந்து தென்னம்பிள்ளைகள் வழங்கப்பட்டன.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் மாவட்ட ஆளுநர் லயன் பிரியந்த பெர்னான்டோலயன் சீமாட்டி ஆஷா ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக வடபிராந்திய கபினற்றின் பிரதி செயலாளர் லயன் ஆர்.ஜெயபாலன், வட பிராந்திய கபினற்றின் பொருளாளர் லயன் ரி.அன்பானந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். (வ-86)

## சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் விஞ்ஞான வாரம் நேற்று ஆரம்பம்

தென்மராட்சி, ஜூலை 9
சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் விஞ்ஞான வாரம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.
விஞ்ஞான வாரத்தின் நிகழ்ச்சிகளை வடமாகாண கல்வி அமைச்சின் செயலர் சி.சத்தியசீலன், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் ஆகியோர் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர்.
முதல் நிகழ்வாக கல்லூரி விஞ்ஞானமன்றத்தின் ஏற்பாட்டிலான விஞ்ஞானக் கண்காட்சி கூடத்தினை விருந்தினர்கள் கூட்டாக நாடா வெட்டி திறந்து வைத்தனர்.
இன்று மாலை 4.30 மணி வரை கண்காட்சி இடம்பெறுமெனவும், கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளின்



மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் பார்வையிடவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.
விஞ்ஞான வாரத்தின் மூன்றாம் நாள் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய விஞ்ஞான பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி பீ.கஜபதி கலந்து கொள்வார்.
நான்காம் நாளான நாளை மறுதினம் நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக பௌதிகவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பீ.ரவிராஜ் Nono Technology என்னும் தலைப்பில் கருத்துரை வழங்குவார்.
அன்றையநிகழ்வுக்குமுதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய கணித பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ.கதிர்காமநாதனும், சிறப்பு விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் செல்வி அ.நிருபராணியும் கலந்து கொள்வர்.
இறுதி நாளான எதிர்வரும் 12 ஆம் திகதி கல்லூரி விஞ்ஞான மன்றத்தினர் " அறிவியல் ஊற்று " நூல் வெளியீடு இடம்பெறும். நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண விஞ்ஞான பாட பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே.ர.சிவனருள்ராஜாவும், கௌரவவிருந்தினர்களாகயாழ். பல்கலைக்கழக இரசாயன வியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஆர்.ஸ்ரீகரன், தென்மராட்சி கல்வி வலய பிரதி கல்விப்பணிப்பாளர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி ஆகியோரும் கலந்து கொள்வர். (வ-9)

## சேதுசமுத்திர திட்டம் கட்டாயம் நிறைவேறும்



புதுடில்லி, ஜுலை 9
சேது சமுத்திர திட்டத்தை நிறைவேற்றுவதில் மத்திய அரசு உறுதியாக உள்ளது என்று மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன் தெரிவித்தார்.
சென்னையில் காங்கிரஸ் தலைமைச் செயலகமான சத்திய மூர்த்தி பவனில் செய்தியா ளர்களை சந்தித்த அவர், சேது சமுத்திரத்திட்டம் தொடர்பான வழக்குகள் முடிவுக்கு வந்த பின்னர் திட்டம் விரைவுப் படுத்தப்படும் என்றும், உச்ச நீதிமன்றம் நல்ல தீர்ப்பைத் தரும் என்றும் தெரிவித்தார். (ற)



## புத்தகயா தொடர் குண்டு வெடிப்புகள்; விசாரணைகளில் முன்னேற்றமில்லை

புத்தகயா, ஜுலை 9
பீகார் மாநிலம் புத்தகயவில் இடம்பெற்ற குண்டுவெடிப் புச் சம்பங்கள் தொடர்பாக பாதுகாப்புக் கமராக்களில் பதிவாகியுள்ள காட்சிகளில் குற்றவாளிகள் தொடர்பில் எது வித தடயங்களும் கிடைக்க வில்லை என்று தெரியவருகின்றது.
நேற்றுமுன்தினம் அதிகாலை புத்த கயாவில் உள்ள மகா போதி ஆலயத்தில் தொடர் குண்டுவெடிப்பு சம்பவங்கள் இடம்பெற்றன. அது தொடர்பாக தற்போது இந்திய தேசிய புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். எனினும் குண்டுவெடிப்பு சம்பவம் தொடர்பான விசாரணையில் எவ்வித முன் னேற்றமும் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ற)

## கட்டடம் இடிந்து வீழ்ந்தது ஐதராபாத்தில் 10 பேர் சாவு

ஐதராபாத், ஜுலை 9
ஆந்திர மாநிலம் செகந்திராபாத்தில் நேற்றுக் காலை 3 மாடி ஹோட்டல் ஒன்று இடிந்து விழுந்ததில் 10 பேர் உயிரிழந்தனர்.
மூன்று மாடிக் கட்டடத்தில் இயங்கி வந்த இந்த ஹோட்டல் கட்டிடம் 80 ஆண்டுகள் பழமையானது என்று கூறப்படுகிறது. அந்தக் கட்டடம் நேற்றுக் காலை திடீரென இடிந்து விழுந்தது. சம்பவ இடத்துக்கு விரைந்த மீட்புக் குழுவினர் 11 பேரை படுகாயங்களுடன் மீட்டுள்ளதுடன், 10 பேரின் சடலங்களை மீட்டுள்ளனர்.
இடிபாடுகளில் 20 பேருக்கும் அதிகமானோர் சிக்கியிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. (ற)

## நீதிமன்றில் முன்னிலையாக விஜயகாந்துக்கு விலக்கு


சென்னை, ஜுலை 9
முதல்வர் ஜெயலலிதா தொடர்ந்த அவதூறு வழக்கில் நீதிமன்றத்தில் முன்னிலையாவதற்கு தே.மு.தி.க தலைவர் விஜயகாந்த்துக்கு விலக்கு அளித்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.
தே.மு.தி.க. தலைவர் விஜய காந்த் மீது திருப்பூர் நீதி மன்றத்தில் முதல்வர் ஜெய லலிதா தரப்பில் அவதூறு வழக்கு தொடரப்பட்டது.
இந்த நிலையில், சட்ட விரோ தமாக தன் மீது அவதூறு வழக்கு தொடரப்பட்டுள்ளதா கவும், இந்த வழக்கில் நீதி மன்றத்தில் முன்னிலையா வதற்கு விலக்க அளிக்க வேண்டும் என்றும் விஜய காந்த், சென்னை உயர் நீதி மன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தார்.
இந்த மனு நேற்று நீதி மன்றத்தில் விசாரணைக்கு வந்தது. அப்போது, விசார ணைகளின் பின்னர் நீதி மன்றத்தில் முன்னிலையா வதற்கு விஜயகாந்த்துக்கு விலக்கு அளித்த நீதிபதிகள், இது தொடர்பாக பதில் அளிக் கும்படி தமிழக அரசுக்கு உத் தரவிட்டனர். (ற)

## தேர்தலுக்குத் தயார்
### பா.ஜ.க. தெரிவிப்பு

புதுடில்லி, ஜுலை 9
எந்த நேரத்தில் தேர்தல் அறி விக்கப்பட்டாலும், அதை சந்திக்க தயாராக உள்ளோம் என பா.ஜ.க. தெரிவித்துள் ளது. பா.ஜ.க. நாடாளுமன் றக் குழுக் கூட்டம் இன்று டில் லியில் நடந்தது. பிர சாரக் குழு தலைவர் நரேந் திர மோடி, அத்வானி, ராஜ் நாத்சிங் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். கூட்டத்திற்கு பின்னர் பா.ஜ.கவைச் சேர்ந்த ஆனந்தகுமார் செய்தியாளர் களிடம் கூறும்போது,
''மத்தியில் ஆளும் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு, ஊழல்களால் தனது அழிவு காலத்தை நோக்கிச் செல் கிறது. எனவே எந்த நேரத்தி லும் பொதுத்தேர்தல் வரலாம். தேர்லை சந்திக்க பா.ஜ. தயா ராக உள்ளது.தற்போது பிர சாரக்குழு தலைவர் நரேந் திர மோடி மற்றும் தேசிய தலை வர் ராஜ்நாத் சிங் ஆகி யோருடன் தீவிர ஆலோ சனை நடத்தி வருகிறோம்.
நாடு தழுவிய அளவில் 100க்கும் மேற்பட்ட யாத்தி ரைகள் மூலம் தேர்தல் பிர சாரத்தினை தொடக்க உள் ளோம். இதற்கான முடிவினை வரும் 17ஆம் திகதிக்குள் அதி காரப்பூர்வமாக அறிவிக்க உள்ளோம்'' என்றார்.(ற)

## சுயநலத்துக்காக போராடவில்லை
### சேதுசமுத்திரத் திட்டம் குறித்து கருணாநிதி

நாகை, ஜுலை 9
எனது நலனையோ, திரு மாவளவன் நலனையோ விரும்பி சேது சமுத்திர திட்டத்தை நிறைவேற்று மாறு கோரவில்லை என்று தெரிவித்துள்ளார் தி.மு.க. தலைவர் கருணாநிதி.
சேது சமுத்திர திட்டத்தை நிறைவேற்றக் கோரி தமி ழகம் முழுவதும் தி.மு.க. சார்பில் நேற்று ஆர்ப் பாட் டங்கள் நடைபெற்றன.
நாகையில் தி.மு.க. தலை வர் கருணாநிதி தலைமை யில் நடைபெற்ற ஆர்ப்பாட் டத்தில் விடுதலை சிறுத்தை கள் கட்சித் தலைவர் தொல் திருமாவளவன் உள்பட ஏராளமானவர்கள் பங்கேற் றனர்.
ஆர்ப்பாட்டத்தின்போது கரு ணாநிதி உரையாற்றுகையில், ''சேது சமுத்திர திட்டம் அண்ணா நிறைவேற்ற விரும்பிய திட்டம். எனினும் அண்ணா விரும்பிய திட் டத்தை அவரது பெயர் கொண்ட கட்சியே எதிர்க்கிறது.
ஒரு மாநிலத்திற்கு வரும் திட்டத்தை மாநில அரசே எதிர்ப்பது வினோதமானது. நாகப்பட்டினம் துறைமுகம் வளர்ச்சி அடைய சேது சமுத் திர திட்டம் அவசியம் என் பதுடன் கடலூர், தூத்துக்குடி துறைமுகங்களின் விரி வாக்கத்திற்கும் சேது சமுத் திர திட்டம் உதவி புரியும் என்பதுடன் மீனவர்களின்



வளமான வாழ்க்கைக்கு வளம் சேர்க்க கூடிய திட்ட மாகவும் இது அமையும்.
எனது நலனையோ, திரு மாவளவன் நலனையோ விரும்பி சேது சமுத்திர திட் டத்தை நிறைவேற்ற கோர வில்லை. எதிர்கால சந்ததி யின் நலன் கருதியே சேது சமுத்திர திட்டத்தை நிறை வேற்றக் கோருகிறோம்'' என்று தெரிவித்தார் அவர்.(ற)

## புத்த தலங்களுக்கு விசேட பாதுகாப்பு

புதுடில்லி, ஜுலை 9
பீகார் மாநிலம் புத்தகயா குண்டுவெடிப்பை தொடர்ந்து, நாடு முழுவதும் உள்ள புத்த கோயில்கள் மற்றும் திபெத் தியர்கள் குடியிருப்பு பகுதிக ளில் பாதுகாப்பை பலப் படுத்த மத்திய அரசு உத்தர விட்டுள்ளது.
பீகார் மாநிலம் புத்தகயா வில் உள்ள மகாபோதி கோயி லில் நேற்றுமுன்தினம் நடந்த குண்டு வெடிப்பில், புத்த துறவிகள் 2 பேர் காயம் அடைந்தனர். மியான் மரில் முஸ்லிம்களுக்கும், புத்த மதத்தினருக்கும் இடையே நடைபெறும் மோதலால், இந்த தாக்குதலை தீவிர வாத அமைப்புகள் நடத்தி யிருக்கலாம் என கருதப் படுகிறது.
''புத்தகயா உட்பட நாட்டின் பல இடங்களில் உள்ள புத்த கோயில்கள் மீது தாக்குதல் நடத்த தீவிரவாத அமைப்பு கள் திட்டமிட்டுள்ளதாக உள வுத்துறை தகவல்கள் தெரி வித்துள்ளன. புதுடில்லி, மும்பை, கொல்கத்தா, அகம தாபாத், பெங்களூர், ஐதரா பாத் மற்றும் புனே ஆகிய நகரங்களில் உள்ள புத்த கோயில்கள், திபெத்தியர்கள் குடியிருப்புகள் ஆகியவற்றில் போதுமான பாதுகாப்பு ஏற் பாடுகளை செய்ய வேண் டும்" என்று உள்துறை அமைச் சகம் பிறப்பித்துள்ள உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)



சென்னை மெரினா கடற்கரை பகுதியில் நேற்றுக் காலை கூட்டம் கூட்டமாக டொல்பின் மீன்கள் அணிவகுத்து சென்ற ரம்மியமான காட்சியை பொதுமக்கள் திரண்டு கண்டு மகிழ்ந்தனர். (ற)

## குண்டு வெடிப்புக்கும் மோடிக்கும் தொடர்பு?


புதுடெல்லி, ஜுலை 9
புத்தகயாவில் நடந்த தொடர் குண்டு வெடிப்புக்கும், நரேந் திர மோடிக்கும் தொடர்பு இருக்குமோ? என்று காங் கிரஸ் மூத்த தலைவர் திக் விஜய் சிங் சந்தேகம் எழுப் பியுள்ளார்.
புத்தகயா குண்டு வெடிப்பு தொடர்பாக டுவிட்டரில் தன் னுடைய சந்தேகத்தை திக் விஜய் சிங் எழுப்பியுள்ளார். அதில், 'குண்டு வெடிப்பு நடந்த உடனேயே முஸ்லீம் களுக்கு இதில் தொடர்பு என்று சந்தேகிக்க முடியாது. குண்டு வெடிப்பு நிகழ்வ தற்கு சில நாள்களுக்கு முன் பா.ஜ.க. தொண்டர்கள் மத்தி யில் பேசிய குஜராத் முதல் வர் நரேந்திரமோடி, 'பீகார் முதல்வருக்கு சரியான பாடம் கற்பிக்க வேண்டும்' என்று கூறியிருந்தார்.
அயோத்தியில் ராமர் கோவில் கட்டியே தீருவோம் என்று அமித்ஷா பேசியிருந்தார். அடுத்த நாள் புத்தகயா கோவிலில் குண்டு வெடித் துள்ளது. இரண்டுக்கும் தொடர்பு இருக்குமா? என்று எனக் குத் தெரியவில்லை'' என்று கூறியுள்ளார். (ற)

# எகிப்திலும் உள்நாட்டுப் போர்

## எச்சரிக்கின்றார் ரஷ்ய ஜனாதிபதி புடின்

மொஸ்கோ, ஜூலை 9
சிரியாவைத் தொடர்ந்து எகிப்திலும் உள்நாட்டுப் போர் மூளும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று ரஷ்ய அதிபார் விளாடிமிர் புடின் எச்சரிக்கை விடுத்துள்ளார்.
எகிப்தில் ஜனாதிபதி மொஹமட் முர்சியை எதிர்த்து பெரும் ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. அதையடுத்து அந்த விவகாரத்தில் தலையிட்ட எகிப்து இராணுவம் ஜனாதிபதி முர்சியைக் கைது செய்து வீட்டுக் காவலில் வைத்துள்ளதுடன், இடைக்கால அரசு ஒன்றையும் அறிவித்துள் ளது.
எனினும் தற்போதும் அங்கு வன்முறைகள் ஓய்ந்தபாடில்லை. முர்சியின் ஆதரவாளர்களுக்கும் எதிர்ப்பாளர்களுக்கும் இடையே கடும் மோதல்கள் இடம்பெற்று வருகின்றன.
இந்தநிலையிலேயே ரஷ்ய ஜனாதிபதி புடின் இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.
''சிரியாவின் மக்கள் போராட்டம் தற்போது உள்நாட்டுப் போராகப் பரிணமித்துள்ளது. அங்கு உயிரிழப்புகள் பெரும் எண்ணிக்கையில் அதிகரித்துள்ளன. அதே நிலைதான் தற்போது எகிப்திலும் உருவாகி வருகின்றது. அங்கு கட்டுமீறிச் செல்லும் வன்முறைகள் உள்நாட்டுப் போரைத் தோற்றுவிக்கும் நிலையை ஏற்படுத்தி வருகின்றன. எகிப்தில் அனைத்துத் தரப்பினரும் அமைதி காத்து இந்தப் பிரச்சினையை அரசி யல் ரீதியான பேச்சுகள் மூலம் தீர்ப்பதே சிறந்த வழி'' என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)





# செயற்கை முறையில் கல்லீரல்

## ஜப்பானில் சாதனை

டோக்கியோ, ஜூலை 9
உலகில் முதன்முறையாக செயற்கை முறையில் மூல உயிரணுவிலிருந்து கல்லீரலை உருவாக்கி ஜப்பான் விஞ்ஞானிகள் சாதனை புரிந்துள்ளனர்:
ஜப்பானின் யோகோஹாமா பல்கலைக்கழக விஞ்ஞானிகள் டாகானோரி டகேபே, ஹிதேகி டானிகுச்சி ஆகியோர் நிகழ்த்திய ஆராய்ச்சியிலேயே உயிரணுவிலிருந்து வெற்றிகரமாக கல்லீரல் உருவாக்கப்பட்டுள்ளது.
மனிதனின் உடலிலிருந்து எடுக்கப்படும் உயிரணுக்கள், பல்வேறு உடல் உறுப்புகளாக வளரக் கூடிய ஆற்றல் உள்ளதாக இருக்கிறது. இதைத் தகுந்த முறையில் தூண்டிவிடுவதன் மூலம், நமக்குதேவைப்படும்உறுப்பை வளர்த்தெடுக்க முடியும். பெரும்பாலும், மூளைச்சாவு அடைந்தோரின் முக்கிய உடல் பாகங்கள் நல்ல நிலையில் இருந்தால், அவை தானமாகப் பெறப்பட்டு பிறருக்குப் பொருத்தப்படும். எனினும், சில சமயங்களில் ஒவ்வாமை ஏற்பட்டு நோயாளிக்கு பாதிப்பு ஏற்படுகிறது. இந்நிலையில் பாதிக்கப்பட்டவரின் உயிரணுவிலிருந்து கல்லீரலை செயற்கை முறையில் வளர்த்தெடுத்து, அதை அவருக்குப் பொருத்துவதால் எந்தவிதமான பக்க விளைவும் ஏற்படாது என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். (ற)

# மெக்ஸிக்கோ எரிமலை சீற்றம்

மெக்ஸிக்கோ சிட்டி, ஜூலை 9
மெக்ஸிக்கோ தலைநகர் மெக்ஸிக்கோ சிட்டியில் அமைந்துள்ள போபோகெட்பெடில் எரிமலை வெடித்துச் சிதறத் தொடங்கியுள்ளது.
அதில் இருந்து வெளிக்கிளம்பும் நெருப்புக் குழம்பு தாழ்வான இடங்களை நோக்கி பெருக்கெடுத்து ஓடுகின்றது என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.
மலையைச் சுற்றி 3 கி.மீற்றர் தூரத்துக்கு வெறும் சாம்பலாக காட்சியளிக்கிறது என்றும் வீடுகள், வாகனங்கள் என எல்லாமே சாம்பலால் மூடப்பட்டுள்ளன என்றும் தெரியவருகின்றது. (ற)



# கனடா ரயில் விபத்து

## 5 பேர் சாவு; 40க்கும் மேற்பட்டோரைக் காணவில்லை

கனடாவில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற எரிபொருள் ரயில் விபத்தில் உயிரிழந்த 5 பேரின் உடல்கள் கண்டெடுக் கப்பட்டுள்ளன. எனினும் அருகில் இருந்த மதுபான சாலை ஒன்றில் இருந்த 40க்கும் அதிகமானவர்க ளின் நிலை குறித்து இது வரை எந்தத் தகவலும் கிடைக்கப்பெறவில்லை. அவர்களைத் தேடும் பணிகள் தற்போது தீவிர மாக நடை பெற்று வருகின்றன.
அவர்கள் உயிரிழந்திருக்கக் கூடும் என்று சந்தேகம் வெளியிட்டுள்ள பொலிஸார், கடும் தீ காரணமாக அவர்களின் உடல்கள் அடையாளம் கண்டு பிடிக்க முடியாதவாறு கருகியிருக்கக் கூடும் என்றும் தெரிவித்துள்ளனர்.
அதேவேளை, சம்பவ இடத்துக்கு நேரில் சென்று கனேடியப் பிரதமர் ஸ்டீபன் ஹாப்பர் பார்வையிட்டார்.
''இவ் வாறான விபத்தொன்றை நான் எதிர்பார்க்கவில்லை. விபத்து இடம் பெற்ற பிரதேசம் பெரும் போர் ஒன்று நடைபெற்றது போன்று காணப்படுகின்றது'' என்று தெரிவித்துள்ளார் அவர். (ற)

# தொழில்நுட்பக் கோளாறு விபத்துக்கு காரணமல்ல

## விமான விபத்து விசாரணை குழு

நியூயோர்க், ஜூலை 9
அமெரிக்காவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விமான விபத்துக்கு தொழில்நுட்ப கோளாறு காரணம் அல்ல என்று தெரிவிக்கப்படுகின்றது.
சான் பிரான்ஸிஸ்கோ சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்க முற்பட்டபோது விபத்துக்குள்ளான இந்த விமானம் உரிய வேகத்தை விடக் குறைந்த வேகத்திலேயே பயணித்துள்ளது என்று அமெரிக்க தேசிய போக்குவரத்துச்சபை தெரிவித்துள்ளது.
''விமானம் விபத்திற்கு உள்ளாவதற்கு 1.5 செக்கன்களுக்கு முன்னர் சியோலிடம் இருந்து அதனை மீண்டும் மேலே செலுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதையடுத்து விமானத்தை தரையிறக்காது இருப்பதற்கு விமானி முற்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. விபத்துக்கு தொழில்நுட்பக் கோளாறுகள் காரணமாக இருக்காது என்று நம்புகின்றோம்'' என்று விபத்து குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வரும் விசாரணைக்குழு தெரிவித்துள்ளது.
307பயணிகளுடன்பயணித்த இந்த விமானம் விபத்திற்குள்ளானதில் 2 சீன மாணவர்கள் உயிரிழந்ததுடன், 180க்கும் அதிகமானவர்கள் காயடைந்திருந்தனர். போயிங் ரக விமானத்தின் மின்கலங்கள் தொடர்பான பிரச்சினை அண்மைக்காலங்களில் அதிகமாக ஏற்பட்டு வருகின்றது.(ற)



# அடைக்கலம் கொடுப்பதற்குத் தயார்; ஸ்நோடனிடம் இருந்து பதிலில்லை

## வெனிசுவேலா வெளியுறவு அமைச்சர்

கராக்கஸ், ஜூலை 9
அமெரிக்கா பிற நாடுகளை உளவு பார்த்தமை தொடர்பான தகவல்களைப் பகிரங்கப்படுத்திய எட்வேர்ட் ஸ்நோடனுக்குப் புகலிடம் வழங்க தீர்மானித்துள்ளோம் என்று வெனிசுவேலா மற்றும் நிக்கராகுவா ஆகிய நாடுகள் அறிவித்துள்ள நிலையில் அது குறித்து இதுவரை ஸ்நோடனிடம் இருந்து எதுவித பதிலும் வரவில்லை என்று தெரிவித்துள்ளார் வெனிசுவேலா வெளியுறவுத்துறை அமைச்சர் எலியாஸ் ஜாவு.
மனிதாபிமான அடிப்படையில் ஸ்நோடனுக்குப் புகலிடம் வழங்கத் தயாராக இருப்பதாக வெனிசுவேலா நேற்று முன்தினம் அறிவித்திருந்தது. இதுகுறித்த அறிவிப்பை வெனிசுவேலா ஜனாதிபதி நிக்கோலஸ் மடுரோ வெளியிட்டிருந்தார்.
இதுகுறித்து நேற்றுக் கருத்து வெளியிட்ட வெனிசுவேலா வெளியுறவுத்துறை அமைச்சர் எலியாஸ் ஜாவு,
''ஸ்நோடனுக்கு புகலிடம் வழங்குவதற்கு நாம் தீர்மானித்தபோதும் இதுவரை ஸ்நோடனிடம் இருந்து எதுவித தொடர்புகளுக்கும் கிடைக்கவில்லை. இன்று அல்லது நாளை அவரிடம் இருந்து சாதகமானபதில்கிடைக்கக்கூடும் என்று எதிர்பார்கின்றோம்'' என்று தெரி வித்துள்ளார்.
இதேவேளை, ஸ்நோடனைத் திருமணம் செய்ய விரும்புவதாக முன்னாள் ரஷ்யபெண்உளவாளிஅன்னா சாப்மேன் தெரிவித்தமை உண்மைதானா என் பது குறித்து அமெரிக்கா தீவிர விசாரணை நடத்தி வருகிறது.
மொஸ்கோ விமான நிலையத்தில் சர்வதேச பயணிகள் ஓய்விடத்தில் தஞ்சம் அடைந்துள்ள ஸ்நோடனை ரஷ்யாவின் முன்னாள் உளவு அதிகாரியான 31 வயது பெண் அன்னா சாப்மேன், தனது டுவிட்டர் இணையதள பக்கத்தில் ஸ்நோடென்னை திருமணம் செய்து கொள்ள விரும்புவதாக தெரிவித்துள்ளார்.
அதற்குஸ்நோடனிடம்இருந்து பதில் வராத நிலையில், எனது குழந்தைகளை பார்த்துக் கொள்வீர்களா? என்றும் அன்னா கேட்டுள்ளார்.
அதற்கும் ஸ்னோடென் இது வரை பதில் அளிக்க வில்லை. இந்த நிலையில், டுவிட்டரில் ஸ்நோடென்னுக்கு திருமண அழைப்புஅனுப்பியது அன்னா சாப்மேன்தானாஎன்பதுகுறித்து அமெரிக்கா தீவிர விசாரணை நடத்தி வருகிறது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)

# மர்ம தொற்றுக்கு சவூதியில் 38 பேர் சாவு

சவூதி, ஜூலை 9
சவூதி அரேபியாவில் சார்ஸ் போன்ற விஷக்கிருமி தொற்றுக்கு உள்ளாகி நேற்றுமுன்தினம் இருவர் உயிரிழந்துள்ளனர்.
2003ஆம் ஆண்டு உலகெங்கும் பரவிய சார்ஸ் கிருமி தொற்று நோய்க்கு சுமார் 800 பேர் உயிரிழந்தனர்.
இந்த நோய்க்கு மாற்று மருந்து ஏதும் கண்டறியப் படவில்லை. தற்போது சவூதி அரேபியாவில் சார்ஸ் கிருமியைப் போன்றே கண்ணுக்கு புலப்படாத நோய்க் கிருமித் தொற்றினால் 77 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.
இதற்கு முன்னதாக இந் நோயினால் பாதிக்கப்பட்ட 36 பேர் உயிரிழந்தனர். நேற்றுமுன்தினம் மேலும் 2 பேர் உயிரிழந்ததை அடுத்து இந்த மர்ம நோயினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 38ஆக உயர்ந்ததுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (ற)

# நாணய நிதியத்தின் கடன் பாகிஸ்தான் ஒப்புதல்

இஸ்லாமாபாத், ஜூலை 9
சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து 5.3 பில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவியைப் பெறுவதற்கு பாகிஸ்தான் இணக்கம் தெரிவித்துள்ளது.
மூன்று வருடத்திற்கான இந்த கடன், பாகிஸ்தானின் மத்திய வங்கியின் கையிருப் பை நிரப்புவதற்கு உதவும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
அத்துடன் பாகிஸ்தானின் வரவு செலவுதிட்டப்பற்றாக்குறையை குறைக்கவும், எரிசக்தி துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடியை சீர்செய்வதற்கும் இந்தக் கடனுதவி பயன்படுத்தப்படவுள்ளது.
பாகிஸ்தானில் கடந்த மே மாதம் நடத்தப்பட்ட நாடாளுமன்றத் தேர்தலில் பிரதமர் நவாஸ் செரீபின் முஸ்லீம் லீக் கட்சி வெற்றி பெற்றிருந்தது. அதையடுத்துப் புதிதாகப் பொறுப்பேற்றுள்ள அரசு அடிக்கடி ஏற்படும் மின் தடையை கையாளுதல், வரி சேகரிப்பை அதிகரித்தல் போன்றவற்றுக்கு முன்னுரிமை வழங்கியுள்ளது.
பாகிஸ்தானின் எரிசக்தி துறையில் காணப்படும் தொழில்நுட்ப மற்றும் நிதிப் பிரச்சினைகளே மின்வெட்டுக்கு பிரதான காரணங்களாகும் என்று சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டியுள்ளது. (ற)

**TV கள் மலிவு விலையில்**

யாழ் நகரில் எங்குமில்லாத மலிவு விலையில் உத்தரவாதத்துடன் SONY Wega Flat TV கள் 21"- 11000/= முதல், 29"- 16000/= Panasonic 29" -15000/= DTS amp, Box, DVD என்பன.

தொடர்பு: 077 044 0570
ரோனி ரேட் சென்ரர் (கொமர்சல் வங்கி எதிரில்)
56, K.K.S வீதி, சுன்னாகம்.
(30701)(45.6.3)

**மணமகன் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1972 சுவாதி நட்சத்திரம், A/L படித்த மணமகளுக்கு எந்த நாட்டிலாவது PR உள்ள மணமகன் தேவை. உயரம் 5 அடி 3 அங்குலம். (சீதனம் வீட்டுடன் வழங்கப்படும்)

தொடர்பு: 077 310 6544

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# 31ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

அமரர்
## வெற்றிவேலு சண்முகம்
(ஓய்வுபெற்ற அதிபர்)



**பூவுலகில்**
**07.07.1939**

**விண்ணுலகில்**
**10.06.2013**

ஆலமரமாய் எம்மனைவருக்கும் நிழல் தந்து
ஆறடி நிலம் தான் சொந்தமென்று சென்றதேனோ!
வையத்துள் வாழ்வாங்கு வாழ வழி வகுத்து விட்டு
பொய்யான வாழ்வு இதுவெனப் பிரிந்து சென்றீர்களோ!
எங்களால் உங்கள் இழப்பைத் தாங்க முடியவில்லை.
விழி மூடித் தூங்குகின்ற போதெல்லாம்- உங்கள்
நினைவலைகள் எமை நெருப்பாய் வாட்டுதே!
மறு பிறப்பு மானிட உண்மையென்றால்
எத்தனை ஜென்மங்கள் எடுத்தாலும்
எம்மோடு வாழவே,
இறைவனிடம் வேண்டுகின்றோம்.
விழியோரம் கசிகின்ற நீரோடும் - உங்கள்
கலையாத நினைவுகளை நெஞ்சிருத்தி
ஆத்மா சாந்தி பெற கண்ணீர்ப் பூக்களைக்
காணிக்கையாக்குகின்றோம்.

கடந்த 10.06.2013 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் வெற்றிவேலு சண்முகம் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு, நேரில் வந்து அனுதாபங்கள் தெரிவித்தவர்களுக்கும், தொலைபேசி மூலமாக துயர் பகிர்ந்தவர்களுக்கும், அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், மலர் வளையம் வைத்தவர்களுக்கும் மற்றும் பல்வேறு வழிகளில் உதவி புரிந்த அன்பு உள்ளங்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு, நாளை (10.07.2013) புதன்கிழமை அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

வட்டுவாகல், முல்லைத்தீவு.
T.P.:077 393 0946

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(35293)(3-5-6)

# 13 ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு
01.06.1933

மறைவு
03.07.2000



அமரர் கந்தையா
## மயில்வாகனம்
(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்
பொலிஸ் பப்பா)

திதி: பிரதமை- 09.07.2013

கண்ணீரில் கரைந்ததையா 13 ஆண்டுகள்
கண்முன்னே நீங்கள் இல்லை என் கவலைகளைச் சொல்ல
கனவிலும் நினைவிலும் உங்கள் முகம்தான் எனக்குத் தெரிகிறது
துணைவரைத் தானிழந்தார்க்குத் தரணியில் அமைதி இல்லை
வாழ்வைத்தந்து வாழவைத்த என் அன்புத் தெய்வமே!
இறுதிவரை எனக்குத் துணையாக இருப்பீர்கள் என்றிருந்தேன்
இடைநடுவில் தவிக்கவிட்டு எங்கு சென்றீர்கள்
பூவுலகு விடைகொடுக்க பொன்னுலகை அடைந்த புகழ்
மேலுலகில் மேன்மை பெற்று மேலான பதமடைந்தீர்.
நீங்கா நினைவோடு நீர் மல்கும் விழிகளுடன் விதியை
நொந்து உங்கள் காலடிக்கு வரும்வரை
சந்நிதியான் நிழலில் சரணடைந்த என் அன்புத் தெய்வமே!
என் உயிர் உள்ளவரை உங்கள் நினைவோடு வாழ்கிறேன்
என்றும் உங்கள் ஆத்மாசாந்தியடைய
சந்நிதி முருகனை வேண்டுகின்றேன்.

**பழைய பாலத்தடி,**
**தொண்டமானாறு.**

(30658) (45.6.3)

திருமதி ம.பரமேஸ்வரி
(மனைவி)

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
02.06.1966

மறைவு
09.07.2010



## கந்தையா சிவகுமார்

தேன் உண்ணத் தந்து விட்டு தேனீக்கள் பறந்து விடும்
மழை நீரைப் பொழிந்து விட்டு மேகங்கள் கலைந்து விடும்.
பாதைக்கு வழி காட்டி பகலவனும் மறைந்து விடும்
சுடர் ஏற்றி வைத்தவர் சுடராகி நிற்கின்றார்
இனி எங்கே தேடுவது எம் இனிய மகனை நாம்

(38978)
(6.3.11)

**மட்டுவில் வடக்கு,**
**சந்திரபுரம், சாவகச்சேரி.**

**அப்பா, அம்மா,**
**சகோதரர்கள்.**

# ஆண்டொன்று சென்றாலும் அகலாத நினைவோடு......

அமரர்
## சுப்பிரமணியம் சிவானந்தன்
(முன்னாள் எழுதுவினைஞர், தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கம்)

தெல்லிப்பழை, வித்தகபுரத்தில்
பாவியாகப் பிறந்து அலைந்து திரிந்து
தந்தை தாய் கடமை முடித்து
இருபது வருடங்களின் பின்
பிறந்த மண்ணில் வீரனாக வந்து
காடு வெட்டி கடன்பட்டு வீடுகட்டி
புதுமனை புகுந்து
நிம்மதியாக வாழ நினைத்தவேளை
காலன் தன் கணக்கை முடித்து
இறைவன் திருவடி அடைந்து
ஓராண்டு ஆகியும் உங்கள்
நிழலடியை கனவிலும் நினைவிலும்
கண்ணீரால் தேடி அலையும்
அன்பு மனைவி.

**அன்னை**
**மடியில்**
**09.06.1959**

**ஆண்டவன்**
**அடியில்**
**20.06.2012**

**திதி:**
**பிரதமை**
**09.07.2013**



**கயந்தப்பை,**
**வித்தகபுரம், தெல்லிப்பழை.**

(30678)(5-6-3)

**குடும்பத்தினர்.**

# யாழ்.போதனா ஆஸ்பத்திரியில் சிற்றூழியருக்குத் தட்டுப்பாடு

## நிவர்த்தி செய்யுமாறு பணிப்பாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 9
யாழ்.போதனா வைத்தியசாலையில் 100 இற்கும் மேற்பட்ட சிற்றூழியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகிறது. அது தொடர்பில் உரியவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இதுவரை ஆளணி மேம்படுத்தப்படவில்லை என்று வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் திருமதி பவானி பசுபதிராஜா தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

வைத்தியசாலையில் பல வருடங்களாக சிற்றூழியருக்குப் பற்றாக்குறை நிலவுகிறது. கடந்த வருடம் ஒரு தொகையினர் நியமிக்கப்பட்டனர். எனினும் அந்த எண்ணிக்கை தேவையைப் பூர்த்தி செய்வதாக அமையவில்லை.

இதனால் வைத்தியசாலையின் பணிகளை முன்னெடுப்பதில் இடர்பாடுகள் ஏற்படுகின்றன. இந்த நெருக்கடிகளைத் தீர்க்க இன்னமும் 100 இற்கும் மேற்பட்ட சிற்றூழியர்கள் நியமிக்கப்பட வேண்டியுள்ளது. சுகாதார அமைச்சுக்கும் இது தொடர்பில் தெரியப்படுத்தியுள்ளோம் எனத் தெரிவித்தார்.

இதேவேளை வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவுப் பணிகளுக்கும், விடுதிகளுக்கு நோயாளர்களை அழைத்துச் செல்வதற்கும், விடுதிகளில் பணியாற்றவும் எனப் பல ஆளணி வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

சத்திர சிகிச்சைக் கூடங்களில் கூட இந்தப் பிரச்சினை தொடர்கிறது.

இதனால் தாம் வேலைச் சுமைக்கு ஆளாகியுள்ளதாக அங்கு பணிபுரியும் ஊழியர்கள் தெரிவிக்கின்றனர். (ஐ-4)

### கணக்காளர் 6 பேருக்கு இடமாற்றம்

அச்சுவேலி, ஜூலை 9
யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களில் குறிப்பிட்ட காலப் பகுதிக்கு மேல் தொடர்ந்து கடமை புரிந்த இலங்கை கணக்காளர் சேவையைச் சேர்ந்த 6 பேர் உள்ளக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கணக்காளர்களுக்கான இடமாற்றக் கடிதங்களை சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பிவைத்துள்ளார். இந்த மாதம் முதலாம் திகதியில் இருந்து இடமாற்றம் நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றல் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

இடமாற்றம் செய்யப்பட்ட கணக்காளர்கள் தமது கடமைப் பொறுப்புக்களைப் புதிய இடங்களில் ஏற்றுக் கொண்டுள்ளனர்.




இம்மாதம் முதலாம்திகதி தொடங்கி 7 ஆம் திகதி வரை டெங்கு ஒழிப்பு வாரமாகப் பிரகடனப்படுத்தப்பட்டதை அடுத்து வல்வை சிவகுரு வித்தியாலய மாணவர்களால் வெள்ளிக்கிழமை டெங்கு ஒழிப்பு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. (வ-8)

### தொழில் வாய்ப்பற்ற முஸ்லிம்களுக்கு

## நோன்புக் காலத்திலாவது உதவிகளை வழங்குங்கள்

### தன்னார்வத் தொண்டு நிறுவனங்களிடம் மக்கள் பணிமனைத் தலைவர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூலை 9
மீள் குடியமர்வின் பின்னரும் தொழில் வாய்ப்பின்றி இருக்கும் முஸ்லிம் குடும்பங்களுக்கு நோன்புக் காலத்திலாவது மனிதாபிமான உதவிகளை வழங்க தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் முன்வர வேண்டும் என்று யாழ். மக்கள் பணிமனைத் தலைவர் மௌலவி எஸ்.சுபியான் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ். பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட ஜே/81 தொடக்கம் 88 வரையான கிராம சேவகர் பிரிவுகளில் மீள்குடியமர்வு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு உலக உணவுத் திட்டத்தில் வழங்கப்பட்ட 6 மாதத்துக்குரிய நிவாரணமும் இடை நிறுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில் எதிர்வரும் 10 ஆம் திகதி முஸ்லிம் மக்களுக்கான நோன்புக் காலம் ஆரம்பிக்கப்பட்வுள்ளதால் தொழில் வாய்ப்பற்றுள்ள குடும்பங்கள் தமது நோன்பைக் கூட சரியான முறையில் கடைப்பிடிக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

> உலக உணவு திட்டத்தில் வழங்கப்பட்ட 6 மாதத்துக்குரிய நிவாரணமும் இடை நிறுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் அந்த மக்களுக்குரிய மனிதாபிமான உதவிகளை வழங்க முன்வர வேண்டும். தொடர்ச்சியான மத முறைமைகளின் படி நோன்பைக் கடைப்பிடிக்க இந்த உதவிகள் கை கொடுக்கும் எனவும் தெரிவித்துள்ளார். (வ-14)

## இந்து ஆலயங்களுக்கும் அலரி மாளிகையில் கொடுப்பனவு

வடமாகாணத்தில் போர் இடர் வேளையில் சேதமடைந்த ஆலயங்களுக்கான நட்டஈட்டுக் கொடுப்பனவுகளும் நாளை மறுதினம் வியாழக்கிழமை அலரி மாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொடுப்பனவு தொடர்பாக புனர்வாழ்வு அதிகார சபையினால் அனுப்பப்பட்ட கடிதத்துடன் ஆலய நிர்வாகிகள் அல்லது தர்மகர்த்தா சபையினர் கிராம அலுவலரின் உறுதிப்படுத்தலுடன், பிரதேச செயலர் ஊடாக பெற்ற கடிதத்துடன் நாளை 10 ஆம் திகதி மாலை 4 மணிக்கு யாழ். மாவட்டச் செயலகத்துக்கு வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் கொடுப்பனவுக்கு தெரிவு செய்யப்பட்ட இந்து ஆலயங்களின் விவரம் வருமாறு:

கட்டுவன் மேற்கு ஞான வைரவர் ஆலயம், மாவிட்டபுரம் ஸ்ரீராஜேஸ்வரி அம்பாள் ஆலயம், கொல்லங்கட்டி ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலயம், மாவட்டபுரம் சித்தி விநாயகர் ஆலயம், தும்பளை வைரவர் ஆலயம், மருதனார் மடம் சுடலை வைரவர் ஆலயம், கந்தர்மடம் ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானம் என்பவற்றுக்கே கொடுப்பனவுகள் வழங்கப் படவுள்ளன. (ஐ-9)

## நம்பிக்கை மோசடி செய்த பெண்ணுக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஜூலை 9
அயல் வீட்டாரிடம் நம்பிக்கை மோசடி செய்த குற்றச்சாட்டில் கைதான பெண்ணை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

யாழ். நகரில் உள்ள குறித்த பெண் திருமண வைபவத்துக்கு அணிந்து விட்டுத் திருப்பித் தருவதாகக் கூறி 3 லட்சத்து 50, ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளை அயல்வீட்டாரிடம் இரவலாகப் பெற்றிருந்தார்.

எனினும் வைபவத்துக்குச் சென்று திரும்பிய பின்னரும் நகைகளை திருப்பிக் கொடுக்காது இருந்துள்ளார். அவற்றைத் திருப்பித் தருமாறு உரியவர்கள் கேட்டபோதும் அவர் நகைகளைத் திருப்பிக் கொடுக்கவில்லை.

அதனால் அது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. பொலிஸார் அவரைக் கைது செய்து யாழ். நீதிமன்றில் முற்படுத்தினர். அதன்போதே குறித்த பெண்ணை எதிர்வரும் புதன் கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டது மன்று.

இது தவிர யாழ். நகரில் 2 லட்சம் ரூபா பெறுமதியான காசோலைகளைக் கொடுத்து அதற்குரிய பணத்தை வங்கியில் வைப்பிலிடாது மோசடி செய்த குற்றச் சாட்டில் யாழ். நகரைச் சேர்ந்த 35வயது நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

அவரை ஓகஸ்ட் மாதம் வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

அதேபோன்று, யாழ். நகர வர்த்தகர் ஒருவர் 12 லட்சத்து 56 ஆயிரத்து 400 ரூபா பெறுமதியான சிகரெட்டுகளை வர்த்தக நிறுவனம் ஒன்றிடம் இருந்து கடனாகப் பெற்றுப் பணத்தைச் செலுத்தாது மோசடி செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரை எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (வ-4)

## காயங்களுடன் இருவர் வைத்தியசாலையில்

தென்மராட்சி, ஜூலை 9
வீதி விபத்து மற்றும் தாக்குதல் சம்பவம் ஆகியவற்றில் காயமடைந்த பெண் உட்பட இருவர் கடந்த சனிக்கிழமை இரவு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

மிருசுவில் தெற்குப் பகுதியில் மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கி காயமடைந்த அதே இடத்தைச் சேர்ந்த மயில்வாகனம் மகேந்திரம் (வயது-46) என்பவரும், கொடிகாமம் வெள்ளாம் போக்கட்டிப் பகுதியில் சிலரது தாக்குதலுக்கு இலக்கான நிலையில் அதே இடத்தைச் சேர்ந்த ஸ்பம்பதி ஜெயாதேவி (வயது-45) என்பவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஐ-9)

## பாதுகாப்பில் நிறுத்தப்பட்ட சைக்கிள் திருட்டு

### பணியாற்றிய பாதுகாப்பு ஊழியர் மீது விசாரணை

வலி.வடக்கு, ஜூலை 9
மருதனார்மடம் சந்தை சைக்கிள் பாதுகாப்பில் நிறுத்தப்பட்ட புதிய சைக்கிள் காணாமல் போனமை தொடர்பாக சுன்னாகம் பொலிஸாரால் சைக்கிள் பாதுகாப்பில் கடமையாற்றும் ஊழியர் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டார்.

சனிக்கிழமை மருதணார்மடம் சைக்கிள் பாதுகாப்பில் நிறுத்தப்பட்ட புதிய சைக்கிள் காணாமல் போயுள்ளது.

பாதுகாப்புக் கடமையில் நின்ற ஊழியரிடம் சைக்கிளை பாதுகாப்பில் விட்டு விட்டு பற்றுச் சீட்டு தரும்படி கேட்டபோது அதை வழங்காது சைக்கிள் பாதுகாப்பாக இருக்கும் எனக் கூறி அந்த நபரை அனுப்பியுள்ளார்.

உரியவர் சந்தையில் தனது தேவைகளை நிறைவேற்றி விட்டு வந்து சைக்கிள் பாதுகாப்பில் சைக்கிளை பார்த்த வேளையில் அது களவாடப்பட்டதை அறிந்துள்ளார்.

சைக்கிள் பாதுகாப்பு ஊழியரிடம் சைக்கிள் காணாமல் போனமை பற்றி தெரிவித்த போது வேண்டா வெறுப்பாக செயற்பட்டதுடன் உரிய பதிலையும் கூறாது இருந்துள்ளார்.

இந்த நிலையில் சைக்கிளை திருட்டுக் கொடுத்தவர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து பொலிஸார் விசாரணையை மேற்கொண்டதன் அடிப்படையில் குறித்த பாதுகாப்பு நிலைய ஊழியர் மேலதிக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். (வ-86)

### டெங்கை விரட்ட சிரமதானப் பணி

தேசிய டெங்கு நுளம்பு கட்டுப்பாட்டு வார இறுதி நாளான நேற்று முன்தினம் தென்மராட்சி கிழக்குப் பகுதி மக்கள் ஏ-9 வீதியில் துப்புரவுப் பணிகளை மேற்கொண்டனர். மிருசுவில் உசன் சந்தியில் ஆரம்பித்த இந்தப் பணிகள் ஐந்து கிலோமீற்றர் வரையாகக் கொடிகாமம் நகர்ப் பகுதி பொதுச் சந்தை வரை இடம்பெற்றது. இதன்போது ஏ-9 வீதியோரங்களில் காணப்பட்ட பிளாஸ்ரிக் பொருள்கள், ரின்கள், போத்தல்கள் ஆகியவை அப்புறப்படுத்தப்பட்டன. (ஐ-9)

## குடிதண்ணீர் இணைப்புக்கு நிதி வழங்கல்



சம்மாந்துறை,ஜூலை 9
சம்மாந்துறை பிரதேசத்தில் வசதி குறைந்த குடும்பங்களுக்கு குடிதண்ணீர் இணைப்பு வழங்குவதற்கான நிதி வழங்கும் வைபவம் ஞாயிற்றுக்கிழமை கிழக்கு மாகாண சுகாதார அமைச்சரின் சம்மாந்துறை அலுவலகத்தில் இடம்பெற்றது.
இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.ஐ.எம்.மன்சூர் கலந்துகொண்டு 32 பயனாளிகளுக்கு காசோலைகளை வழங்கினார். (ச)

## முஸ்லிம் தலைமைகளின் அரசியல் பலம் பெயரளவில்

### சுபைர் தெரிவிப்பு



மட்டக்களப்பு,ஜூலை 9
மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள முஸ்லிம் அரசியல் தலைமைகளின் அரசியல் பலமென்பது பெயரளவில் மாத்திரமே உள்ளது என்று கிழக்கு மாகாண சபையின் பிரதி தவிசாளர் எம்.எஸ். சுபைர் தெரிவித்தார்.
ஏறாவூர் கல்வி அபிவிருத்தி நிறுவனத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற விழாவின் போது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
'மட்டக்களப்பிலுள்ள முஸ்லிம் அரசியல் தலைமைகள் பலவீனமானவர்களாக உள்ளனர்.
நான் உட்பட இந்த மாவட்டத்திலுள்ள முஸ்லிம் அரசியல் தலைமைகள் அரசிலேயே இருக்கின்றோம். ஆனால் பலவீனமானவர்களாகவே இருக்கின்றோம். ஐரோப்பிய ஒன்றியத்தினால் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு வழங்கப்பட்ட ஆயிரம் வீடுகளில் ஒரு வீட்டையேனும் முஸ்லிம் பிரதேசத்துக்கு பெற்றுக் கொடுக்கவில்லை.
இந்திய வீட்டுத்திட்டத்தில் 12 வீடுகளை மாத்திரமே பெற்றுக் கொடுத்துள்ளோம்.
இதனால் பலவீனமடைந்த முஸ்லிம் அரசியல் தலைமைகளாகவே மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் அரசியல் தலைமைகள் இருக்கின்றனர். - என்றார். (ச)


# கூட்டமைப்பு-மு.கா. இணைந்து ஆட்சி

### கிழக்கில் விரைவில் என்கிறார் செல்வம் எம்.பி.



களுவாஞ்சிக்குடி,ஜூலை 9
கிழக்கு மாகாணசபை நிர்வாகம் கலைந்து, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் ஒன்று சேர்ந்து கிழக்கு மாகாண சபையை ஆட்சி செய்யும். அதற்குரிய காலம் நெருங்கிக் கொண்டிருக்கின்றது.
அதன்பின்னர் வடக்கு, கிழக்கை நாங்கள்தான் ஆட்சி செய்வோம். மக்களின் அபிலாசைகளை துரிதகதியில் முன்னெடுப்போம். இதற்குரிய காலம் கனிந்துள்ளது.
- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலோ அமைப்பின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.
தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஏற்பாட்டில் ஞாயிற்றுக்கிழமை களுவாஞ்சிக்குடி இராசமாணிக்கம் மண்டபத்தில் நடைபெற்ற கிழக்கு மாகாணசபை உறுப்பினர்கள் கௌரவிப்பிலும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலர் வீ.ஆனந்தசங்கரியின் 80ஆவது அகவை பூர்த்தி விழாவிலும் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டு அகிம்சைப் போராட்டத்தை கையிலெடுத்து சாத்வீக ரீதியில் செயற்பட்டு வருகின்றோம். 5 தமிழ்க் கட்சிகளும் ஒன்றிணைந்து ஒரு ஜனநாயகக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டு அதனூடாக செயற்பட்டு வருகின்றோம்.
பல நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர், யுவதிகள் கண், காது, கால் போன்ற பல அங்கங்களை இழந்து சிறையில் வாடுகின்றார்கள். தினம் தினம் முள்ளி வாய்க்காலில் நடந்த சோகத்தினை நினைந்து சோகக் கண்ணீர் வடித்துக் கொண்டு தான் இன்னமும் எம்மினம் வாழ்ந்து கொண்டிருக்கின்றது.
அவையனைத்தையும் எதிர்த்துப் போராடுவதற்கு ஒன்றிணைந்துள்ள 5 தமிழ் கட்சிகளும் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும். இந்தியாவிலே தமிழ்நாடு எம் பக்கம் உள்ளது. ஏனைய நாடுகளில் புலம் பெயர்ந்துள்ள எம்மக்கள் என்றும் உறுதுணையாகவுள்ளார்கள். அவர்களின் செயல்பாடுகளால் ஜனாதிபதி கூட அந்த நாடுகளுக்கு செல்ல முடியாதுள்ளது.
இப்படிப்பட்ட நிலையில் ஈழத்திலே இருக்கின்ற எங்கள் மண்ணை நாம் மீட்பதற்காக ஒன்று படவேண்டும்.
இலங்கை அரசுக்கு வட மாகாணசபைத் தேர்தல் ஒரு சவாலாகும். இந்தத் தேர்தல் நிச்சயமாக ஒரு திருப்பத்தினைக் கொண்டு வரும். வடமாகாண சபையை நிச்சயம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றும்.
அதுபோல் தற்போது கிழக்கு மாகாண சபையிலுள்ள ஆளும் கட்சியினருக்குள் குழப்பங்கள் உருவாகியுள்ளன. கிழக்கு மாகாணசபை நிர்வாகம் கலைந்து, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஒன்று சேர்ந்து கிழக்கு மாகாண சபையை ஆட்சி செய்யும், அதற்குரிய காலம் நெருங்கிக் கொண்டிருக்கின்றது.
-என்றார். (ச)

> "
> கிழக்கு மாகாண சபை கலைந்து, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஒன்று சேர்ந்து கிழக்கு மாகாண சபையினை ஆட்சி செய்யும்.



திருகோணமலை நகர மத்தியில் அமைந்துள்ள காந்தி சிலைக்கு முன்பாகவுள்ள சுமார் நூறு வருடங்கள் பழமை வாய்ந்த ஆலமரம் ஞாயிற்றுக்கிழமை வீசிய கடும் காற்றினால் முறிந்து விழுந்துள்ளது. (ச-40)

## 2 ஆம் வருட மாணவர் பல்கலையிலிருந்து வெளியேற்றம்



வெளியேற்றப்பட்ட இரண்டாம் வருட மாணவர்கள் பல்கலைக்கழகத்தின் முன்றிலில் தமது பைகளுடன் கூடி நின்றனர்.

அம்பாறை, ஜூலை 9
தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் 2 ஆம் ஆண்டில் கல்வி பயிலும் சுமார் 375 மாணவர்கள் திங்கட்கிழமை காலை பல்கலைக்கழகத்திலிருந்து - காலவரையறையின்றி வெளியேற்றப்பட்டுள்ளனர் என்று பல்கலைக் கழகத்தின் பதிவாளர் எச். அப்துல் சத்தார் தெரிவித்தார்.
விடுதி வசதிகள் தொடர்பில் பல்கலைக்கழக நிர்வாகத்தினரின் பணிப்புரைகளுக்குக் கட்டுப்படாததன் காரணமாகவே இந்த மாணவர்களை இவ்வாறு தாம் - பல்கலைக்கழகத்திலிருந்து காலவரையறையின்றி வெளியேற்றியதாக அவர் கூறினார்.
பல்கலைக்கழக சட்ட திட்டத்தின்படி, இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கு விடுதி வசதிகள் வழங்கப்படுவதில்லை. எனினும் ஒலுவில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் இரண்டாமாண்டு ஆண் மாணவர்களுக்கு நிந்தவூர் பலநோக்கு கூட்டுறவு சங்கக் கட்டடத்தில் விடுதி வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்த போதும் - அவர்கள் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. பல்கலைக் கழகத்தின் உள்ளேயே தமக்கு விடுதி வசதிகள் வழங்கப்பட வேண்டும் என்று முரண்டு பிடித்தனர். அவர்களின் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு பல்கலைக்கழகத்தினால் முடியாது. எனவே தான், பல்கலைக்கழக நிர்வாகத்தின் கட்டளைக்குப் பணியாத 2 ஆம் வருட மாணவர்களை கால வரையறையின்றி வெளியேற்றினோம் என்று பதிவாளர் விளக்கமளித்தார். இதே வேளை இரண்டாம் வருட மாணவர்களுக்கு தடை செய்யப்பட்ட பிரதேசமாக பல்கலைக்கழக வளாகம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. (ச-30)

## காத்தான்குடியில் குழாய் நீர் விநியோகத்திட்டம்

மட்டக்களப்பு,ஜூலை 9
மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி நகரசபைப் பிரிவின் கரையோர பிரதேசங்களில் முதன்முறையாக குழாய்நீர் விநியோக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.
இதற்காக நிலத்துக்கு அடியில் குழாய்களைப் பொருத்தும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.
கடந்த காலங்களில் காத்தான்குடியின் நகரப் பகுதிகளில் குழாய் நீர்த்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட போதிலும், கரையோரப் பிரதேசங்களில் அவை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

# சமூக ஒருமைப்பாட்டு வாரமாக 15 முதல் 21 வரை பிரகடனம்



கொழும்பு, ஜூலை 9
சமூக ஒருமைப்பாட்டு வாரமாக எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது என்று தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு தெரிவித்துள்ளது.

மக்களிடையே நிலவும் சிக்கல்களுக்கு தீர்வுகளைத் தேடுவதே இந்த வாரம் பிரகடனப்படுத்தப்படுவதன் நோக்காகியுள்ளது என்று தேசிய மொழிகள் மற்றும் ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:
' கல்வியின் ஊடாக சமுதாய ஒருமைப்பாடு' என்பதே இந்த வாரத்தைக் கொண்டாடும் தொனிப் பொருளாக இருக்கிறது.

மக்கள் தம்மை சமுதாயமயப்படுத்திக் கொள்ளும் போது தாக்கங்கள் ஏற்படுத்தும் பொருளாதாரப் பிரச்சினைகள், சமூகப் பிரச்சினைகள், மொழிப் பிரச்சினைகள் போன்றவை சம்பந்தமாக ஆராய்ந்தறிந்து அவற்றுக்குத் தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கும் செயற்றிட்டமொன்றே இந்த வாரத்தில் மேற்கொண்டு செல்லப்படவுள்ளது.

பதுளை மாவட்டத்தில் சமுதாய ஒருமைப்பாடுகள் திரைப்படக்காட்சி, மொழிகள் கையேட்டை வெளியிட்டு வைத்தல், நடமாடும் சட்ட உதவிகள் சேவை, சமுதாயப் பராமரிப்பு செயற்றிட்டங்கள் உள்ளிட்ட ஏராளமான செயற்பாடுகள் இந்த வாரத்துக்காக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

சமூக உரிமைகள் என்பது அனைவருக்கும் சமமான வகையில் அமைய வேண்டியுள்ளது.- என்றார். (ச-22)

## வெலிக்கடை சிறைக் கலவரம்; இன்னமும் இல்லை அறிக்கை

### சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவிப்பு



கொழும்பு,ஜூலை 9
கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலையில் கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் இடம்பெற்ற கலவரம் குறித்து விசாரணைகளை மேற்கொள்ள நியமிக்கப்பட்ட விசேட விசாரணைக் குழுவின் அறிக்கை,இதுவரைகையளிக்கப்படவில்லை என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த விசாரணைக்குழுவுக்கு வழங்கப்பட்டிருந்த கால அவகாசம் சிறைச்சாலைகள் அமைச்சரினால் பல சந்தர்ப்பங்களில் நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 23 ஆம் திகதி சிறைக் கைதிகளால் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்ட கலவரத்தால் 26 பேர் உயிரிழந்துள்ளதோடு, 27 பேர் காயங்களுக்கு உள்ளாகினர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் இரகசியப் பொலிஸ் பிரிவின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணை கூட இன்னமும் முடிவடையவில்லை.

# தாதியர் பயிற்சிக்கு 6025 பேர் இணைப்பு

## தகுதி அடிப்படையில் தேர்வுகள் என்கிறார் மைத்திரிபால சிறிசேனா



கொழும்பு,ஜூலை 9
இந்த வருடம் நவம்பர் மாதத்துக்கு முன்னர் தாதியர் பயிற்சிக்காக 6025 பேர் சேர்க்கப்படுவர். இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் விஞ்ஞானப் பாடங்களில் சித்தியடைந்தோர் இதற்காகச் சேர்க்கப்படுவர். தகுதி அடிப்படையில் தேர்வுகள் நடைபெறும்.

தற்போது 28,000 தாதிமார் சேவையில் உள்ளனர். 2005 ஆம் ஆண்டில் 14,000 தாதிமாரே இருந்தனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசின் கீழ் இந்த எண்ணிக்கை 28,000 ஆக அதிகரிக்கப்பட்டது.

46,000 பேர்களாக தாதிமார் எண்ணிக்கையை அதிகரிப்பதே அமைச்சின் இலக்காகும். நாட்டிலுள்ள 18 தாதிமார் பயிற்சிக் கல்லூரிகளின் நிலைமைகளும் மறுசீரமைக்கப்படும். -என்றார். (ச)

## பஸ் சில்லுக்குள் சிக்குண்டு மாணவி சாவு

கொழும்பு,ஜூலை 9
அநுராதபுர நகரப் பகுதியில் பஸ் சில்லுகளுக்குள் சிக்குண்டு பாடசாலை மாணவி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது என்று அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

கல்கமுவையிலிருந்து அநுராதபுரம் நோக்கி பயணித்த மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அநுராதபுரம் நகரப் பகுதியில் வைத்து பஸ்ஸில் கோளாறு ஏற்பட்டு அதனை சீர் செய்துகொண்டிருக்கும் போது திடீரென பஸ் முன் நோக்கி பயணித்துள்ளது.

இந்தநிலையில் பஸ்ஸிற்கு முன்பாக நின்று கொண்டிருந்த சிறுமி சில்லுகளுக்குள் சிக்குண்டு உயிரிழந்துள்ளார். (ச)

## வெளிநாட்டவரைத் தடுத்து வைக்க மினுவாங்கொடையில் புதிய முகாம்



கொழும்பு,ஜூலை 9
இலங்கையில் சட்ட விரோதமாக தங்கியிருக்கும் மற்றும் சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள வெளிநாடுகளைச் சேர்ந்த நபர்களை நாட்டிலிருந்து வெளியேற்றப்படும் வரை அவர்களை தங்க வைக்க மினுவாங் கொடை பிரதேசத்தில் புதிதாக தடுப்பு முகாம் ஒன்று நிர்மாணிப்பதற்கு குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

தற்போது மிரிஹானையில் அமைந்துள்ள தடுப்பு முகாமில் இட வசதிகள் போதுமானதாக இல்லாமையால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் சூலானந்த பெரேரா தெரிவித்தார்.

மினுவாங்கொடை பிரதேசத்தில் 100 பேர்ச் நிலப் பரப்பில் நிர்மாணிக்கப்படும் புதிய தடுப்பு விடுதியானது பெண்கள், ஆண்கள் என்றவாறு 100 பேர் தங்கியிருக்கத்தக்க விடுதி வசதிகளுடன் சர்வதேச தரங்களுடன் நிர்மாணிக்கப்படும் என்று அவர் கூறினார். (ச-22)

> புதிய தடுப்பு விடுதியானது பெண்கள், ஆண்கள் என்றவாறு 100 பேர் தங்கியிருக்கத்தக்க விடுதி வசதிகளுடன் சர்வதேச தரங்களுடன் நிர்மாணிக்கப்படும்.



ஐக்கிய நாடுகள் சபையின் இளைஞர் விவகாரங்கள் தொடர்பான தூதுவர் அஹமது அல்ஹெந்தாவி இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெருமவை அவரது அமைச்சில் சந்தித்தார். (ச-10)

## அரச தொலைக்காட்சிக்கு நான்கு கோடி ரூபா கடன்

அரசியல் கட்சிகளின் விளம்பரங்கள் மூலம் இலங்கையின் அரச தொலைக்காட்சியான ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்துக்கு நான்கு கோடி ரூபா கடன் ஏற்பட்டுள்ளது.

அரசியல் கட்சிகள், தேர்தல் பிரசாரங்களுக்காக ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தில் விளம்பரம் செய்த போதிலும் அதற்கான கட்டணங்களை செலுத்தத் தவறியுள்ளன.

இந்த விடயம் கணக்காய்வு ஆணையாளர் நாயகத்தால் தயாரிக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேர்தல் பிரசாரப் பணிகளுக்காக அரசியல் கட்சிகள் அரச ஊடகங்களைப் பயன்படுத்திக்கொள்வது வழக்கமாகும். எனினும், அந்தத் தொகையை இந்த அரசியல் கட்சிகள் செலுத்தத் தவறியுள்ளன. (ச)

# சீரற்ற காலநிலையால் நாடெங்கும் மழை



கொழும்பு,ஜூலை 9
சீரற்ற காலநிலையால் நாடு முழுவதும் அடைமழை பெய்து வருகின்றது.

சப்ரகமுவ, மேல், மத்திய மற்றும் தென் மாகாணங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிக மழை வீழ்ச்சி பெய்து வருவதால் நீரேந்துப் பகுதிகளின் நீர் மட்டம் உயர்வடைந்துள்ளது.

கொத்மலை நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை அதிகரித்தமையை அடுத்து வான் கதவு ஒன்று திறந்து விடப்பட்டுள்ளது என்று இடர் முகாமைத்துவ நிலையத்தின் பேச்சாளர் சரத் லால்குமார தெரிவித்தார்.

இதேவேளை மழையுடன் அவ்வப்போது கடுங்காற்று வீசக்கூடுமென்பதுடன் மின்னல் தாக்கங்களிலிருந்து அவதானமாக இருக்குமாறும் மக்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.(ச)

**உதயன்**
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## இந்தியாவும் பதின்மூன்றும் எந்நிலை கண்டேகுமோ...?

இந்திய அரசாங்கத்தின் தேசிய பாதுகாப்பு ஆலோசகரும் பிரபல ராஜதந்திரியுமான சிவ்சங்கர் மேனன், இன்று காலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து முக்கிய பேச்சு நடத்தவுள்ளார் என்பது செய்தி. இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கின் முக்கிய செய்தியை, ஜனாதிபதியிடம் கையளித்து அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தை இல்லாமல் செய்யும் இலங்கை அரசின் உத்தேச முடிவு குறித்தே பிரதானமாகப் பேசப்படும் என்பது தகவல்.

இந்திய அரசும், இலங்கை அரசும் 1987 ஆம் ஆண்டில் பெற்றெடுத்த இருபத்தாறு வயது வாலிபன் - அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தம். அது அனைத்துலக அந்தஸ்துள்ள ஒப்பந்தம். அதில் வகை செய்யப்பட்டுள்ள-இதுவரை எவ்வகையிலும் தீண்டப்படாது இருந்த காணி, பொலிஸ் அதிகாரங்களை நறுக்கி எறிந்துவிட மஹிந்த அரசு உத்தேசித்துள்ளது.

அது குறித்து இறுதி முடிவு செய்வதற்கு உருவாக்கப்பட்ட, (தமிழ் மக்களின் பிரதான பிரதிநிதித்துவக் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இல்லாத-புறக்கணித்துள்ள) நாடாளுமன்றத் தெரிவுக் குழுவும் இன்று முதல் முறையாகக் கூடுகிறது.

''சகுனம்'' பார்த்து வந்தது போன்று, இந்தியப் பிரதமரின் சிறப்புத் தூதுவர் சிவ்சங்கர் மேனன் இலங்கை அரச தலைவருடன், மிக முக்கியமான பதின்மூன்றாவது திருத்தம் குறித்து தமது அரச தரப்பின் நிலைப்பாட்டை அழுத்தி (உறுக்கிச்) சொல்வதற்கென விசேட ஒப்படைப்புப் பணி (Assignment) உடன் கொழும்பு வந்துள்ளார்.

மாகாண சபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதால் உண்டாகக்கூடிய பாதிப்புகள் குறித்து பஸில் விளக்கினார் என்றும், இந்தியா அதனைக் காதில் போட்டுக் கொள்வதற்கு தயாராக இருக்கவில்லை என்றும் தனது நிலைப்பாட்டில் உறுதியாக இருந்ததாகவும் கூறப்படுகிறது.

எனினும், தன்னைப் புறக்கணித்துவிட்டு, அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தில் இலங்கை அரசு கை வைத்தாலும் இந்தியாவின் அழுத்தம், நவம்பர் மாதத்தில் கொழும்பில் நடைபெற உள்ள பொதுநலவாய மாநாட்டை பகிஷ்கரிப்பதோடு மட்டுப்படுத்தப்படும் என்ற ஊகங்களும் எழுந்துள்ளன. அவற்றை முற்றாகப் புறந்தள்ளவும் முடியாது; உள்வாங்கவும் முடியாது.

மாகாண சபை முறை, இந்திய-இலங்கை ஒப்பந்தம் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டது என்ற எடுகோளின் பின்னணியிலேயே, இந்திய அரசு இது விடயத்தில் கீழிறங்குவதற்குத் தயாராக இல்லை என்பது புலனாகிறது. பதின்மூன்றாவது திருத்தத்துக்கு அப்பாலும் சென்று தமிழர்களுக்கு அதிகாரங்கள் பகிரப்படவேண்டும் என்று இந்தியா வலியுறுத்தி வந்தமையும் இங்கே கருத்தில், கணக்கில் கொள்ளப்படவேண்டியதாகும்.

வடமாகாண சபைத் தேர்தலை நடத்தப்போவதாக அரசு அறிவித்துள்ள நிலையில், அதற்கு முன்னர் காணி, பொலிஸ் அதிகாரங்களைத் தட்டிக் கொட்டும் உத்வேகம் குறையும், பின்னர் ஓங்கி உயர எழும் என்ற கருத்தும் பரவலாக வெளிப்பட்டுள்ளது.

இறைமை உள்ள இரண்டு நாடுகளுக்கு இடையே செய்யப்படும் ஒப்பந்தம் சம்பந்தப்பட்ட நாடுகளைக் கட்டுப்படுத்தும். அதில் திருத்தம் செய்ய வேண்டும் என்று ஒரு நாடு கருதுமானால், அடுத்த நாட்டுடன் கலந்தாலோசித்தே அவ்வாறு செய்ய முடியும். இரண்டில் எந்த ஒரு நாடும் தன்னிச்சையாக திருத்தம் செய்ய முடியாது என்ற நிலைப்பாட்டை இந்தியா வெளிப்படுத்தி உள்ளது.

ஆனால், மாகாண சபைகளுக்கு உள்ள காணி, பொலிஸ் அதிகாரங்களை முற்று முழுதாகத் தட்டிப் பறிக்க வேண்டும் என்று கிளர்ந்து எழுந்து பிரசாரம் செய்யும் மஹிந்த அரசின் தோழமைக் கட்சிகளும், சிங்களக் கடும் கோட்பாட்டாளர்களும் இதனை உள்வாங்கிக் கொள்வார்களா என்பது சந்தேகத்திலும் சந்தேகமே.

இவற்றுக்கிடையே, அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தில் மாற்றம் செய்வது குறித்து நாடாளுமன்றத் தெரிவுக் குழு இறுதி முடிவு எடுக்கும் என்று அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கூறியிருப்பது, கிணற்றுக்குள் கல் எறிந்து தெளிந்த நீரைக் கலக்கிக் குழப்புவதாகவே உள்ளது.

இலங்கை அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தில், எம்நாட்டு அரசு கை வைக்குமெனில், அது தனக்கு ஒரு கௌரவப் பிரச்சினை என்று இந்திய அரசு கருதுகிறது எனலாம். அதன் விளைவாக பிராந்திய நாடுகள் தன்மீது கொண்டுள்ள நம்பிக்கையை இழந்துவிடும் என்ற அச்சமும் உள்ளது. எனினும் அதற்கு இடமளிக்க அது தயாரில்லை. தமிழ்ப் பிரதேசங்களில் நடைபெற்ற இறுதிப் போரின் போது, இந்தியா செயற்பட்ட விதம், போக்கு ஏமாற்றம் தருவதாகவே அமைந்தது.

அதற்கான சிறிய உபகாரமாவேனும் பதின்மூன்று மற்றும் உத்தேச பதின்மூன்று+ விவகாரத்திலாவது தமிழ் மக்களுக்கு உதவும் வகையில் இந்தியா செயற்படுமா என்பதனைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

# மத்தியிலும் வெற்றிலை; மாநிலத்திலும் வெற்றிலை; இக்கட்டில் டக்ளஸ்

க.கோணேஸ்

பதின்மூன்றாம் திருத்தச்சட்ட விவகாரம் குளிக்கப்போய் சேறுபூசியகதையாகிவிடுமோ என்ற அச்சத்தில் இலங்கை அரசு தடுமாறிக்கொண்டிருக்கிறது. தான் கொண்ட இலக்கு தவறவும் கூடாது; தன் மீது சேறுபடவும் கூடாது என்பதில் மிகக்கவனமாகச் செயற்படத் தொடங்கியுள்ளது அது.

தான் எதிர்பார்த்தபடி பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்துக்கான திருத்தம் அவ்வளவு இலகுவான காரியமல்ல என்பது இப்போது அரசுக்குத் தெரிந்திருக்கும். மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இருந்தால் எதையும் சாதித்துவிடலாம் என்ற கருதுகோளும் நிர்மூலமாகிப்போகலாம் என்பது புரியத் தொடங்கியிருக்கும். தங்களை அரச குடும்பமாகப் பாவிக்கும் இயல்பு ஜனாதிபதியிடம் ஆரம்ப நாள்கள் தொடக்கம் இருந்தே வருகிறது. தந்தைக்குப்பின் தனையன்கள், அதன் பிறகு அவர்தம் தனையன் என பரம்பரை தொடர்வதற்கான வழிவகைகள் திட்டமிட்டே செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

பண்டாரநாயக்க குடும்பமும் அரசியற்குடும்பமாகவே அமைந்திருந்த போதிலும், மஹிந்த குடும்பத்துடன் ஒப்பிடுகையில் அவர்களிடம் எதுவும் இல்லை என்றாகிவிட்டது. ஸ்ரீமாவோ அம்மையார் விரும்பி அரசியலுக்கு வந்தவர் என்றோ, பண்டாரநாயக்காவால் அறிமுகப்படுத்தப்பட்டவர் என்றோ சொல்வதற்கில்லை. பண்டாரநாயக்கா கொல்லப்பட்டதைத் தொடர்ந்து கட்சியைச் சேர்ந்தவர்களின் நெருக்குதல் காரணமாகவே அவர் அரசியலுக்கு வந்தவர்.

சந்திரிகாகூட அரசியலில் ஆர்வம் கொண்டிருந்தார் என்றுகூற முடியாது. கணவரின் அரசியல், கணவருக்கு நேர்ந்த துயரச்சாவு, தந்தைக்கு நேர்ந்த படுபாதகம், ஐக்கிய தேசியக்கட்சி அரசினால் அவருக்கு நேர்ந்த நெருக்குதல்கள் என்பவையே அவரை அரசியலுக்கு இழுத்துவந்தன. அவரது தம்பி அநுர பண்டாரநாயக்காவும் அரசியலில் இருந்தாராயினும் அவர் அக்காவின் பாதையில் பயணம் செய்ய முன்வரவில்லை. இந்தக் குடும்பத்தின் அரசியல் வருகை அவரவர் தனிப்பட்ட நிகழ்வுகளாகவே பெரும்பாலும் அமைந்திருந்தன. ஆனால், மஹிந்த குடும்ப அரசியல் அவ்வாறன்று.

ராஜபக்ஷ குடும்பத்தாரின் அரசியல், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தொடக்கக்கால உறவுகளைக் கொண்டது. ஆனால், மஹிந்தவினால் பிரசாரப்படுத்தப்பட்டு வந்ததுபோல மஹிந்தவின் தந்தை ராஜபக்ஷ ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஸ்தாபக உறுப்பினராக இருக்கவில்லை. இதனைப் பின்னாளில் மஹிந்தவிடமே சந்திரிகா உறுதிபடத் தெரிவித்தபோது அவர் அமைதியாகவே இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மஹிந்த, தந்தையின் பின்னணியில் இளவயதிலேயே அரசியலுக்கு வந்தவர். அரசியல் நெளிவுசுழிவுகளை நன்கு அறிந்தவர். தருணம்பார்த்து சந்திரிகாவைக் கொண்டே தன்னை உயர்த்திக்கொண்டவர். தான் உயர்ந்ததும் சந்திரிகாவையே உதைத்துத்தள்ளியவர். தன் அரசியல் உயர்வுடன் குடும்ப உறவுகளையும் அரசியல் ரீதியாக அதிகாரம் மிக்கவர்களாக மாற்றிவைத்தவர். தன்னைபோலவே தன் இளவயது மகனையும் அரசியலுக்கு அழைத்து வந்து பிரமுகராக்கி அழகு பார்ப்பவர். ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்பட வேண்டும் எனக்கூறி ஜனாதிபதியான சந்திரிகா கடைசி மணித்துளிவரை அதன் அதிகாரப்போதையை அணு அணுவாகச்சுவைத்துமகிழ்ந்ததுபோலவே இன்றைய ஜனாதிபதியும் காணப்படுகிறார். ஜனாதிபதிக்குரிய அதிகாரங்களைத் தனது அரசியல் ஸ்திரத்துக்குப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்.

சாதாரண பெரும்பான்மையுடன் ஆட்சியைப்பிடித்த தனதுஅணிக்குப் பலம்சேர்ப்பதற்காக எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தன்பக்கம் இழுப்பதில் வல்லவராகவே செயற்பட்டார். அவரவர் தகுதிக்கும், இயல்புக்கும் ஏற்ப விலையுங்கொடுத்தார். பலம் பொருந்திய அரசியல் அணியை உருவாக்கிக்கொண்டார்.

தமிழர் போராட்டத்தை கடுமையாக நசுக்கியவர் என்ற பெருமையும் சிங்களமக்களிடையே ஜனாதிபதிக்கு உண்டு. தனக்கு நிகராகப் பெயர் பெற்றுவிட்டார் என்ற ஒரே காரணத்துக்காக படைத்தளபதி சரத்பொன்சேகாவை திட்டமிட்டுத் தட்டித் தலையெடுக்காதபடி ஒடுக்கிய தந்திரசாலி இவர். முஸ்லிம்களைப் பொறுத்தமட்டில் ஜனாதிபதி எல்லாம் வல்லவராகவே இருந்துவருகிறார். அவரைப் பகைத்தால் தமது அரசியல் வாழ்வு அஸ்தமனமாகிவிடும் என்ற பயம் சகல முஸ்லிம் அரசியல்வாதிகளையும் ஆட்டிப் படைக்கிறது.

இதேவேளை, வடக்கில் 'மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி' என்றவர்கள், மெல்ல மெல்ல 'மத்தியிலும் வெற்றிலை மாநிலத்திலும் வெற்றிலை' என்ற நிலைக்கு வந்துவிட்டார்கள். பதின்மூன்றாவது அரசியற் திருத்தம் தொடர்பாக அரசு எடுத்திருக்கும் நிலைப்பாட்டுக்கு ஹக்கீம் கொந்தளித்த அளவுக்குக்கூட கவலை வெளியிட முடியாத நிலையில் அமைச்சர் டக்ளஸ் இருக்கிறார்.

அபரிதமான எடுபிடிகளையும் அளவுக்கதிகமான அமைச்சர்களைக் கொண்ட மந்திரி சபையையும் தன்னகத்தே வைத்துக்கொண்டிருக்கின்ற அரச தலைவரும் அவரது குழுவினரும், ஐக்கிய தேசியக் கட்சியின் கையாலாகாத்தனத்தில் உறுதியான நம்பிக்கை வைத்து மனம்போனபடி ஆடிய ஆட்டத்தின் ஒருமுனைதான் பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தில் மாற்றம் தொடர்பான முயற்சி.

இதற்கு முதலில் அரசதரப்பிலிருக்கும் எடுபிடி அமைச்சர்களே பயன்படுத்தப்பட்டார்கள். சம்பிக்கரணவக்க, விமல் வீரவன்ஸ போன்றோர் ஆள் ஆளுக்கு கருத்துக்களை அவ்வப்போது வெளியிட்டு வந்தார்கள். தமிழர்களால் சிங்கள இனத்துக்கே ஆபத்து, அதற்கு வடக்கில் நிறுவப்படவிருக்கும் மாகாண சபை பயன்படப்போகிறது, அதற்கு முன்னர் மாகாணசபை அதிகாரங்களைக்குறைத்துவிடவேண்டும், அல்லது மாகாணசபைகள் சட்டத்தையே நீக்கிவிடல் வேண்டும் என்பவையே இவர்களின் கருப்பொருளாக அமைந்தன. அவற்றுக்கிசைவாக பொதுபலசேனா, சிங்களராவய போன்ற அமைப்புகள் வலிந்து அரசால் உருவாக்கப்பட்டு போஷிக்கப்பட்டு வருகின்றன. அவர்களூடாகச் சிங்கள இனத்துக்கு எழுச்சி ஊட்டப்பட்டு வருகிறது.

ஜனாதிபதியின் பார்வையில் தமிழர் தரப்பின் எதிர்ப்பு மட்டும்தான் இவ்விடயத்தில் தோன்றும் என எதிர்ப்பார்த்திருக்கின்றார். தமிழருக்கான உரிமை மறுப்பு என்ற வாதம் ஐக்கிய தேசியக்கட்சியின் ஆதரவை மறைமுகமாகவேனும் பெற்றுத்தரும் என நம்பியிருக்கின்றார். ஆளுங்கட்சி உறுப்பினர் அனைவரும் தனது செயற்பாட்டுக்கு கைகட்டி, வாய்பொத்தி ஆதரவு தருவார்கள் எனத் திடமாக எண்ணியிருக்கிறார்.

தமிழர்தரப்பின் எதிர்ப்புகளை மதிக்காமல் பாரிய சட்டங்களைக் கொண்டு வந்து அரங்கேற்றும் பண்பாடு இலங்கையில் சுதந்திரகாலந்தொட்டே நடைமுறையிலிருந்து வருகிறது. இதற்கு ஜனநாயகம் என்ற பெயரும் இலங்கை அரசால் வழங்கப்படுகிறது. தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராடியபோது சிங்களஅரசு சில சந்தர்ப்பங்களில் தாங்கள் முன்னர் விட்ட பிழைகளால்தான் தமிழர்கள் படைநடத்தும் ஆபத்தை எதிர்கொள்ள வேண்டியவர்களானோம் என்பதை உணர்ந்து வருந்தினாலுங்கூட முள்ளிவாய்க்கால் அவலத்தின்பின் அந்த வருந்துதல்களும் அற்றுப்போய்விட்ட நிலையில் சிங்கள ஜனநாயக முறைமை மீண்டும் கைக்கொள்ளப்படத் தொடங்கியுள்ளது.

தமிழர்கள் மாகாணசபை அதிகாரத்தைக் கைப்பற்றினால் நாட்டைப் பிளவுப்படுத்தி விடுவார்களென்று பச்சையாகவே சொல்கிற அளவுக்கு இலங்கை அரசின் இனவாதம் முற்றிப் போய்க் கிடக்கிறது. இத்தகைய இனவாதத்தால் அரசுக்குள்ளேயே முறுகல்நிலை ஏற்படத் தொடங்கியிருக்கிறது. தனக்கு எதிராக எவரும் கையுர்த்தமாட்டார்கள் என்ற நம்பிக்கையிலிருந்த ஜனாதிபதி அமைச்சரவைக்குள்ளேயே தனக்கு எதிரான அணி தலையெடுத்திருப்பதால் செய்வதறியாது திகைத்துப்போயுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர்ப்பு, ஐக்கிய தேசியக்கட்சியின் எதிர்ப்பு, அரசுக்குள்ளேயே தலையெடுத்துள்ள கசப்பு, எவர் எந்நேரமும் தனக்கு எதிராகச் செயற்படலாம் என்ற நினைப்பு என்பவற்றால் ஜனாதிபதி நிலை குலைந்து போயிருக்கிறார். பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்துக்கு எதிரான பிரேரணையொன்று கொண்டுவரப்படின் அதற்கு மூன்றிலிரண்டு பங்கு பெரும்பான்மை கிடைக்குமா என்ற சந்தேகமும் ஜனாதிபதியிடம் எழுந்திருக்கிறது. கோத்தபாய, ரம்புக்வெல, விமல் வீரவன்ஸ, சம்பிக்கரணவக்க ஆகியோருடன் பொதுபலசேனா, சிகலராவய என்பவை பகிரங்கமாக இந்தியாவுக்கு எதிரான கருத்துகளை கக்கிக்கொண்டிருக்கின்ற நிலையிலும் அவர்களை அடக்கி நெறிப்படுத்த முடியாத ஜனாதிபதி தன் தம்பியாரான பஸில் ராஜபக்வை இந்தியாவுக்கு அனுப்பி வைத்திருக்கிறார்.

எங்கள் நாட்டுக்கான தீர்வு இங்கிருந்தே உருவாகவேண்டும் என்பவர் எந்த நாடும் எங்கள் விடயத்தில் மூக்கை நுழைக்கக்கூடாது என்று சிங்கள மக்கள் மத்தியில் நின்று அடிக்கடி எச்சரிக்கை விடுபவர், பதின்மூன்றாம் திருத்தச்சட்டம் தொடர்பான விவகாரத்தை தம்பியாரின் கையிற்கொடுத்து மன்மோகன்சிங்கின் மூக்குக்கு நேரே பிடித்து அவரது அபிப்பிராயத்தைப் பெற்றுவரும்படி அனுப்பியிருக்கிறார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மன்மோகன்சிங்குடன் பேச்சு நடத்தியபோது, நாட்டின் இறைமையைக் கொண்டு போய் அந்நியநாட்டுக்குத் தாரை வார்க்கிறார்கள் என்று சொன்னவர்கள், ஜனாதிபதியே நாட்டின் இறைமையைத் தம்பியிடம் கொடுத்து இந்தியாவுக்கு அனுப்பி வைத்திருப்பதற்கு என்ன சொல்லப்போகிறார்கள்.

தமிழர்களுடன் பேச்சு நடத்தி உகந்த ஒரு தீர்வைப் பெற்றுக்கொள்ள விரும்பாமல் பிறநாடுகளிடம் சரணடைகின்ற அரசியல் நடைமுறை தொடர்ந்தும் இலங்கைக்குத் தேவைதானா? சிங்கள மக்கள் சிந்திக்கவேண்டிய நேரம் இது.

# ஆறாத வடுவாய்.....


மு.கணபதி

திடீரென வந்த விமானங்கள் மூலம் 13 குண்டுகளை தொடர்ச்சியாக இரு ஆலயங்கள் மீதும் பொழிந்தன. சிறிது நேரத்தில் கரும்புகை மூட்டத்துக்குள் அவலக்குரல்கள் அந்தப் பகுதியை அதிர வைத்தன.

நவாலி சென்ற் பீற்றர்ஸ் தேவாலயம் மீதான தாக்குதலின் 18 ஆம் ஆண்டு நினைவு தினம் இன்றாகும்.
வரலாற்றில் இரத்தக்கறை படிந்த அந்த நாளின் துன்ப, துயரங்களை இலகுவில் மறந்துவிடமுடியாது.
முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க ஆட்சிப் பொறுப்பேற்றுக் குறுகிய காலத்தில் மேற்கொள்ளப்பட்ட தமிழர் மீதான இனப்படுகொலை அதுவாகும்.
இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான மூன்று விமானங்கள் இந்தக் கோரத் தாக்குதலை மேற்கொண்டன.
லீப்போர்வேர்ட் (Leapforward) என்ற முன்னேறிப் பாய்தல் இராணுவ நடவடிக்கையை யாழ். குடாப் பகுதியில் வலிகாமம் ஊடாக ஆரம்பித்தனர் இராணுவத்தினர்.
பலாலி இராணுவ முகாமிலிருந்தும்–அளவெட்டி, மாசியப்பிட்டி பகுதிகளிலிருந்தும் ஊர்மனைகளை நோக்கி நாலாபுறமும் மிகக் கொடூரமான முறையில் எறிகணைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.



1995 ஆம் ஆண்டு, ஜூலை மாதம் 09 ஆம் திகதியன்று வலிகாமம் தென்மேற்கு , வலி.மேற்கு, வலி. தெற்கு, வலி.வடக்கு பகுதிகளில் உள்ள மக்கள் குடியிருப்புக்கள் நோக்கி அதிகாலை 5.40 மணியில் இருந்து மும்முனைத் தாக்குதல்கள் படையினரால் மேற்கொள்ளப்பட்டன.
அன்றைய தினம் காலை வலிகாமம் பகுதியில் உள்ள மக்கள் பல உறவுகளை ஏற்கனவே இழந்த நிலையில் உடுத்த உடைகளுடனும், கையில் அகப்பட்ட உடைமைகளுடனும் கண்ணீரும் கம்பலையுமாக இடம்பெயர்ந்து கொண்டிருந்தனர். மாட்டு வண்டில்களிலும், சைக்கிள்களிலும், கால்நடையாகவும், லான்ட் மாஸ்ரர்களிலும் வட்டுக்கோட்டை, சங்கரத்தை , நவாலி, வழுக்கையாறு வெளி, நவாலி , ஆனைக்கோட்டை –மானிப்பாய் பிரதான வீதி ஆகியவற்றின் வழியாக அவர்கள் சென்றனர்.
அவ்வேளையில் சகல வீதிகளிலும் தாக்குதல்கள் வகை தொகையின்றி தாறுமாறாக நடந்தேறிக் கொண்டிருந்தன.
வீதிக்கு வீதி சடலங்கள், காயமடைந்தவர்களை எடுத்துச்செல்லக் கூடிய அளவுக்கு வாகன வசதிகளோ, மருந்தகங்களோ வைத்தியசாலைகளோ இல்லை.
காயமடைந்தவர்கள் சிகிச்சை இன்றி, சிகிச்சைகள் பயனின்றி சாவடைந்த கொடுமைகளும் நிகழ்ந்தன.
அன்றைய தினம் குடாநாட்டின் பல்வேறு வீதிகளின் ஊடாக வந்து சேர்ந்த பொதுமக்கள் நவாலி ஸ்ரீ கதிர்காம முருகன் ஆலயத்திலும், நவாலி சென்ற் பீற்றர்ஸ் தேவாலயத்திலும் பெருந்தொகையாகத் தஞ்சமடைந்திருந்தனர்.
அவ்வேளையில் திடீரென வந்த விமானங்கள் 13 குண்டுகளை தொடர்ச்சியாக இரு ஆலயங்கள் மீதும் பொழிந்தன.
சிறிது நேரத்தில் கரும்புகை மூட்டத்துக்குள் அவலக்குரல்கள் அந்தப் பகுதியை அதிர வைத்தன.
147 பேர் உடல் சிதறி, கையிழந்து, கால் இழந்து, தலையிழந்து குற்றுயிராய் கிடந்த கொடூரக்காட்சி இன ஒழிப்பு நடவடிக்கைக்கு சாட்சியாக அதிர வைத்தன.
இந்தக் கொடூர சம்பவத்தில் 147 பேர் அந்த இடத்தில் உயிரிழந்தனர்.
இதில் இடம்பெயர் மக்கள் சேவையில் நேரடியாக ஈடுபட்டிருந்த வலி.தென்மேற்கு பிரதேச செயலக இரு கிராம அலுவலர்களான நவாலி வடக்கு செல்வி. ஹேமலதா செல்வராஜா, சில்லாலை கிராம அலுவலர் பி.கபிரியேல்பிள்ளை ஆகியோர் பணியின் போது உடல் சிதறி சாவடைந்தனர்.
இவர்களது ஞாபகார்த்தமாக நவாலி சென்ற்.பீற்றர்ஸ் தேவாலயத்தில் ஆலய பங்குத் தந்தை தலைமையில் இன்றைய தினம் 5.30 மணியளவிலும், நவாலி ஸ்ரீ. கதிர்காம முருகன் ஆலயத்தில் மாலை 5 மணிக்கும் விசேட வழிபாடுகள் இடம்பெறும்.
இந்தத் தாக்குதலின் நினைவாக நவாலி வடக்கு புலவர் வீதியிலும், நவாலி சென்ற் பீற்றர்ஸ் ஆலய வீதியிலும் நினைவுச் சின்னங்கள் உருவாக்கப்பட்டு வருடந்தோறும் நினைவு வழிபாடுகள் இடம்பெறுகின்றன.



நவாலி சென்.பீற்றர்ஸ் தேவா லயம் மீது புக்காரா விமானம் நடத்தியபோது தாக்குதலின் 147 பொது மக்கள் கொல்லப்பட்ட 18 ஆவது நினைவுநாள் இன்றாகும்.

# நிலவை ரசிக்கலாம் வாங்க.....

ராசிக்

காதல்வசப்பட்டவர்களுக்கு மட்டுமல்ல எல்லோருக்குமே பொதுவாகப் பிடித்த ஒன்று தான் இந்த நிலா. பல கவிஞர்களை வாழ வைத்ததும் இந்த நிலாதான். நிலவைக் காட்டிச் சோறூட்டிய என் அம்மா முதல் என் பிள்ளைக்காக நிலவைத் தேடும் என் மனைவி வரை அனைவருக்கும் அழகாக் காட்சி அளிக்கும் இந்த நிலவின் ரகசியங்கள் சிலவற்றை பார்க்கலாம்...

**சில அறிவியல் குறிப்புகள்:**
நிலவில் வளி மண்டலம் கிடையாது. காற்றோ வானிலை மற்றமோ அங்கில்லை.2009 இல்தான் நிலவில் தண்ணீர் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. நிலவுக்குச் சென்றவர்களின் காலடித்தடங்கள் 10 மில்லியன் வருடங்கள் அழியாமல் இருக்குமாம்.இதற்குக் காரணம் நிலவில் மண் அரிப்போ காற்றோ இல்லை என்பதாகும்.நிலவின் ஒரு முகத்தை மட்டும் தான் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம், பார்க்கவும் முடியும். நிலவின் மறு முகத்தை செயற்கை கோள்கள் மட்டும் தான் இதுவரை படம் பிடித்துள்ளன.
நிலவு பூமியிலிருந்து சுமார் 250,000 மைல்கள் (384,400 கிலோமீட்டர்கள்) தொலைவில் உள்ளது. இந்தத் தூரத்தை நாம் உணர்ந்துகொள்ள இப்படி எடுத்துக் கொள்ளலாம். ஒரு காரில் 125 கிமி/மணி வேகத்தில் சென்றால் 130 நாள்களில் நாம் நிலவைச் சென்றடையலாம். ரொக்கட்டில் 13 மணி நேரத்திலும், ஒளி வேகத்தில் 1.52 நொடிகளிலும் நிலவைச் சென்றடையலாம்.

**நிலவின் படிநிலைகள் பற்றியச் சில குறிப்புகள்:**
அமாவாசையிலிருந்து வளரும் நிலா ஏழாவது நாளில் சுற்றின் முதல் கால்பகுதியில் (அரைவட்ட நிலாவாக) இருக்கும். பதினைந்தாவது நாளில் முழு பௌர்ணமியாகும். பின் தேயத் துவங்கும். இருபத்தி மூன்றாவது நாளில் இறுதிக் கால்பகுதியில் (அரைவட்ட நிலவாக) இருக்கும். மீண்டும் ஓர் அமாவாசையில் ஒளியிழந்து அடுத்தச் சுற்றிற்காக ஆயத்தமாகும்.
சூரியனைப் போல் சந்திரனும் கிழக்கில் உதித்து மேற்கில் மறையும். உதிக்கும் மற்றும் மறையும் நேரம் மட்டும் நாளுக்கு நாள் மாறுபடும். அமாவாசை அன்று சூரியன் உதிக்கும் அதே நேரத்தில் சந்திரனும் உதித்து, சூரியன் மறையும் அதே நேரத்தில் மறைந்து விடும்.அடுத்த நாள் சூரியனை விட சற்று தாமதமாக உதித்து சற்று தாமதமாக மறையும். அதனால் தான் முதல் பிறையை மேற்கு வானில் மறையும் பொழுது சற்று நேரம் பார்க்க முடிகிறது. இரண்டாவது நாள் இன்னும் சற்று தாமதமாகி மீண்டும் மேற்கு வானில் மறையும் நேரத்தில் பார்க்க முடியும்.



பௌர்ணமி அன்று சூரியன் மறையும் நேரத்தில் முழு நிலவு (பௌர்ணமி நிலவு) உதித்து, அடுத்த நாள் காலை சூரியன் உதிக்கும் நேரத்தில் மறையும். ஆகையால் முழு நிலவை இரவு முழுவதும் பார்த்து ரசிக்கலாம்.
இறுதி அரைவட்ட நிலா நள்ளிரவில் உதித்து நன்பகலில் மறையும். சந்திர மாதத்தின் கடைசி நாள்கள் வர வர நிலவு உதிக்கும் நேரம் நள்ளிரவையும் தாண்டியிருப்பதால் அந்த நாள்களில் நாம் நிலவைப் பார்க்க வேண்டுமென்றால் இரவில் கண் விழிக்கவேண்டும்.
பௌர்ணமிக்குப் பின் வரும் நாள்களில், நிலவு உதிக்கும் நேரம் சூரியன் மறைந்த நேரத்திலிருந்து சற்று தாமதமாகி தாமதமாகி இறுதிக் கால்பகுதிக்குப் பின் சூரியன் உதிக்கும் சில மணி நேரத்திற்கு முன்னர் தான் நிலவைப் பார்க்க முடியும்.
இவ்வாறு தாமதமாக உதித்து வரும் சந்திரன் அமாவாசை அன்று மீண்டும் அடுத்த சுற்றிற்காக தயாராகி விடும். அதாவது நிலவின் உதயம் மற்றும் மறையும் நேரம் சூரியனை ஒத்திருக்கும்.
ஓர் அமாவாசையிலிருந்து மறு அமாவாசை வரை கணக்கிடப்படும் சந்திரனின் ஒரு முழுச் சுற்று ஞாயிற்று வழிமாதம் அல்லது சந்திர மாதம் எனப்படும்.
இதற்காக ஆகும் காலம் 29.5 நாள்கள். துல்லியமாகச் சொல்லப் போனால், 29 நாள்கள், 12 மணிகள், 43 நிமிடங்கள், 11.6 நொடிகள் ஆகும்.
பூமியைச் சுற்றி வர, சுற்றைத் தொடங்கிய இடத்திலிருந்து மீண்டும் அதே இடத்துக்கு 27 நாள்கள் (27 நாள்கள், 7 மணிகள், 43 நிமிடங்கள், 11.6 நொடிகள்) எடுத்துக் கொள்கிறது. இது வானக மாதம் எனப்படுகிறது.
தினந்தோறும் வளர்ந்தும் தேய்ந்தும் வரும் நிலவினால் பூமியில் பல மாறுதல்கள் ஏற்படுகின்றன. நிலவின் ஈர்ப்பினால் தான் கடல் மட்டத்தில் அவ்வப்பொழுது ஏற்ற இறக்கங்கள் காணப்படுகின்றன.

# ரயர் சந்தையில் 30 வீத இடத்தை பிடித்த சியெட் ரேடியல் ரயர்கள்

மே மாதத்தில் சியெட் களனி ஹோல்டிங்ஸ் நிறுவனம் பயணிகள் கார் மற்றும் வான்களுக்கான ரேடியல் ரயர் விற்பனையில் புதிய சாதனை படைத்துள்ளது.

இதன் மூலம் இலங்கையில் வாயு மூல ரயர் உற்பத்தியில் தலைமை வகிக்கும் நிறுவனமான இந்நிறுவனம், உள்ளூர் ரேடியல் சந்தைத் தேவையில் 30 வீதத்துக்கும் அதிகமான தேவையைப் பூர்த்தி செய்யும் நிலையை அடைந்துள்ளது.

சியெட் ரேடியல் ரயர்களின் மே மாத விற்பனை 20 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது. நாட்டில் ஆகக் கூடுதலான அளவில் விற்பனையாகும் ரேடியல் ரயர்கள் இவையே என்ற நிலை இதன் மூலம் ஏற்பட்டுள்ளது.

விற்பனையில் ஒரு மாதத்துக்கு 20 ஆயிரத்துக்கும் அதிகமான தொகையைக் கடப்பது என்பது உண்மையில் ஒரு மைல் கல்லாகும். நாம் இந்த வளர்ச்சியை எதிர்ப்பார்த்தோம். எமது ஆற்றலை இரட்டிப்பாக்கும் திட்டத்தையும் ஏற்கனவே நாம் வகுத்துள்ளோம் என்று கூறினார் சியெட் களனியின் முகாமைத்துவப் பணிப்பாளர் ராமன் ராஜகோபாலன்.

கார் மற்றும் வான்களுக்கான பிரிவுகளில் நாம் பல புதிய அளவுகளை அறிமுகம் செய்துள்ளோம். இது வளர்ச்சிக்கு வழிவகுத்துள்ளது. என்றுயின் வருடாந்த வருமானத்தில் 20 வீத ரேடியல் ரயர் விற்பனையால் பெறப்படுகின்றது, கார்களுக்கும் ஏனைய வாகனங்களுக்குமான பல புதிய அளவுகள் இன்னும் வெளிவரக் காத்திருப்பதால் எமது விற்பனைகள் அதிகரிப்பதோடு சந்தைப் பங்கும் கணிசமாக அதிகரிக்கும் என்று நம்புகின்றோம் என்று கூறினார்.

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் ரேடியல் ரயர்கள் இன்னும் 14 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. உள்ளூரில் எமது ஆற்றல் மற்றும் கொள்வனவு என்பன விருத்தி செய்யப்படுவதன் மூலம் அது சர்வதேச சந்தைத் தேவைகளுக்கும் ஈடுகொடுக்கக் கூடியதாக அமையும் என்று அவர் மேலும் விளக்கினார்.


இலங்கையில் தற்போது சியெட் ரேடியல் ரயர்களைப் பாவிப்பவர்களின் எண்ணிக்கை 850,000 ஆக உள்ளது. உலகளாவிய பல உற்பத்திகளோடு போட்டி மிக்க ஒரு சூழலில் 90 வீத பங்களிப்பை இது நினைவு கூருகின்றது என்று கூறினார் நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனைப் பிரிவுக்குப் பொறுப்பான உப தலைவர் ரவி தத்லானி.

இலங்கையில் ரேடியல் உற்பத்தி வளங்களில் எமது விரிவாக்கம் மற்றும் தரம் உயர்த்தல் என்பனவற்றை நியாயப் படுத்தும் வகையில் இந்த அளப்பரிய




தொடர்ந்து கருத்து வெளியிட்ட ராமன் ராஜகோபாலன் இன்று சியெட் களனி முன்னேற்றம் அமைந்துள்ளது என்று அவர் மேலும் கூறினார். (த)

# ஜனசக்தி புதிய கிளை கொள்ளுப்பிட்டியில்




இலங்கையின் முன்னணி காப்புறுதி நிறுவனமான ஜனசக்தி, முற்றிலும் ஆயுள் காப்புறுதி சேவைகளை வழங்கும் நோக்கில் கொள்ளுப்பிட்டியில் தனது புதிய கிளையை திறந்துள்ளது. கொழும்பு காலி வீதியில் அமைந்துள்ள இப் புதிய கிளை வாடிக்கையாளர்களின் வசதி கருதி திறக்கப்பட்டுள்ளது. இப் புதிய கிளையை ஜனசக்தி நிறுவனத்தின் மூத்த நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் விசேட விருந்தினர்கள் பங்குபற்றலுடன் ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தின் உப தலைவர் சந்திரா ஷாஃப்ட்டர் உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தார்.

இத் திறப்பு விழாவில் கருத்து தெரிவித்த ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தின் உப தலைவர் சந்திரா ஷாஃப்ட்டர், 'தனிநபர் ஒருவர் அவரது அன்புக்குரியவர்களுக்கு பாதுகாப்பான எதிர்காலத்திற்கான திடமான அடித்தளத்தை ஏற்படுத்தும் முழுமையான முதலீடே ஆயுள் காப்பீடாகும். கொள்ளுப்பிட்டிப் பிரதேசத்தில் அமைந்துள்ள இப் புதிய கிளையை எமது ஆயுள் காப்புறுதிதாரர்கள் மற்றும் பணியாளர்களுக்கு சௌகரியத்தை வழங்கும் வகையிலும் செயற்திறன் மிக்க இடமாகவும் உருவாக்கியுள்ளோம்' என்றார்.

ஜனசக்தி நிறுவனத்தின் மூலம் வாழ்நாள் முழுவதும் ஓய்வூதிய அனுகூலங்களை அனுபவிக்கக்கூடிய வகையில் லைஃவ்சேவர் திட்டம் மற்றும் தனிநபர் தேவைகளுக்கு பொருந்தும் வகையில் நெகிழ்வான நிதி திட்டமாக 'ஜீவித வர்தன' போன்ற திட்டங்கள் வழங்கப்படுகின்றன.

இத் திறப்பு விழாவில் கருத்து தெரிவித்த ஜனசக்தி நிறுவனத்தின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவின் பொது முகாமையாளர் செஹாரா டி சில்வா, 'ஜனசக்தி எமது சமூகத்தின் அனைத்து பிரிவுகளுக்கும் சேவையாற்றுகிறது. இதன் காரணமாகவே எமது வலையமைப்பு நாடு முழுவதும் விஸ்தரித்துள்ளது. நாம் தொடர்ச்சியான அபிவிருத்தியையும் வசதி மற்றும் சேவைகள் அடிப்படையில் எமது வாடிக்கையாளர்களுக்கு சிறந்தவற்றை வழங்குவது குறித்தும் கவனம் செலுத்துகிறோம்' என்றார்.

## எச்.எஸ்.பி.சி நிதியுதவியில் மில்கோ ஆலை மெருகேற்றம்

MILCO®

இலங்கை அரசின் மூலம் நிர்வகிக்கப்படும் மில்கோ தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்துவதற்காக 5.5 பில்லியன் ரூபா நிதியுதவியை பிரிட்டனைத் தளமாக கொண்டியங்கும் எச்.எஸ்.பி.சி வங்கி குழுமத்திடமிருந்து பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

மில்கோ மூலம் ஹைலண்ட் பால் மா, பால் தயாரிப்புகள் போன்றன உற்பத்தி செய்யப்பட்டு இலங்கையில் விநியோகிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(த)

# சர்வதேச தரம் வாய்ந்த MSc. கற்கைகளை வழங்கும் SLIIT



இலங்கையின் முன்னணி உயர்கல்வி நிலையமான SLIIT ஆனது ஐக்கிய இராச்சியத்தின் ஷெஃபீல்ட்; ஹலாம் பல்கலைக்கழகத்துடன்

இணைந்து என்டர்பிரைஸ் அப்ளிகேஷன் டெவலப்மன்ட் பிரிவில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் அங்கீகாரம் பெற்ற MSc. பட்டதாரி கற்கைகளுக்கு புதிய மாணவர்களை இணைத்துக் கொள்கின்றது.

SLIIT ஆனது இரண்டு வருடங்களில் பூர்த்தி செய்யக்கூடியதும், நான்கு செமிஸ்டர்களைக் கொண்டதுமான முதுமாணி கற்கைகளை வழங்குகிறது. MSc. in Information Technology கற்கையானது விசேடமாக தகவல் தொழில்நுட்பம், கணினி அறிவியல் மற்றும் கணினி பொறியியல் போன்ற துறைகளை சேர்ந்த பட்டதாரிகளுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. இக் கற்கை மூலம் IT தொடர்பான தகவல்கள் வழங்கப்படுகின்றன. இப் பட்டப்படிப்பானது துறைசார் நவீன போக்குகள், IT துறையின் அபிவிருத்திகளுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளது.

மேலும் MSc. in Information Management கற்கையானது நிர்வாக அனுபவம் கொண்ட தொழில்முறை பட்டதாரிகள் மற்றும் அங்கத்தவர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இக் கற்கையானது மாணவர்களிற்கு நவீன வியாபார வளர்ச்சி மற்றும் தகவல் முகாமைத்துவ கருவிப் பயன்பாட்டு திட்டமிடல் மற்றும் தொழில்நுட்ப பயன்பாட்டுடன் முன்னேறும் வியாபார சூழ்நிலைகளை எதிர்கொள்ளக் கூடிய வகை யிலான தகவல் முகாமைத்துவ திறன்களை வழங்குகிறது.

இக் கற்கையை பூர்த்தி செய்த மாணவர்கள் தகவல் முகாமைத்துவ சிஸ்டத்தினை திறம்பட நிறுவனங்களுள் கையாள முடிவதுடன், மதிப்பீடுகள், பொருத்தமான வழிமுறைகள் மற்றும் தொழில் நுட்பங்களை மாற்றியமைப்பதற்கான தகுதிகளையும் பெற்றுக்கொள்வர்.

SLIIT CB MSc. in Information Systems கற்கையானது IT துறையில் உயர் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள் மற்றும் வணிகத்தில் அதன் வெற்றிகரமான ஒருங்கிணைப்பு குறித்து கவனம் செலுத்துகிறது. நவீன வணிக நிறுவனங்களின் தகவல் தொழில்நுட்ப பயன்பாட்டு முகாமைத்துவத்திற்கு வணிக மற்றும் தொழில்நுட்ப நிபுணர்களின் அவசியம் காணப்படுகிறது. .

> இக் கற்கையானது மாணவர்களுக்கு நவீன வியாபார வளர்ச்சி மற்றும் தகவல் முகாமைத்துவ கருவிப் பயன்பாட்டு திட்டமிடல் மற்றும் தொழில்நுட்ப பயன்பாட்டுடன் முன்னேறும் வியாபார சூழ்நிலைகளை எதிர்கொள்ள கூடிய வகையிலான தகவல் முகாமைத்துவ திறன்களை வழங்குகிறது.

# திறந்து வைக்கப்படவுள்ள பனைசார் பயிற்சி நிலையங்கள்



கிளிநொச்சி, ஜூலை 9
கிளிநொச்சி மாவட்டத்தில் பனைசார் உற்பத்திப் பொருள்களுக்கான இரண்டு பயிற்சி நிலையங்கள் நாளை புதன்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளன.

பனைசார் உற்பத்தியாளர்களுக்கு நவீன முறையிலான புதிய பயிற்சித் திட்டங்களை அறிமுகப்படுத்துவதுடன் உரிய சந்தை வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்படும் இந்தப் பயிற்சி நிலையங்களில் முதல் கட்டமாக 67 பேர் இணைந்து கொள்ளப்படவுள்ளனர்.

உருத்திரபுரம், கோரக்கன்கட்டு ஆகிய பிரதேசங்களில் ஆரம்பிக்கப்படவுள்ள இந்தப் பயிற்சி நிலையங்களில் உருத்திரபுரத்தில் 37 பயனாளிகளும், கோரக்கன்கட்டில் 30 பயனாளிகளும் பயிற்சிக்கென இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

6 மாத காலத்தைக் கொண்ட இந்தப் பயிற்சிகளை தகைமை வாய்ந்த போதனாசிரியர்கள் வழங்கவுள்ளனர்.

ஏற்கனவே பனைசார் உற்பத்தி பொருள்களைக் கொண்டு தொழில் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளவர்கள் இந்தப் பயிற்சி நெறியில் இணைத்துக் கொள்ளப்படுவர்.

போதனாசிரியர்கள் ஊடாக வழங்கப்படும் இந்தப் பயிற்சிகளால் நாடளாவிய ரீதியில் மட்டுமல்லாது வெளிநாடுகளிலும் சந்தை வாய்ப்பைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் உற்பத்திப் பொருள்களைத் தயாரிக்கக் கூடியதாக இருக்குமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-14)

## குடிதண்ணீர் நெருக்கடிக்குள் துணுக்காய்

துணுக்காய், ஜூலை 9
துணுக்காயில் அமைந்துள்ள புத்துவெட்டுவான் கிராமத்தில் குடிதண்ணீர் நெருக்கடி காணப்படுகின்றது.

மேலும் சுமார் 70 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கின்ற இந்தக் கிராமத்தில் ஏற்பட்டுள்ள நீர்த் தட்டுப்பாட்டினால் மேட்டு நிலப் பயிர்ச் செய்கையும் பாதிக்கப்பட்டுள்ளதாக மீளக்குடியமர்ந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

மருத்துவம், போக்குவரத்து ஆகிய இந்தக் கிராமத்தின் அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்படாத நிலையில் தண்ணீர்த் தட்டுப்பாடும் கிராம மக்களை அவதிக்குள் தள்ளியுள்ளது.

மீள்குடியமர்வு இடம்பெற்ற நாளிலிருந்து இந்தக் கிராமத்தில் வசிக்கும் மக்கள் பல்வேறு இன்னல்களை எதிர் கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது இதன் உச்சக் கட்டமாக தண்ணீர்த் தட்டுப்பாடும் இந்தக் கிராமத்தில் தோன்றியுள்ளது. (க-18)



## புத்துவெட்டுவான் கிராமத்தில் திருட்டுச் சம்பவம்

துணுக்காய், ஜூலை 9
புத்துவெட்டுவான் கிராமத்திலுள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கடந்த 06 ஆம் திகதி இரவு வேளையில் இந்த வர்த்தக நிலையத்தினுள் நுழைந்த திருடர்கள் அங்கு வைக்கப்பட்டிருந்த 10 ஆயிரம் ரூபா பணத்தைத் திருடிச் சென்றதுடன் அங்கு வைக்கப்பட்டிருந்த குளிர் பானங்களைக் குடித்து விட்டு வெற்றுப்போத்தல்களை வீதியில் வீசிச் சென்றுமுள்ளனர்.

இதேவேளை தென்னிலங்கையில் இருந்து வருகை தந்து இங்கு தங்கி நின்று பல்வேறு வேலைகளில் ஈடுபட்டுள்ள வர்களின் தொலைபேசிகளும் அன்றைய தினம் திருட்டுப் போயுள்ளன.

இது தொடர்பாக ஐயன்கன்குளம் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (க-18)



வடமாகாணத் தேர்தலை எதிர்கொள்வது தொடர்பாக கிளிநொச்சியில் அமைந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனின் அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா உரையாற்று கிறார். அருகில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள் காணப்படுகின்றனர். (க-18)

## நகைகளை இழக்கும் நிலையில் விவசாயிகள்

### அடைவு வைத்தவற்றை மீட்கத் திணறல்

நெடுங்கேணி, ஜூலை 9
விவசாயச் செய்கைகளில் ஏற்பட்ட பாதிப்புக்கள் காரணமாக வவுனியா வடக்கில் உள்ள விவசாயிகள் வங்கிகளில் அடைவு வைக்கப்பட்ட நகைகளை இழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

வவுனியா வடக்கிலுள்ள நெடுங்கேணி, கனகராயன்குளம், புளியங்குளம் ஆகிய பகுதிகளிலுள்ள மக்கள் கடந்த இரண்டு ஆண்டுகளாக கடுமையான வறட்சி மற்றும் வெள்ளம் காரணமாக பயிர்ச் செய்கைகளில் நட்டத்தை எதிர்நோக்கினர். இதனால் வங்கிகளில் பெற்ற கடன்களைச் செலுத்த முடியாமலும், அடைவு வைக்கப்பட்ட நகைகளை மீளப்பெற முடியாத நிலையிலும் உள்ளனர்.

மேலும் குறுகிய கால எல்லைக்குள் வங்கிகள் மீட்கப்படாத நகைகளை ஏலத்தில் விடுவதனால் இவர்கள் பெரும் இக்கட்டான நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே போர் காரணமாகத் தமது அனைத்து உடைமைகளையும் இழந்த இந்த மக்கள் தற்போது நகைகளையும் இழக்க வேண்டிய நிலை தோன்றியுள்ளதால் கவலையில் ஆழ்ந்துள்ளதைக் காண முடிகின்றது. (க-435)

## காணாமற் போன மாணவனை மீட்பதற்கு நடவடிக்கை எடுக்கவும்

### பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு கடிதம்

வவுனியா, ஜூலை 9
காணாமல் போன வவுனியா விபுலானந்தாக் கல்லூரி மாணவன் சூரியகுமாரன் சரவணராஜினை மீட்டுத் தருமாறு கோரும் கடிதமொன்றை நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் வவுனியா பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இந்தக் கடிதத்தில்;
விபுலானந்தாக் கல்லூரி மாணவன் சூரியகுமாரன் சரவணராஜ் காணாமல் போய் 26 நாள்களாகின்றன. பெற்றோரும் பாடசாலை நிர்வாகவும் இது தொடர்பாக வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ள போதிலும் உரிய நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவித்து பாடசாலையில் வகுப்புப் புறக்கணிப்பு இடம்பெற்றதால் அமைதியின்மை ஏற்பட்டது.

இந்த மாணவன் காணாமல் போனதற்குக் காரணமானவர்கள் தொடர்பான விவரங்கள் அளிக்கப்பட்டுள்ள போதிலும் அவர்கள் மீது பொலிஸாரால் எந்த வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாததால் பெற்றோர்கள் மற்றும் ஊர்மக்கள் அதிர்ச்சியடைந்துள்ளார்கள்.

எனவே இந்த விடயமாக உடனடி நடவடிக்கை மேற்கொண்டு அந்த மாணவனை மீட்டுத் தருமாறு தங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன் என்றுள்ளது. (க)

# அக்கராயன் பிரதேசத்தில் மீன் எழுச்சிக் கூட்டங்கள்





அக்கராயன், ஜூலை 9
கிளிநொச்சி மாவட்டம் அக்கராயன் பிரதேசத்தில் மீள் எழுச்சி திட்டத்தின் கீழான கூட்டங்கள் இடம்பெற்றுள்ளன.

இந்தப் பிரதேசத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் கடன் வழங்கும் திட்டங்கள் தொடர்பாக இந்தக் கூட்டங்களில் மக்களின் கருத்துக்கள் கேட்டறியப்பட்டன.

ஸ்கந்தபுரம் கிராமத்தில் காடாக உள்ள 163 ஏக்கர் வயல் நிலத்தை துப்புரவு செய்தல், அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்துக்கு குடிதண்ணீர் வசதி ஏற்படுத்துதல் அக்கராயன் கெங்காதரன் குடியிருப்பில் வீதி அமைத்தல், அக்கராயன் கிழக்கில் பாலங்களை அமைத்தல், சமாதானபுரம் வயல் நிலத்தின் கட்டுமானங்களைச் சீர் செய்தல் உட்பட பல்வேறு பொது வேலைத் திட்டங்கள் தொடர்பாக மக்கள் தமது கருத்துக்களை முன்வைத்தனர்.

இந்தக் கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட மீள் எழுச்சி திட்டப் பிரதிப் பணிப்பாளர் அ. விஜயகிருஸ்ணன் கலந்து கொண்டார். (க-18)

## சமூக சேவை திணைக்களத்துக்கு புதிய கட்டடம்

கிளிநொச்சி, ஜூலை 9
கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் திணைக்களத்தின் புதிய கட்டடம் இந்த வருட இறுதிக்குள் திறந்து வைக்கப்படும் எனத் தெரிய வருகின்றது.

இந்தப் புதிய கட்டடத்தின் கட்டுமானப் பணிகள் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்துக்கு அருகில் மேற்படி கட்டடம் அமைக்கப்பட்டு வருகின்றது.

வடமாகாண விசேட அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மூன்று மில்லியன் ரூபாவும், யுனிசெப் அமைப்பினால் இரண்டு மில்லியன் ரூபாவும் இந்தக் கட்டடப் பணிகளுக்கு ஒதுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-6)

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடம்:** குடும்பத்தில் அமைதி நிலவும். வெளிவட்டாரத்தில் கௌரவம் கிடைக்கும். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**இடபம்:** சகோதரர்களால் பயனடைவீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. உங்கள் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார்.

**மிதுனம்:** உறவினர், நண்பர்களை பகைத்துக் கொள்ளாதீர்கள். சிலரின் நயவஞ்சக செயலை நினைத்து வருந்துவீர்கள். யாரும் உங்களை புரிந்துகொள்ளவில்லை என ஆதங்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் பிறரின் குறைகளை நாசுக்காக சுட்டிக் காட்டுங்கள்.

**கடகம்:** வாகனத்தை இயக்கும் போது தொலைபேசியில் பேச வேண்டாம். சிக்கனமாக இருங்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் கனிவாக பழகுங்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும்.

**சிங்கம்:** உறவினர்கள் ஒத்துழைப்பார்கள். இங்கிதமாகப் பேசி கடினமான காரியங்களையும் சாதிப்பீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும்படி நடந்து கொள்வீர்கள்.

**கன்னி:** உறவினர்கள் பாராட்டுவார்கள். எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். நண்பர்களால் ஆதாயமடைவீர்கள். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள்.

**நாளை**

ஆனி-26 புதன்கிழமை 10.07.2013
திதி: துதியை பி.ப. 04.17 வரை
நட்சத்திரம்: பூசம் பி.ப.01.39 வரை
சுபநேரம்: 04.28 - 05.58 வரை
இராகுகாலம்: 11.58 - 01.28 வரை

**துலாம்:** புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். நல்ல நண்பர்களைச் சந்திப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். மாணவர்கள் பரபரப்புடன் காணப்படுவர்.

**விருச்சிகம்:** இனந்தெரியாத சின்னச் சின்னக் கவலைகள் வந்து போகும். பிள்ளைகளிடம் கோபத்தைக் காட்ட வேண்டாம். மற்றவர்களைப் பற்றி வீண் விமர்சனங்களைத் தவிர்ப்பது நல்லது. உத்தியோகத்தில் மறைமுக நெருக்கடிகள் வந்து நீங்கும்.

**தனுசு:** எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்திகள் வந்து சேரும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள்.

**மகரம்:** விடாப்பிடியான செயல்களில் வெற்றியுண்டு. பணவரவு திருப்தி தரும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சி கிடைக்கும்.

**கும்பம்:** பேச்சில் கம்பீரம் பிறக்கும். முன்கோபம், வீண் அலைச்சல் விலகி நிம்மதி கிடைக்கும். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**மீனம்:** குடும்பத்தினரின் எண்ணங்களை பூர்த்தி செய்ய வேண்டும் என்று நினைப்பீர்கள். பிரார்த்தனைகள் நிறைவேறும். பணப்புழக்கம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரி பாராட்டுவார்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | 6 | 5 | | 8 |
| | 8 | | 7 | 1 | | | 2 | 4 |
| | 7 | | | | | 3 | | |
| | | | | | | | 9 | 5 |
| 7 | 1 | | 9 | 4 | 5 | | 8 | 6 |
| 5 | 6 | | | | | | | |
| | | 1 | | | | | 5 | |
| 3 | 4 | | | 5 | 8 | | 1 | |
| 8 | | 7 | 1 | | | 6 | | 2 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 7 | 1 | 8 | 6 | 3 | 9 | 2 | 5 |
| 3 | 9 | 5 | 4 | 7 | 2 | 6 | 8 | 1 |
| 8 | 2 | 6 | 5 | 9 | 1 | 7 | 3 | 4 |
| 9 | 8 | 3 | 6 | 2 | 4 | 1 | 5 | 7 |
| 1 | 4 | 7 | 3 | 5 | 8 | 2 | 6 | 9 |
| 5 | 6 | 2 | 7 | 1 | 9 | 8 | 4 | 3 |
| 6 | 5 | 4 | 1 | 8 | 7 | 3 | 9 | 2 |
| 7 | 3 | 9 | 2 | 4 | 6 | 5 | 1 | 8 |
| 2 | 1 | 8 | 9 | 3 | 5 | 4 | 7 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண் களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண் டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவ லாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# 6 ஆம் ஆண்டு நீங்கா நினைவலைகள்



**அன்னை மடியில்** 04.11.1958 **ஆண்டவன் அடியில்** 16.06.2007

## திருமதி கணேஸ்வரி தம்பிராஜா (சுகந்தா)

(முன்னாள் அலுவலக உத்தியோகத்தர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)

**திதி:- வளர்பிறை பிரதமை (09.07.2013)**

எங்கள் குடும்பத்தில் ஒளிவீசிய
குடும்பத்தின் குலவிளக்கே சுகந்தா....
உம்முடன் வாழ்ந்த பதினைந்து ஆண்டுகளின்
நினைவுகள் பசுமையானவை
உம்மைப் பிரிந்த ஆறு ஆண்டுகளின்
துயர் அனலானது
வாழ்ந்த காலங்களில் நாங்கள் மட்டும்
வாழ்ந்தால் போதுமென சிந்தித்தவரல்ல நீர்
எங்கள் சகோதரர்கள் அவர்கள் பிள்ளைகள்
எல்லோரும் நலமாக வாழ வேண்டுமென வாழ்ந்தீர்
இல்லையென்று வருவோருக்கு உதவிட
எமது நலன்களை இழக்கவும் தயாராக வாழ்ந்தீர்

எமது சிந்தனைகள், செயல்களின்
நினைவுகள் பசுமையானவை
உமது சிந்தனைகள், செயல்களின் தடம்பதித்து பயணிப்பதே
நாம் வாழ்ந்த வாழ்க்கைக்கு அர்த்தமென வாழ்கிறேன்
உம்மை என்றும் நேசிக்கின்ற
தாய், சகோதரர்கள், மைத்துனர்கள், அவர்கள்
பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்களின் நினைவுகளுடன்

**- கணவர்.**

**"துர்க்கா இல்லம்",**
**26/5, பிரம்படி வீதி, கொக்குவில்.**

(30674)(2.6.3)



மதுரை காந்தியவாதி மு.மாரியப்பன் நினைவுதினமும் காந்திய கற்கை நெறிக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் ஏற்பாட்டில் ஞாயிற்றுக்கிழமை நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றன. இதில் கற்கை நெறியைப் பூர்த்தி செய்த மாணவருக்கு மூதறிஞர் ஆ.சபாரத்தினம் சான்றிதழ் வழங்குகிறார். (வ)

# மும்மொழிகளிலும் அடையாள அட்டை மொழி உரிமைக்கான அடையாளம்

யாழ்ப்பாணம், ஜூலை 9
தேசிய அடையாள அட்டையில் மும்மொழிகளும் இடம்பெறவேண்டும் என்பது தொடர்பாக உயர்நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வழக்கு வெற்றியளித்துள்ளதாக மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் தெரிவித்துள்ளது.
இது தொடர்பாக அந்த நிலையம் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
இனவேறுபாடு காட்டக்கூடிய வகையில் கடந்த காலங்களில் தமிழ் மற்றும் சிங்கள மக்களுக்கான தேசிய அடையாள அட் டையை ஆட்பதிவுத் திணைக்களம் வழங்கி வருகிறது.
இதனால் தமிழ்ப் பிரதேசங்களில் சிங்கள மக்களும் சிங்களப் பிரதேசங்களில் தமிழ் மக்களும் தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதில் மொழி உரிமைகளைப் பயன்படுத்த முடியாதுள்ளது.
இந்த மொழி உரிமை மீறல் தொடர்பாக உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குக்கு அமைவாக, அடையாள அட்டையில் மும்மொழிகளும் இடம்பெறுவதற்கு ஆட்பதிவுத் திணைக்களம் உடன்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.
இதனடிப்படையில் இன வேறுபாடு காட்டாமல் தனியாக மொழி உரிமையை மட்டும் பெற்றுக் கொள்ளக் கூடிய தான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-14)

## புத்தூர் மழவராயர் நூல் வெளியீடு

தம்பிப்பிள்ளை சண்முகநாதன் எழுதிய 'புத்தூர் மழவ கந்தைய பாரம்பரியம்' என்னும் நூல் வெளியீட்டு விழா நாளை புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு புத்தூர் சோமஸ்கந்த கல்லூரியில் இடம்பெறவுள்ளது.
பாடசாலை அதிபர் இ.இராசமகேந்திரன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வலி. கிழக்குப் பிரதேச செயலர் ம.பிரதீபன் கலந்து கொள்வார். (ந)

## தென்மராட்சிப் பிரதேசத்தவர்களுக்கு
# அறிவிக்கப்பட்ட விசேடபடி இம்மாத ஓய்வூதியத்துடன்

தென்மராட்சி, ஜூலை 9
தென்மராட்சி பிரதேச ஓய்வூதியர்களுக்கு அரசினால் அறிவிக்கப்பட்ட ஓய்வூதியப்படிகள் அதிகரிப்பின் பிரகாரம் ஜூலை மாதம் தொடக்கம் வழங்கவேண்டிய கொடுப்பனவு இந்த மாத ஓய்வூதி யத்துடன் சேர்த்து அனுப்பப்பட்டுள்ளது.
2004 ஆம் ஆண்டு நவம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வு பெற்றவர்களுக்கு 375 ரூபாவும், அதன்பின்னர் 2009 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதி வரை ஓய்வு பெற்றவர்களுக்கு 250 ரூபாவும் அதிகரிக்கப் பட்டுள்ளது.
2006- ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் ஓய்வு பெற்றவர்களுக்கு ஜூலை மாதத்தில் ஓய்வூதிய அதிகரிப்பு வழங்கப் படவில்லை. 2013 ற் கான வரவு-செலவுத் திட்டத்தில் ஓய்வூதிய முரண்பாட்டை நீக்கும் முகமாக மூன்று பிரிவுகளாக ஓய்வூதிய அதிகரிப்பு கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ-9)

**தவறிவிட்டது**
காத்தான் கோட்டம், வவுனியா என்னும் முகவரியைச் சேர்ந்த தவராசா பிரியாஞ்சலி என்பவரது தேசிய அ.அட்டை (928093085 V), சாரதி அனுமதிப் பத்திரம், IBSL அடையாள அட்டை என்பன 05.07.2013 அன்று கச்சேரியிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் வழியில் பஸ்ஸில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இல. 55, பாலிநகர் வவுனிக்குளம் என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

**தவறிவிட்டது**
மோட்டார் சைக்கிளின் பின்புற NPWY-2984 இலக்கத்தகடு உடுவிலுக்கும் மானிப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொடர்புக்கு: 0776032339 (30703) (10,6,3)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**
மட்டுவில் மத்தி பிரிவு முன்னாள் கிராம அலுவலரும் தற்பொழுது சந்திரபுரம், மட்டுவில்-நுணாவில் பிரிவுகளின் கிராம அலுவலராகவும் கடமையாற்றும்
**கந்தையா வாமதேவன்**
அவர்கள் கடந்த 14.06.2013 ஆம் திகதி சாவகச்சேரி மாவட்ட நீதிபதி உயர் திரு.செ.லெனின்குமார் முன்னிலையில் தீவு முழுவதுக்குமான சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டமையையிட்டும், இவர் மேலும் பல பட்டங்கள் பெற்று மக்களுக்கு பணியாற்றவும் வாழ்த்துகின்றோம்.



அன்பு உள்ளங்கள், மட்டுவில் மத்தி

**வடிவமைப்பாளர்களே! வெற்றியாளராகுங்கள்!**
பனைசார் உற்பத்தியில் ஈடுபடும் கைவினை வடிவமைப்பாளர்கள், உங்களின் உற்பத்திப் பொருள்களை 05.08.2013 ஆம் திகதிக்குமுன் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்து சில்ப கண்காட்சிப் போட்டியூடாக வெற்றிப்பரிசைத் தட்டிச்செல்லுங்கள். (36801)(6.2)
*கைவினைப் பொருள்கள் ஒப்படைக்கப்படும் முகவரி*
தலைவர், பனை அபிவிருத்திச் சபை
தேசிய வீடமைப்புச் செலயகக் கட்டடம், முதலாம் மாடி, A9 வீதி, யாழ்ப்பாணம்.
பொதுமுகாமையாளர், பனை அபிவிருத்திச் சபை.

**யா/ வட்டு இந்துக் கல்லூரி IABS**
**புதிதாக அறிமுகப்படுத்திய தொழில்நுட்பத்துறை அனுமதி**
யா/ வட்டு இந்துக் கல்லூரியில் ஜி.சி.ஈ. உயர்தரத்தில் புதிதாக அறிமுகப்படுத்திய தொழில்நுட்பத்துறை 15.07.2013 அன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.
க.பொ.த. சாதாரணதரம் (2012) சித்தியடைந்த மாணவர்கள் இந்தப் பிரிவில் புதிதாக இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். இணைந்து கொள்ளவிரும்பும் மாணவர்கள் உரிய ஆவணங்களுடன் வருகை தந்து அனுமதியைப் பெற்றுக்கொள்ளவும்.
அதிபர்
யா/வட்டு இந்துக் கல்லூரி, சிந்தங்கேணி.
(30709)(6.2.3)

**75% சேல்**




MICRO PC SYSTEMS
HOTLINE - 0773963280 Jaffna - 0212225893 Nelliyadi - 0212262929 Kilinochchi - 0773963278 Vavuniya - 0242221969 Trincomalee - 0212225893 Colombo - 0777308417

## பறாளாய் ஈஸ்வரவிநாயகர் சித்திரத் தேர் வெள்ளோட்டம்

சுழிபுரம், ஜூலை 9
சுழிபுரம் பறாளாய் ஈஸ்வர விநாயகர் ஆலய புதிய சித்திரத் தேர் வெள்ளோட்டம் நாளை மறுதினம் வியாழக்கிழமை பகல் நடைபெறவுள்ளது.
புதிய தேரை அராலியூர் சிற்பாச்சாரி குழுவினர் கலைஞர் அமரசிங்கம் தலைமையில் உருவாக்கியுள்ளனர். (ந-28)

## பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தினமும்

அளவெட்டி, ஜூலை 9
அளவெட்டி அருணோதயக் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தினமும் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணிக்கு கல்லூரி முதல்வர் நாகலிங்கம் கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலயக் கல்விப் பணிப் பாளர் எஸ்.சந்திரராஜாவும் சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் என்.சண்முககுலகுமாரும் கௌரவ விருந் தினராக கல்லூரியின் ஓய்வு பெற்ற உப அதிபர் அருணோதயனும் திருமதி சாந்தி அமிர்த லிங்கமும் கலந்து கொள்வர். நிகழ்வில் யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீட உதவிப் பதிவாளர் இசர் வேஸ்வரா நிறுவுநர் தின நினைவுப் பேருரையை நிகழ்த்தவுள்ளார். (ந-86)

**வீடுகள், அலுவலகம், காட்சியறை மற்றும் தொழிற்சாலைகள்**
CCTV
Security Camera Solutions
Catch Them!
உங்கள் பாதுகாப்பே ....
எங்கள் சேவை..
நாம் 16 வருட சேவையில்
ஒரே கூரையின் கீழ் எமது சேவைகள்.
* Computer Network & Maintenance, Internet, Router, ADSL Setup
* Computer, Printer, Laptop, UPS, LED & LCD Monitor Repairs.
MICRO PC SYSTEMS
யாழ்ப்பாணம் :- 021 2225893 நெல்லியடி :- 021 2262929
வவுனியா :- 024 2221969 கிளிநொச்சி :- 021 2285593
திருகோணமலை :- 026 2226977 கொழும்பு :- 077 3963285
DEALER & WHOLESALE INQUIRIES- 077 778 8929 PROJECT & CORPORATE INQUIRIES- 077 548 7146 HOME & SMALL BUSINESS INQUIRIES- 077 396 3284



**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**விஞ்ஞான பீடம்**
விஞ்ஞானத்தில் பொதுப் பட்டத் தேர்வு- நிலை 1G/1S/2G/2S/3G,2012
விஞ்ஞானத்தில் சிறப்புப் பட்டத் தேர்வு- நிலை 3M/3S/4M/4S,2012
*முதலாம் அரையாண்டு கற்கைநெறி அலகுகளுக்கான கற்கைநெறி இறுதித் தேர்வு*
முதலாம் அரையாண்டில் கற்பிக்கப்பட்ட கற்கைநெறி அலகுகளுக்கான கற்கைநெறி இறுதித் தேர்வுகள் (End of Course Examinations) புரட்டாதி மாதம் ஆரம்பமாகும்.
இந்த அலகுகளுக்கான கற்கைநெறி இறுதித் தேர்வில் மீள் பரீட்சார்த்தியாகத் தோற்ற விரும்பும் மாணவர்கள் பூரணப்படுத்திய தேர்வு அனுமதிப் படிவங்களை தேர்வுக்கான கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டுடன் 2013ஆடி 26ஆம் திகதிக்கு முன் விஞ்ஞான பீடாதிபதி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு வேண்டப் படுகின்றனர்.
(சி/10266) (3.5.6)
பதிவாளர்.

# வலிகாமம் வலயத்தில் மும்மொழி கல்வித் திட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை,9
வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் மும்மொழிக் கொள்கைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருவதாக வலிகாமம் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சந்திரராசா தெரிவித்துள்ளார்.

இதனை நடைமுறைப்படுத்தும் வகையில் வலிகாமம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட நான்கு கல்விக் கோட்டங்களிலும் மும்மொழிக்கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கான பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன் தமிழ், சிங்களம், ஆங்கிலம் என பிரதிக் கல்விப் பணிப்பாளர்களும் முகாமைத்துவ உதவியாளரும் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

தெல்லிப்பழை கல்விக்கோட்டத்துக்கான நிலையம் மல்லாகம் மகா வித்தியாலயத்திலும் சங்கானை கல்விக் கோட்டத்திற்கான நிலையம் வட்டுக் கோட்டை இந்துக் கல்லூரியிலும் உடுவில் கல்விக்கோட்டத்துக்கான நிலையம் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும் சண்டிலிப்பாய் கோட்டத்துக்கான நிலையம் மானிப்பாய் மகளிர் கல்லூரியிலும் செயற்படத் தொடங்கியுள்ளன.

அதேவேளை, வலிகாமம் கல்வி வலயத்தில் இருந்து 2013 ஆம் ஆண்டு க.பொ.த பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் பெறுபேற்று அடைவு மட்டத்தை உயர்த்தும் வகையில் பாட ரீதியான செயல் திட்டத்தை வலிகாமம் கல்வி வலயம் மேற்கொண்டுள்ளது.

வலிகாமம் கல்வி வலயத்திற்கு உட்பட்ட அறுபத்தி மூன்று பாடசாலைகளில் இருந்து இரண்டாயிரத்து ஐந்நூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சைக்கு 2013ஆம் ஆண்டு தோற்ற தயாராகி வருகின்றார்கள்.(ந- 86)

## நிர்வாகிகள் தெரிவு

வடமராட்சி, ஜூலை 9
அல்வாய் மேற்கு சிவானந்தா விளையாட்டுக்கழகத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது பின்வருவோர் புதிய உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக ஏ.கிருஷாந்தன், உப தலைவராக எஸ். செல்வரஞ்சன், செயலாளராக எஸ். சுமன், உபசெயலாளராக வ.நாகேந்திரன், பொருளாளராக எஸ். சுஜித் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் 10 பேர் கொண்ட நிர்வாக சபை ஒன்றும் தெரிவானது. (ந-8)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 28 | 12 |
| 04 | 07 |
| 1931 | 2010 |



**கந்தையா சிவஞானம்**
(உசனைப் பிறப்பிடமாகக் கொண்டவர்)

உசன். உங்கள் நினைவுகளுடன்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
**சுப்பிரமணியம் சிவானந்தன்**
(முன்னாள் எழுதுவினைஞர், தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கம்)

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 09.06.1959 | 20.06.2012 |

திதி:
09.07.2013

ஓராண்டு கடந்தபோதும் உறங்கவில்லை உங்கள் நினைவுகள்
உறவு எனும் கப்பலில் ஒற்றுமையாய் உரிமையுடன் வாழ்ந்து வந்தோம்
கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
கண்விட்டு மறையாமல் காலமெல்லாம் இருப்பீர்கள்


ஆனந்த பவனம்
யந்தப்பை,
தெல்லிப்பழை.
(30706)(ந.6.3)

மனைவி,
அண்ணா,அண்ணி,தம்பி, மச்சாள்,
பெறாமக்கள், சித்தப்பா, சித்தி.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்:-10.04.1956
மறைவு:- 08.06.2013

அமரர் **வீரசிங்கம் ரவீந்திரன்**



நாள்கள் முப்பத்தொன்று ஆனதுவோ
உங்கள் முகம் நாம் கண்டு
ஆறவில்லை நம் இதயம்
நித்தம் புலம்புகின்றோம்
ஆறவில்லை எங்கள் துயர்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

கடந்த 08.06.2013 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு ஓடோடி வந்து உதவிகள் ஒத்தாசைகள் புரிந்தவர்களுக்கும் வெளிநாட்டிலிருந்தும் வெளிமாவட்டங்களிலிருந்தும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இன்று (09.07.2013) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சி.சிவலிங்கம்,
345/3, கொழும்புத்துறை வீதி,
கொழும்புத்துறை (துண்டிச் சந்தி)
(38976)(2.3.6)

**குடும்பத்தினர்.**

## கண்ணீராய் கரைந்த ஈராண்டில்



தோற்றம்
01.05.1941

மறைவு
16.06.2011

அமரர்
**மயில்வாகனம் செல்லையா**
(மோகன் கூல்பார்-பளை)

பச்சிலைப்பள்ளியின் முதுபெரும் வணிகன்
உச்சத்தைத் தொட்டு உயர்ந்த ஓர் உழைப்பாளி
நல்லன எல்லாம் முன்னிலை நின்று
நடத்திக்காட்டிய பளையூர் செட்டி

அடக்கமும் பணிவும் அமைதியும் கலந்த
வழக்கமாய் வாழ்ந்த விருட்சமே நீயப்பா
உந்தன் விழுதுகள் உன்வழி தொடரும்
என்றும் நீதியும் அன்பும் வாழும்

தந்தையார் சிவனடி சேர்ந்த
செய்தியைக் கேட்க காதுகள் மறுக்குது
நில்லையா என்று நிறுத்திட உலகில்
நிலையாமை நிமிர்ந்து நிக்குது
நிம்மதியாக நீவீர் செல்ல
எம்விழி சொரிந்து பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

மோகன் புத்தகசாலை,
பளை.
(C/10280)(10.6.3)

செ.நிமலறூபன் (மகன்).

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
25.12.1929

மறைவு
09.06.2013



**திருமதி சுப்பிரமணியம் சிவபாக்கியம்**

திதி: பூர்வபக்க பிரதமை

*அன்னையே நீயணைந்து முப்பத்தொரு நாள் ஆனதுவோ !*
*உன்னையே எண்ணி எண்ணி உருகுதே கண்ணீராக*
*பொய்மையே வாழ்வு என்றார் நாம் போவதும் உண்மை என்றார்*
*உருவப் படமாயிருந்து உருக வைக்கின்றாயே !*

**என் அம்மாவே உன் ஆத்மா சாந்தி அடைய வேண்டி எல்லாம் வல்ல பொற்பதி விநாயகனின் தாழ் வேண்டி நிற்கின்றோம்.**

பொற்பதி றோட்,
கொக்குவில்.
(38981)(3.6.11)

**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

## கலாபூசணம் செல்லப்பா நடராசா (J.P)

(இலங்கைப் பாராளுமன்ற ஓய்வு பெற்ற சிரேஷ்ட கன்சாட் அறிக்கையாளர்)



நெட்டிலிப்பாய், கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கலாபூசணம் செல்லப்பா நடராசா (ஓய்வுபெற்ற சிரேஷ்ட கன்சாட் அறிக்கையாளரும், பிரபல பத்திரிகையாளரும், அகில இலங்கை சமாதான நீதிவானும்) நேற்று (08.07.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சைவ. பாடசாலை வீதி,
கோண்டாவில் மேற்கு. (27304)

தகவல்: பேராசிரியர் இ.விக்னேஸ்வரன்
(மருமகன்) குடும்பத்தினர்.

# அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம்,ஜூலை 9

வண்ணை மாவடி ஸ்ரீ ஞானவைரவர் ஆலய அலங்கார உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 18 தினங்கள் நடைபெறவுள்ளது. தினமும் மாலை 7 மணிக்கு நடைபெறும் வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து வைரவப் பெருமான் வெளிவீதியுலா வருதல் இடம் பெறும். 16 ஆம்நாளான 24.07.2013 புதன் கிழமை காலை 8 மணிக்கு நடைபெறும் வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து வைரவப் பெருமான் தேரில் ஆரோக ணித்து திருவீதி வலம் வருதலும் மறு நாள் வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. 18ஆம் நாளான 26.07.2013 வெள்ளிக்கி ழமை பகல் சகஸ்ர சங்காபிஷேகம் நடைபெறுதுடன் மாலை 6 மணிக்கு திருவூஞ்சல் நடைபெற்று பூந்தண்டிகையில் வைரவப் பெருமான் திருவீதியுலா வருதலும் நடைபெறும்.

(த)

# மரண அறிவித்தல்

## திருமதி இராயப்பு மரிய கொறற்றா (மணி)

(உயரப்புலம், ஆனைக்கோட்டை)



உயரப்புலம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் நீர்கொழும்பை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராயப்பு மரிய கொறற்றா (மணி) 06.07.2013 சனிக்கிழமை நீர்கொழும்பில் காலமானார்.

அன்னார் யாக்கோபிள்ளை சிமியோன்- விக்டோரியா தம்பதியரின் சிரேஷ்ட அன்புப் புதல்வியும், மனுவேற்பிள்ளை இராயப்புவின் (மண்டைதீவு) அன்பு மனைவியும், மனுவேற்பிள்ளை -திரேசம்மா தம்பதியரின் மருமகளும், நிஷானின் அன்புத் தாயாரும், ஸ்ரனிஸ்லாஸ் (கனடா), செபஸ்ரியன் (ஏவின்சன்-இத்தாலி), மரிய றோசறி (பவளரதி- பிரான்ஸ்), லோறன்ஸ் (கனடா),ஜோன்சன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெசி (கனடா), மேரி விமலினி (சித்ரா-இத்தாலி), சார்ள்ஸ் ஸ்ரெளன்ஸ் (பிரான்ஸ்), செல்வநேசமலர் (கனடா), பாமினி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ம.இராயப்பு (கணவர்)
தொ.இல:071 945 2622

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை. (30716) (3.6.11)

# மரண அறிவித்தல்கள்

## நகுலராஜாமுதலியார் குமாரசாமி முதலியார்

(முன்னாள் அரச எழுதுவினைஞர்)



நல்லூர், பருத்தித்துறை வீதியைப் பிறப்பிடமாகவும் இல.55, ஆடியபாதம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட நகுலராஜாமுதலியார் குமாரசாமி முதலியார் 07.07.2013 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நகுலராஜா முதலியார்-கௌரியம்மா தம்பதியரின் இளைய புதல்வரும், காலஞ்சென்ற தில்லைநாயகி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான அருளம்பலம்- பொன்னம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்றவர்களான பத்மநாதமுதலியார் (முன்னாள் நீதிபதி), ஜெயபாலசிங்கம்(முன்னாள் அதிபர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஜெயக்குமார் (கவிவேழம் பாரதி பாலன்-டென்மார்க்), காலஞ்சென்ற திலீப்குமார்(நெதர்லாந்து) மற்றும் சந்திரகுமார் (ஜேர்மனி), அஞ்சனா(நெதர்லாந்து), றஞ்சிதா(ஜேர்மனி), காலஞ்சென்ற சாந்தா ஆகியோரின் அன்புத் தந்தையும்,றஞ்சனாதேவி, விஜயகுமாரி, சாந்தினி, இராம கிருஸ்ணர், தெய்வேந்திரன் ஆகியோரின் மாமனாரும், கதாதரன், சத்தியதர்சினி, சுஜித்ரன், சஞ்ஜீவ், ஜான்ஸி, சாஜீஸ், மீரா, சாயிசங்கீத், சாயிகீதா, சாயிபிரசாத், அலன் ஆகியோரின் பேரனும், வனிலாவின் பூட்டனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(09.07.2013) செவ்வாய்க்கிழமை 55, ஆடியபாதம் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, நண்பகல் 12.00மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

55,ஆடியபாதம் வீதி,
நல்லூர்.
தொ.இல. 077 811 0305 (30717)(5,6)

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## கந்தையா ஏகாம்பரமுதலியார்(பப்பா)

திருநெல்வேலி கிழக்கு செங்குந்தா வீதியை பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்ட கந்தையா ஏகாம்பரமுதலியார் அவர்கள் 05.07.2013 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான மீனாட்சி. சின்னப்பிள்ளை ஆகியோரின் அன்புத் தம்பியும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற தங்கம்மா அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சபாரட்ணம், தம்பிப்பிள்ளை, இராசலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சண்முகசுந்தரம் (முதலி), காலஞ்சென்றவர்களான புனிதசீலி(ராணி), சண்முகரத்தினம்(ரத்தினம்) மற்றும் சண்முகராஜா(மாத்தையா-பிரான்ஸ்), சண்முகலிங்கம் (தங்கம் - வீடியோ சண்) ஆகியோரின் அன்புத்தந்தையும், மதிவதனா (ரதி), காலஞ்சென்ற பரமேஸ்வரன் (முன்னாள் அதிபர் - யாழ் செங்குந்தா இந்துக்கல்லூரி), மற்றும் மாலினி, சுகுமாரி (ஆசிரியை - ஆனைப்பந்தி மெதடிஸ் மிசன் பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும், சுஜாதா - அருள்செல்வன், லாவண்ஜா-நந்திக்கேஸ், சரவணப்பிரியன்-பிறேமலதா, லவன்-செந்துஷா, லதா -புஷ்பகுமார், பிரதீப், பிரதாப், குயிலினா, ரமணா, தாட்சாயினி, தீபனா, டிலன், யதார்த்தனி, பதுமிலா, லக்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஹரிஹர்ஷன், மனஷ்வினி, அபிஷேக், யஷ்வா, மனீஷ் ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.389 இராமலிங்கம் வீதியிலுள்ள இல்லத்தில் இன்று (09.07.2013)செவ்வாய்க்கிழமை காலை நடைபெற்று அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 10.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

தகவல் : சண்முகசுந்தரம்,சண்முகராஜா,சண்முகலிங்கம் (மகன்மார்)
இல. 389 இராமலிங்கம் வீதி , திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.
( பூங்கனிச்சோலைக்கு எதிரில் ) தொலைபேசி : 0770242108,0773304033,0773890257

(10312)

# சோமசுந்தரம் சிறிகாந்தன்



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் சிறிகாந்தன் நேற்றுமுன்தினம் 07.07.2013 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் கமலாதேவி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராசதுரை- சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும் கமலாம்பாளின் அன்புக் கணவரும் அஜித்தன், கார்த்திகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.07.2013) செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புளியடிச் சந்தை,
மானிப்பாய் தெற்கு,
மானிப்பாய். (30728)

தகவல்:
குடும்பத்தினர்.

# யாழ்ப்பாணம் மாநகரசபை கேள்வி அறிவித்தல் -2013

மாநகரசபைக்குச் சொந்தமான நவீன சந்தை 2ஆம் கட்டம் மேல்மாடியில் அமைந்துள்ள 4ஆம் இலக்க கடையிலுள்ள கீழ்வரும் அட்டவணையிலுள்ள 15 கடைகளுக்கான இடத்தினையும் கேள்வி நடைமுறை ஊடாக பொதுமக்களுக்கு வழங்குவதற்கான அறிவித்தல்

நிபந்தனைகள்

01. வழங்கப்படும் இடத்தின் எல்லைச்சுவர், கதவுகள் என்பன மாநகர சபை பொறியியலாளரின் எழுத்து மூலமான அனுமதியுடனும் வழிகாட்டல்களுடனும் சித்திபெறும் கேள்விதாரர்கள் தமது சொந்தச் செலவில் அமைக்க வேண்டும்.
02. மாநகர சபைக் கட்டளைச்சட்டம் நியமத்துணை விதிகள், துணைவிதிகள், சுற்றறிக்கைகள், உடன்படிக்கைகள் என்பவற்றினை மீறப்படுமாயின் நட்டஈடு எதனையும் கோரமல் ஒப்பந்தத்தில் இருந்தும் ஆதனத்தில் இருந்தும் சமாதானமான முறையில் வெளியேற வேண்டும்.
03. சித்திபெறும் கேள்விதாரர் அவரால் கோரப்பட்ட கேள்விக்கோரிக்கைத் தொகையினை படிவம் திறத்தல் திகதியில் இருந்து, ஏழு நாள்களுக்குள் முழுமையாக செலுத்துதல் வேண்டும்.
04. மாநகரசபையின் கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.
05. கேள்விப்படிவக்கட்டணம்- ரூபா 1000.00(வற்வரி நீங்கலாக)
    கேள்விப்படிவம் விநியோகித்தல்- 09.07.2013- 23.07.2013 மு.ப.10.00மணி வரை.
    கேள்விப்படிவத்தை ஏற்றுக்கொள்ளல்- 23.07.2013 நண்பகல் 12.00 மணிவரை.
    கேள்வி திறத்தல் - 23.07.2013 பி.ப. 2.30 மணிக்கு
06. விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மூலையில் கடையின் இலக்கத்தைக் குறிப்பிட்டு மாநகரசபை, நானாவித இறைவரிப்பகுதி உள்ள கேள்விப்பெட்டியில் சேர்க்கப்பட வேண்டும்.
07. தபாலில் அனுப்புவோர் மாநகர ஆணையாளர், மாநகர சபை யாழ்ப்பாணம். என்று முகவரியிட்டு, 23.07.2013ஆம் திகதி நண்பகல் 12.00மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாக கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்விகள் திறக்கும் நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமூகம் அளிக்கலாம்.
08. மேலதிக விவரங்கள் தேவைப்படின் மாநகரசபை நானாவித இறைவரிப் பகுதியில் பெற்றுக்கொள்ளலாம்.

| கடை இலக்கம் | கடையின் விஸ்தீரணம் | மீளளிக்கக் கூடிய வைப்புப் பணம் | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் குறைந்தகேள்வித் தொகை (வற், தே, க. வரி நீங்களாக) |
|---|---|---|---|
| 4/01 | 16'X7.8" | 20,000/= | 360,000/= |
| 4/02 | 16'X9.8" | 20,000/= | 4,80,000/= |
| 4/03 | 16'X9.8" | 20,000/= | 4,80,000/= |
| 4/04 | 16'X9.8" | 20,000/= | 4,80,000/= |
| 4/05 | 16'X9.8" | 20,000/= | 4,80,000/= |
| 4/06 | 16'X9.8" | 20,000/= | 4,80,000/= |
| 4/07 | 16'X9.8" | 20,000/= | 4,80,000/= |
| 4/08 | 16'X8.6" | 20,000/= | 4,20,000/= |
| 4/09 | 16'X8.6" | 20,000/= | 4,20,000/= |
| 4/10 | 16'X9.8" | 20,000/= | 4,80,000/= |
| 4/11 | 16'X9.8" | 20,000/= | 4,80,000/= |
| 4/12 | 16'X9.8" | 20,000/= | 4,80,000/= |
| 4/13 | 16'X9.8" | 20,000/= | 4,80,000/= |
| 4/14 | 16'X9.8" | 20,000/= | 4,80,000/= |
| 4/15 | 16'X9.8" | 20,000/= | 4,80,000/= |

திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, மாநகர முதல்வர், மாநகர சபை, யாழ்ப்பாணம்.

## மாணவர்களை பதம்பார்த்த நாய்

நாய்க்கடிக்கு இலக்கான 10 மாணவர்கள் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றதுடன் அதில் மூன்று மாணவர்கள் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அநுராதபுரம் மத்திய மாகாண வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவர்கள் 10 பேரே இவ்வாறு நாய்க்கடிக்கு இலக்காகியுள்ளனர்.

மாணவர்களை கடித்த அந்த நாயை பிரதேசவாசிகள் கொன்றதுடன் அந்த நாயின் சடலத்தை வைத்திய சாலைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

## நீங்காத ஓராண்டு நினைவலைகள்



தோற்றம்
01*04*1938

மறைவு
20*06*2012

அமரர் சீதேவிப்பிள்ளை சின்னத்தம்பி (சீதா)

(நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்டவர்)

என் தாயே!
உன்முகம் காணாது
உன்குரல் கேட்காமல்
ஓராண்டு ஓடிவிட்டது
ஆனால் இன்னும் - நீங்கள்
எம்மனதை விட்டு
நீங்கவில்லை - உனது
நினைவுச் சுமையை சுமந்தபடி
என்றும் வாழும் - உம் இதயங்கள் !!!

(30715)(10,6,3)

"சீதாமஹால்"
56/40, ஆசாட் லேன்,
மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 0214904691

மகன், மகள்மார்,
மருமகள், மருமகன்மார்,
பேரப்பிள்ளைகள்.

## சாரதி தேவை

யாழ்நகரில் இயங்கும் பிரபல நிறுவனம் ஒன்றுக்கு கனரக வாகன அனுமதிப் பத்திரம் உடைய அனுபவம் மிக்க சாரதி ஒருவர் தேவை.

தொடர்பு: 077 950 2029

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

2 மாதங்கள் நிரம்பிய ஜேர்மன் சப்பேட் பெண் நாய்க்குட்டிகள் புத்தகத்துடன் உண்டு.

T.P- 0771273254, 0718916796

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கடந்த 29.06.2013 அன்று விருது பெற்ற எமது மாமாவான புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த கலாநிதி பண்டிதர் சிவஸ்ரீ

**து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் (J.P)**

(நல்லை ஆதீன சிவாச்சாரியார்) அவர்களுக்கு அவரது சமூக சேவையைப் பாராட்டி

"தேசமான்ய"

என்னும் கௌரவ விருது வழங்கப்பட்டமையிட்டு மனதார வாழ்த்துகின்றோம்.

ஆலடி லேன், பலாலி வீதி, ஊரெழு மேற்கு.
தி.சோமநாதக் குருக்கள் பிரதமகுரு
(அத்தியடி விநாயகர் தேவஸ்தானம்)
ஏழாலை.

வாழ்த்துவோர்-
மருமக்கள், கண்ணன், தேவகி, அருண்

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
02 . 08 . 1944

மறைவு
20 . 06 . 2012

அமரர்

# செல்லப்பா பத்மநாதன்

திதி: பிரதமை (09.07.2013)

அன்பால் அனைவரையும் அரவணைத்த எங்கள் அப்பா!
அணையாத தீபமே! எமை வாழ வழி காட்டிய எம் தெய்வமே!
ஊரைக் கூட்டி உபசரிக்கும் பழக்கம் தந்தீர் அப்பா!
உலகை விட்டு நீர் ஓர் ஆண்டு சென்றதுவோ!
நீங்கள் எமை விட்டுப் பிரிந்தாலும் - உங்கள்
நிழல் படம் எம் நெஞ்சில் நிழல் ஆடுதப்பா!
உங்கள் ஓராண்டில் ஆத்மா சாந்தியடைய
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சிங்கராயர் வீதி,
3ஆம் கட்டை, கல்வியங்காடு.

குடும்பத்தினர்.

(C/10290)(10,6,16)

# கொள்ளைச் சந்தேகநபர் பிணையில் விடுதலை

யாழ்ப்பாணம், ஜூலை 9

ஒருவருட காலமாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மூன்று கொள்ளைச் சந்தேக நபர்களில் ஒருவர் யாழ்.மேல் நீதிமன்றினால் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

யாழ்.மேல்நீதிமன்றில்ஆணையாளர் எஸ்.பரமராஜா முன்னிலையில் பிணை விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு அவருக்குப் பிணை அனுமதி வழங்கப்பட்டது.

அல்லாரை தெற்கு, கொடிகாமத்தில் 2012 ஆம் ஆண்டு இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 2012 ஜூன் 25ஆம் திகதியிலிருந்து சந்தேக நபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்தக் கொள்ளைக் குற்றச்சாட்டில் முல்லைத்தீவு கள்ளப்பாட்டைச் சேர்ந்தவரும் தற்போது உடுத்துறை வடக்கு, தாளையடியைச் சேர்ந்தவருமான கணபதிப்பிள்ளை தவராஜா, முல்லைத்தீவு புதுக்குடியிருப்பைச் சேர்ந்தவர்களான மனோகரன் வரதாஸ், சுப்பிரமணியம் பிரதீபன் ஆகியோர் சாவகச்சேரி நீதிமன்றினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

அவர்களில் கணபதிப்பிள்ளை தவராஜா என்பவரே பிணையில் விடுவிக்கப்பட்டார். அதன்படி அவர் 35ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும், மூன்று லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள் பிணையிலும் விடுவிக்கப்பட்டார்.

ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் பருத்தித்துறை பொலிஸில் கையெழுத்திட வேண்டும் என்றும் அவருக்கு நிபந்தனை விதிக்கப்பட்டது. (த-4)

# பெண்ணின் சடலத்தை பொறுப்பேற்பதில் இழுபறி

## அது 2 நாள்கள் சவச்சாலையில்

யாழ்ப்பாணம் ஜூலை, 09.

புத்தூரில் மீட்கப்பட்ட குடும்பப்பெண்ணின் சடலம் சவச்சாலையில் 2நாள்கள் தவம் கிடந்த நிலையில் நேற்றுத் திங்கட்கிழமை உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

உறவினர்களிடையே முரண்பாடு ஏற்பட்டமையால் சடலத்தை இன்று முற்பகல் 10 மணிவரை புத்தூரில் பெண்ணின் வீட்டில் வைத்திருக்கவும் பின்னர் கைதடியிலுள்ள கணவனின் வீட்டுக்குக் கொண்டு சென்று பின்னர் அடக்கம் செய்யுமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியை அண்மித்த வீட்டில் குறித்த பெண் கடந்த சனிக்கிழமை காலை சடலமாக மீட்கப்பட்டார். நிசாந்தன் நிலானி (வயது-28) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர். இவர் இரண்டு பிள்ளைகளின் தாயாவார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலீஸார் நீதிவானின் உத்தரவுக்கமைய சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் உடற் கூற்றுப் பரிசோதனைக்காக ஒப்படைத்தனர்.

பெண்ணின் உறவினர்களால் கடுமையாகத் தாக்கப்பட்ட கணவர் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அவரைத் தாக்கிய சந்தேக நபர்களில் ஒருவர் கைது செய்யப்பட்டார். பின்னர் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

வைத்தியசாலை சவச்சாலையில் சடலம் வைக்கப்பட்டிருந்த போதும் இருதரப்பினரும் தொடர்ந்தும் முரண்பட்டுக் கொண்டிருந்தமையினால் மறுநாள் ஞாயிற்றுக் கிழமையும் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவில்லை. அது தொடர்பில் நீதி மன்றின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. அதன் பின்னரே நேற்று சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. இன்று முற்பகல் 10 மணி வரை பெண்ணின் வீட்டில் சடலத்தை வைத்திருக்கவும் பின்னர் கணவனிடம் சடலத்தை ஒப்படைத்து கைதடிக்குக் கொண்டு செல்லவும் இறுதிக்கிரியைகளின் பின்னர் சடலத்தை அடக்கம் செய்யவும் நீதிமன்றம் உத்தரவிட்டது. (த-4)

> “ வைத்தியசாலை சவச்சாலையில் சடலம் வைக்கப்பட்டிருந்த போதும் இருதரப்பினரும் தொடர்ந்தும் முரண்பட்டுக்கொண்டிருந்தமையினால் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவில்லை.

## நல்லெண்ணெய் ஒரு போத்தல் 490 ரூபா

வடமராட்சி, ஜூலை 9

எள்ளு விலை குறைந்ததைத் தொடர்ந்து யாழ்.குடா நாட்டில் நல்லெண்ணெயின் விலையும் குறைந்துள்ளது.

கடந்த சில மாதங்களாக எள்ளு விலை அதிகரிப்பினால் ஒரு போத்தல் நல்லெண்ணெய் 600 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வந்தது. தற்போது ஒருபோத்தல் நல்லெண்ணெய் 490 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

அனுராதபுரம், கெக்கிராவ, தலாவ போன்ற இடங்களை உள்ளடக்கிய வடமத்திய மாகாணத்தில் எள்ளு அறுவடை செய்யப்பட்டதைத் தொடர்ந்து அதன் விலை வெகுவாகக் குறைவடைந்துள்ளது.

இதனையடுத்தே நல்லெண்ணெய் உற்பத்தியாளர்கள் 600 ரூபாவாக விற்கப்பட்டு வந்த ஒருபோத்தல் நல்லெண்ணெயின் விலையை 490 ரூபாவாகக் குறைத்துள்ளனர். (ஒ-8)

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

# சிங்கள மீனவர் வெளியேறும் வரை முல்லையில் போராட்டம் தொடரும்

வரை உண்ணாவிரதம் தொடரும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட செலயகத்தின் முன்பாக நேற்று முற்பகல் 10 மணியில் இருந்து மாலை 4 மணி வரை இடம்பெற்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் நூற்றுக் கணக்கான மீனவர்கள் கலந்துகொண்டனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அத்துமீறிக் கடற்றொழிலில் ஈடுபட்டு வரும் 600 இற்கும் மேற்பட்ட சிங்கள மீனவர்களை உடனடியாக வெளியேற்றக்கோரியும், சட்ட விரோதமான மீன்பிடி முறைகளை முற்றாகத் தடை செய்யக்கோரியுமே இந்த உண்ணாவிரதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

உண்ணாவிரதப் போராட்டத்தின் போது மேற்படி கோரிக்கைகள் அடங்கிய மனு, முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் ஊடாக கடற்றொழில் நீரியல் வள அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நேற்று முற்பகல் 10 மணிவரை அங்கு வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையங்களை மூடிப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கினர்.

போராட்டம் நடத்துவதற்கு முறையான அனுமதி பெறப்படவில்லை என்று பொலிஸார் போராட்டத்தை இடை நிறுத்த முயன்றபோதும், ஆளுங்கட்சி அமைச்சர் ஒருவரின் தலையீட்டையடுத்து போராட்டம் சுமுகமாக இடம்பெற்றது.

சிங்கள மீனவர்கள் அங்கிருந்து வெளியேற்றப்படும் வரை உண்ணாவிரதம் தொடரும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (த-5-435)

# ஏமாற்றினார் சிப்பாய் நஞ்சருந்தினார் யுவதி

நான்காம் மாதம் என்னைப் பதிவுத் திருமணம் செய்வதாக தங்காலைக்கு அழைத்துச் சென்றார். அங்கு என்னை விடுதி ஒன்றில் தங்க வைத்திருந்த அவர் பணி நிமித்தம் தான் இராணுவ முகாமுக்கு திரும்ப வேண்டும் என்று கூறி இடைநடுவில் கிளிநொச்சிக்கு வந்துவிட்டார். தொலைபேசியில் தொடர்பைப் பேணி வந்த அவர் 2012.10.30 ஆம் திகதி என்னுடன் இறுதியாகப் பேசினார். அதன் பின்னர் என்னுடன் தொடர்பு கொள்வதை நிறுத்திக்கொண்டு விட்டார். முஹமட் உவைஸ், முஹ மட் நசூர்தீன் என்ற இவர் முஸ்லிம் வீதி, நலகம, தங்காலையைச் சேர்ந்தவர். இவர் கிளிநொச்சி பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை இராணுவ முகாமில் கடமையாற்றி வந்தார். இந்த நிலையில் நான் குறித்த சிப்பாய்க்கு எதிராக கிளிநொச்சி 57 ஆவது படைப் பிரிவில் முறைப்பாடு செய்தேன். அவர்கள் விசாரித்தனர். பின்னர் முறிகண்டியில் உள்ள சி.சி.எம்.பி. தலைமையகத்துக்கும் நான் சென்று முறையிட்டேன். அங்கு எனக்கு எந்த பதிலும் கிட்டவில்லை. இந்த நிலையில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டை பதிவு செய்தேன். கடந்த 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தின் பெண்கள், சிறுவர் முறைப்பாட்டு பிரிவுக்கு நான் அழைக்கப்பட்டேன். அன்றைய தினம் நசூர்தீனும் அங்கு வந்திருந்தார். பொலிஸாரின் முன்னிலையில் எங்கள் இருவருக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டது. அவரை நான் தாக்கினேன். அவர் என்னை தாக்கினார். பொலிஸார் தடுத்த நிலையில் நான் நஞ்சருந்தினேன். என்னை பொலிஸாரே வைத்தியசாலையில் சேர்த்தனர் என குறித்த யுவதி தெரிவித்தார்.

குறித்த சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் தொடர்பு கொண்டபோது, குறித்த யுவதி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாக சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தி வருவதாகவும் நேற்று இரவு கடமையில் இருந்த ஒருவர் தெரிவித்தார். (ஐ-6)

# ‘13’ ஐ ஒழிப்பதற்கு இந்தியா விடாது

பந்தன், கூட்டமைப்பின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சேனாதிராசா, கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமசந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான த.சித்தார்த்தன், வீ.ஆனந்தசங்கரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தியத் தரப்பில் சிவ்சங்கர் மேனனுடன், இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சின்ஹா, இந்தியத் தூதரக அரசியல் அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தப் பேச்சின் போது கூட்டமைப்பினர் சில விடயங்களை மேனனிடம் சுட்டிக்காட்டினர். இந்திய – இலங்கை ஒப்பந்தமானது இலங்கை பல்லின பல்மொழி பேசும் நாடு என்பதை ஏற்றுக் கொண்டதுடன் வடக்கு – கிழக்கு தமிழர்களின் தனித்துவம் மிக்க தாயகம் என்பதையும் ஏற்றுக் கொண்டுள்ளது. ஆனால் இன்று இலங்கை – இந்திய ஒப்பந்தம் முற்று முழுதாக மீறப்படுகின்றது.

தமிழர் தாயகப் பிரதேசமாக ஒப்பந்தத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட வடக்கு–கிழக்கில் தமிழர்களின் தனித்துவத்தை ஒழிக்கும் நடவடிக்கைகள் இலங்கை அரசால் திட்டமிடப்பட்ட ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் கூட்டமைப்பினர் மேனனிடம் கூறினர்.

தமிழர் தாயகப் பகுதிகள் எங்கும் இராணுவக் குடியிருப்புக்கள், இராணுவ முகாம்கள் மற்றும் வலிந்த சிங்களக் குடியேற்றங்கள் என்பன மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவை யாவும் இலங்கை – இந்திய ஒப்பந்தத்தை மீறும் செயல்.

இலங்கை – இந்திய ஒப்பந்தம் என்பது சர்வதேச ஒப்பந்தம். அதில் சம்பந்தப்பட்ட இரண்டு நாடுகளுக்குமே அதனை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இருக்கிறது. இந்த ஒப்பந்தத்தை மீறி இலங்கை அரசு தன்னிச்சையாக செயற்படுமாக இருந்தால் அதனை தட்டிக் கேட்க வேண்டிய – தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பு இந்தியாவுக்கு இருக்கின்றது. இந்தியாவும் இந்த ஒப்பந்தத்தின் பங்காளி என்றும் இந்தப் பேச்சின் போது கூட்டமைப்பினரால் சுட்டிக்காட்டப்பட்டது.

அத்துடன் 13 ஆவது திருத்தச் சட்டம் அதிகாரங்களைப் பகிர்வதை நோக்கமாகக் கொண்டு இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் ஏற்படுத்தப்பட்டது. தமிழ் மக்களுக்கு 13 ஆவது திருத்தச் சட்டம் ஒரு போதும் தீர்வாகாது. இருப்பினும் 13 ஆவது திருத்தச் சட்டத்தில் எந்த விதமான மாற்றங்களையும் செய்யக் கூடாது என்பதுடன், அதைப் பலவீனப்படுத்த இலங்கை அரசு எடுக்கும் முயற்சிகளையும் இந்தியா தடுத்து நிறுத்த வேண்டும் எனவும் கூட்டமைப்பினர் கோரிக்கை முன்வைத்தனர்.

வடக்கு மகாண சபைத் தேர்தல் நீதியாக நடைபெற வேண்டுமாக இருந்தால், வடமாகாண சபைக்கான தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பின்னர் வடக்கில் இராணுவத்தினர் முகாம்களுக்குள் முடங்க வேண்டும். அவர்கள் சிவில் உடையில் வெளியில் உலாவக் கூடாது.

மேலும் வடக்கில் ஒட்டுக் குழுக்களோ அல்லது எந்தத் தரப்பினரோ மக்களின் சுதந்திரமான வாக்களிப்புக்கு இடையூறாக இருக்கக்கூடாது. வடமாகாண சபைத் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டிருந்ததிலிருந்து முடிவடையும் வரை சர்வதேசக் கண்காணிப்பாளர்கள் இங்கு நிறுத்தப்பட வேண்டும் என்றும் கூட்டமைப்பினர் மேனனுடனான பேச்சின் போது வலியுறுத்தினர்.

இதற்குப் பதிலளித்த சிவ் சங்கர் மேனன்,

13 ஆவது திருத்தத்தில் எந்தவொரு சிறிய மாற்றத்தையும் ஏற்படுத்த இந்தியா விரும்பவில்லை. 13 ஆவது திருத்தத்தை ஒழிக்க மேற்கொள்ளும் நடவடிக்கைகள் அனைத்தையும் தடுத்து நிறுத்துவதற்கான சகல நடவடிக்கைகளையும் இந்தியா மேற்கொள்ளும். 13 ஆவது திருத்தத்தைப் பலவீனப்படுத்த இந்திய அரசு ஒரு போதும் அனுமதிக்காது. இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதற்கும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று கூட்டமைப்பிடம் உறுதியளித்தார் எனத் தெரியவருகிறது.

அத்துடன் வடக்கு மாகாண சபை தொடர்பான விடயங்களை நாளை (இன்று) ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது கலந்துரையாடுவதாகவும் அவர் அங்கு குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை ஜனாதிபதியுடனான இன்றைய சந்திப்பின் பின்னர் மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சிவ்சங்கர் மேனன் சந்திப்பார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-5)

## வடமாகாணத் தடகளப் போட்டி:

# யாழ். வலயம் சம்பியனாகத் தெரிவு

யாழ்ப்பாணம், ஜூலை 9
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான 6ஆவது தடகளப் போட்டிகளில் 1,056 புள்ளிகளைப் பெற்று யாழ்ப்பாண கல்வி வலயம் முதலிடத்தைப் பெற்றுள்ளது.



1,057 புள்ளிகளுடன் யாழ். கல்வி வலயம் சம்பியனாகத் தெரிவாகியது.

வலிகாமம் கல்வி வலயம் 921 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், வடமராட்சி கல்வி வலயம் 416 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும், மன்னார் கல்வி வலயம் 402 புள்ளிகளைப் பெற்று நான்காமிடத்தையும், வவுனியா வடக்கு கல்வி வலயம் 271 புள்ளிகளைப் பெற்று ஐந்தாம் இடத்தையும், முல்லைத்தீவு கல்வி வலயம் 241 புள்ளிகளைப் பெற்று ஆறாம் இடத்தையும், வவுனியா தெற்கு கல்வி வலயம் 236 புள்ளிகளைப் பெற்று ஏழாமிடத்தையும், கிளிநொச்சி கல்வி வலயம் 200 புள்ளிகளைப் பெற்று எட்டாமிடத்தையும், தென்மராட்சி கல்வி வலயம் 135 புள்ளிகளைப் பெற்று ஒன்பதாம் இடத்தையும், துணுக்காய் கல்வி வலயம் 76 புள்ளிகளைப் பெற்று பத்தாம் இடத்தையும், அடுத்தடுத்த இடங்களை தீவக கல்வி வலயம் 52 புள்ளிகளுடனும், மடு கல்வி வலயம் 47 புள்ளிகளுடனும் பெற்றுள்ளன.

அதேவேளை, தடகளப் போட்டிகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றவர்கள் வரிசையில்,

15 வயதுப் ஆண்கள் பிரிவில் சிறந்த தட வீரனாக வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த அருணோதயக் கல்லூரி மாணவன் ஜோஜிஷனும், சிறந்த கள வீரனாக வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மாணவன் கனிஸ்ரனும் தெரிவாகினர்.

17 வயதுப் பிரிவு ஆண்கள் பிரிவில் சிறந்த தட வீரனாக யாழ்ப்பாணம் கல்வி வலயத்தைச் சேர்ந்த சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவன் எம்.நிலோஜனும், சிறந்த கள வீரனாக யாழ்ப்பாணம் கல்வி வலயத்தைச் சேர்ந்த யாழ்.இந்துக் கல்லூரி மாணவன் ஆர்.செந்தூரனும் தெரிவாகினர்.

19 வயது ஆண்கள் பிரிவில் சிறந்த தட வீரனாக யாழ்ப்பாணம் கல்வி வலயத்தைச் சேர்ந்த சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவன் ஏ.அனோஜனும், சிறந்த கள வீரனாக மன்னார் கல்வி வலயத்தைச் சேர்ந்த சென்.ஆன்ஸ் மத்திய மகா வித்தியாலய மாணவன் எஸ்.வின்ஸன் மார்க்கும் தெரிவாகினர்.

21 வயது ஆண்கள் பிரிவில் சிறந்த தட வீரனாக வவுனியா தெற்கு தமிழ் மத்திய மகா வித்தியால மாணவன் பிரசாந்தும், சிறந்த கள வீரனாக வி.ஜஸ்மினனும் தெரிவாகினர்.

2013ஆம் ஆண்டுக்கான சிறந்த தடகள வீரரான யாழ்ப்பாணம் கல்வி வலயத்தைச் சேர்ந்த யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மாணவன் பி.ஜஸ்மினன் தெரிவானார்.

15 வயதுப் பெண்கள் பிரிவில் சிறந்த தட வீராங்கனையாக மன்னார் கல்வி வலயத்தைச் சேர்ந்த சென். ஆன்ஸ் கல்லூரி மாணவி தொஷிபாலம்பேட்டும், சிறந்த கள வீராங்கனையாக மன்னார் கல்வி வலயத்தைச் சேர்ந்த கௌரியம்பாள் அ.த.க.பாடசாலை மாணவி எஸ்.பிரியதர்சினியும் தெரிவாகினர்.

17 வயதுப் பெண்கள் பிரிவில் சிறந்த தட வீராங்கனையாக முல்லைத்தீவு கல்வி வலயத்தைச் சேர்ந்த விசுவமடு மகா வித்தியாலய மாணவி பி.தனுஜாவும், சிறந்த கள வீராங்கனையாக வடமராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவி எஸ்.ஆரணியும் தெரிவாகினர்.

19 வயதுப் பெண்கள் பிரிவில் சிறந்த தட வீராங்கனையாக வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த மாதகல் சென்.ஜோசப் மகா வித்தியாலய மாணவி அனற்றும், சிறந்த கள வீராங்கனையாக வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த வட்டு மத்திய கல்லூரி மாணவியான எம்.கமலினியும் தெரிவாகினர்.

21 வயதுப் பிரிவு பெண்கள் பிரிவில் சிறந்த தட வீராங்கனையாக வவுனியர் தெற்கு கல்வி வலயத்தைச் சேர்ந்த வவுனியா சிவப்பிரகாச மகளிர் கல்லூரி மாணவியான லோகாஜினியும், சிறந்த கள வீராங்கனையாக யாழ்ப்பாணம் கல்வி வலயத்தைச் சேர்ந்த சுண்டுக்குழி மகளிர் கல்லூரி மாணவி எம்.மெற்றில்டாவும் தெரிவாகினர்.

2013ஆம் ஆண்டுக்கான சிறந்த தடகள வீராங்கனையாக வவுனியா தெற்கு கல்வி வலயத்தைச் சேர்ந்த வவுனியா சிவப்பிரகாச மகளிர் கல்லூரி மாணவி லோகாஜினி தெரிவானார்.

(ற-23- 422-433)



இரண்டாம் இடத்தைப் பெற்ற வலிகாமம் கல்வி வலயம்



மூன்றாம் இடத்தைப் பெற்ற வடமராட்சி கல்வி வலயம்

# அக்ரம் திருமணம்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித் தலைவர் வசிம் அக்ரம் இரண்டாவது திருமணம் செய்துள்ளார்.

சிறந்த வேகப்பந்து வீச்சாளரான அவர் டெஸ்டில் 414 இலக்குகளையும், ஒருநாள் போட்டியில் 502 இலக்குகளையும் கைப்பற்றி உள்ளார்.

வசிம் அக்ரமின் முதுல் மனைவி ஹுமா 2009ஆம் ஆண்டு உயிரிழந்தார். சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பலன் அளிக்காமல் இறந்தார்.

மனைவியை இழந்த பிறகு வசிம் அக்ரம் நடிகை சுஷ்மிதா சென்னுடன் நெருக்கமாக இருந்தார். அவரை திருமணம் செய்துக்கொண்டதாகவும் தகவல் வெளியானது. இதை இருவரும் மறுத்து இருந்தனர்.

இந்த நிலையில் 47 வயதான வசிம் அக்ரம் ஆஸ்திரேலியாவை சேர்ந்த ஷனாரியா தொம்சன் என்பவரைத் திருமணம் செய்கிறார்.

வசிம் அக்ரம்- ஷனாரியா தொம்சன் திருமண நிச்சயதார்த்தம் அண்மையில் நடந்துள்ளது. அதை தொம்சனின் குடும்பத்தினர் தெரிவித்தனர். இந்த ஆண்டு இறுதியில் திருமணம் நடைபெறவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

வாசிம் அக்ரம் ஷனாரியா தொம்சனை 2011ஆம் ஆண்டு மெல்போர்னில் முதல் முறையாக சந்தித்தார். அப்போது அவர்களுக்குள் காதல் ஏற்பட்டது. ஷனாரியா தொம்சன் இஸ்லாம் மதத்துக்கு மாறிவிட்டார். திருமணத்துக்கு பிறகு அவர் பாகிஸ்தானில் குடியேறுகிறார்.

இதுகுறித்து வசிம் அக்ரம் கூறும்போது, நான் மீண்டும் திருமணம் செய்வேன் என்று நினைத்து பார்க்கவில்லை. நான் அதிர்ஷ்டக்காரன் தான் மீண்டும் காதல் உருவானது மிகுந்த மகிழ்ச்சி தான் என்றார்.

(ற)

## உதயசூரியன் மென்பந்து கிரிக்கெட் தொடர்

# ஞானமுருகன், மைக்கல் இறுதியில்

பருத்தித்துறை, ஜூலை 9
புலோலி குரும்பைசிட்டி உதயசூரியன் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்திய 5 பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட 6 பேர் பங்குபற்றும் கிரிக்கெட் சுற்றுத் தொடரின் இறுதியாட்டத்துக்கு கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழக அணியும், மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக அணியும் தகுதி பெற்றுள்ளன.

உதயசூரியன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த அரையிறுதியாட்டங்களில், முதலில் இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணியும் அல்வாய் நியூபவர் விளையாட்டுக் கழக அணியும் மோதிக் கொண்டன.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழக அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

அதிரடியாக ஆடிய அவ்வணி 5 பந்துப் பரிமாற்றங்களின் முடிவில் 55 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர். அதில் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய சுகந்தன் 35 ஓட்டங்களையும், கீதன் 17 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

56 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கியது அல்வாய் நியூபவர். ஞானம்ஸ் அணியின் துல்லியமான பந்துவீச்சின் முன்னால் நியூபவர் அணி ஓட்டங்களைச் சேகரிக்க முடியாது தடுமாறியது. இலக்குகள் மளமளவென வீழ்த்தப்பட அனைத்து இலக்குகளையும் இழந்து 21 ஓட்டங்களை மட்டுமே பெற்று தோல்வியைத் தழுவியது அல்வாய் நியூபவர் அணி. 32 ஓட்டங்களால் வெற்றியீட்டி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகம்.

பந்துவீச்சில் ஞானம்ஸ் அணி சார்பாகச் சிறப்பாகப் பந்து வீசிய அனுசயன் 3 இலக்குகளையும், துவி 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

அடுத்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதியாட்டத்தில், மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகமும், வல்வை விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்த மைக்கல் விளையாட்டுக் கழகம், வல்வை விளையாட்டுக் கழக பந்து வீச்சாளர்களை மிரட்டியது. 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 67 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது மைக்கல் விளையாட்டுக் கழகம்.

மைக்கல் விளையாட்டுக் கழகம் சார்பாக ரகு 32 ஓட்டங்களையும், ரவீந்திரன் 24 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

வல்வை அணி சார்பில் பிரணவன் மற்றும் கபிலன் ஆகியோர் தலா இரண்டு இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய வல்வை அணியின் துடுப்பாட்ட வீரர்கள் ஏமாற்ற, 5 பந்துப் பரிமாற்றங்களின் முடிவில் 40 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியடைந்தது. 17 ஓட்டங்களால் வெற்றிபெற்ற மாலிசந்தி மைக்கல் அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

வல்வை அணி சார்பில் கபிலன் மட்டும் 18 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக் கொண்டார்.

மைக்கல் விளையாட்டுக் கழகம் சார்பில் அச்சுதன், கபிலன் ஆகியோர் தலா இரண்டு இலக்குகளை வீழ்த்தினர்.

(ற-34-8)

## மோர்டஸா மீண்டும் களத்துக்கு




சர்வதேச கிரிக்கெட் போட்டிகளுக்கு மீண்டும் திரும்புவது குறித்து பங்களாதேஷ் அணியின் வேகப்பந்துவீச்சாளர் மஸ்ரபி மோர்டஸா கவனம் செலுத்தியுள்ளார்.
இதன்பிரகாரம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் சொந்த மண்ணில் நடைபெறவுள்ள நியூஸிலாந்து அணிக்கெதிரான ஒருநாள் போட்டித் தொடரில் அவர் விளையாடலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.
மூன்று வார காலம் மேற்கொண்ட உடற்பயிற்சித் திட்டத்தின் மூலம் மோர்டஸாவின் உடற்தகுதி முன்னேற்றம் அடைந்துள்ளார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
கடந்த பெப்ரவரி மாதம் நடைபெற்ற பங்களாதேஷ் பிறிமியர் லீக் '20/20' தொடரின் இறுதிப் போட்டியின் போது அவர் உபாதைக்கு உள்ளாகியிருந்தார். (ற)

## ஜடேஜாவிடம் விளக்கம்



சுரேஷ் ரெய்னாவிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டது ஏன் என்பது குறித்து எழுத்து மூலமாக விளக்கமளிக்க வேண்டும் என்று ஜடேஜாவை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை கேட்டுள்ளது.
கடந்த 5ஆம் திகதி மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான ஆட்டத்தின் போது, பிடியைத் தவறவிட்டமை தொடர்பாக சுரேஷ் ரெய்னாவும், ரவீந்திர ஜடேஜாவும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.
அப்போது குறுக்கிட்ட அணித் தலைவர் வீராட் கோஹ்லி இருவரையும் சமாதானப் படுத்தினார்.
இதற்கிடையே மைதானத்தில் ரெய்னாவிடம் நடந்து கொண்டது தொடர்பாக எழுத்து மூலமாக விளக்கம் அளிக்க வேண்டுமென ஜடேஜாவைக் கேட்டுள்ளது இந் திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை. (ற)



# விம்பிள்டன்: அன்டி முரே சம்பியன்

விம்பிள்டன் ரென்னிஸ் போட்டிகளின் ஆடவர் பட்டத்தை பிரிட்டனின் அன்டி முரே வென்று சாதனை படைத்துள்ளார். பிரிட்டனைச் சேர்ந்த ஒருவர் விம்பிள்டன் டென்னிஸ் போட்டிகளில் பட்டத்தை வெல்வது கடந்த 77 ஆண்டுகளில் இதுவே முதல் முறையாகும்.
இறுதியாட்டத்தில் அவர் செர்பியாவின் நோவாக் ஜக்கோவிச்சை 6:4,7:5, 6:4 எனும் நேர் செற்களில் வென்றார்.
முதல் இரண்டு செற்களிலும் வென்ற முரே மூன்றாவது சுற்றிலும் எளிதாக வென்றுவிடுவார் என்று இரசிகர்கள் நம்பினார்கள். எனினும் மூன்றாவது செற்றையும், சம்பியன் பட்டத்தையும் அவர் போராடியே வெல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.
உலக ஆடவர் தரப்பட்டியலின் முதலிடத்தில் இருக்கும் நோவாக் ஜோக்கோவிச்சும், இரண்டாம் இடத்தில் இருக்கும் அன்டி முரேக்கும் இடையேயான மூன்றாவது செற் மிகவும் பரபரப்பாக இருந்தது.
ஒரு கட்டத்தில் இருவரும் 2:2 என்ற புள்ளிகள் அடைப்படையில் சமனிலையில் இருந்தனர். அது அந்த செற்றின் போக்கு யார் வேண்டுமானாலும் வெற்றி பெறலாம் எனும் சூழலை ஏற்படுத்தியது.
குறிப்பாக 5:4 எனும் கணக்கில் முன்னிலை வகித்த முரே வெற்றியின் விளிம்புக்கு சென்று சென்று திரும்பினார். மூன்றாவது செற்றின் ஆறாவது ஆட்டத்தில் முரே 40:0 எனும் கணக்கில் முன்னிலையில் இருந்தாலும், ஜோக்கோவிச் மீண்டு வந்து 40:40 எனும் சமநிலையை ஏற்படுத்தினார். பின்னர் அந்த ஆட்டத்தின் வெற்றி யாருக்குச் செல்லும் என்று கணிக்க முடியாத நிலையை ஏற்படுத்தியது.
அரங்கத்தில் குழுமியிருந்த பிரிட்டன் பிரதமர் டேவிட் கேமரன் உட்பட பலர் மிகுந்த எதிர்பார்ப்புடன் கூடிய ஏக்கத்தில் இருந்தனர்.
இறுதியாக முரே பிரிட்டிஷ் மக்கள் மற்றும் ரசிகர்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் வகையில் விம்பிள்டன் சம்பியன் பட்டத்தை வென்றார்.
இது அன்டி முரேயின் இரண்டாவது பெரிய வெற்றியாகும். 26 வயதான அவர் கடந்த ஆண்டு அமெரிக்கன் ஓபன் ரென்னிஸ் பட்டத்தை வென்றார். இவற்றைவிட, கடந்த ஆண்டு ஒலிம்பிக் டென்னிஸ் போட்டிகளிலும் அவர் தங்கம் வென்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.
விம்பிள்டன் பகுதியில் நேற்று முன்தினம் 40 டிகிரிக்கும் அதிகமாக வெப்பம் நிலவியதுடன், 15,000 ரசிகர்கள் மத்தியில் இந்தப் போட்டி மூன்று மணிக்கும் கூடுதலான நேரம் நடைபெற்றது. அகில இங்கிலாந்து ரென்னிஸ் சங்கத்தால் நடத்தப்படும் இந்தப் போட்டியில் 1936ஆம் ஆண்டு பிரெட் பெரி பட்டத்தை வென்ற பிறகு, பிரிட்டனைச் சேர்ந்த ஒருவர் விம்பிள்டன் பட்டத்தை பெறுவது இதுவே முதல் முறை. (ற)

## சிம்பாப்வே அணியில் பாக். வீரர்

இந்தியாவுக்கெதிரான ஒரு நாள் தொடரில் பங்கேற்கவுள்ள சிம்பாப்வே அணியில் பாகிஸ்தானில் பிறந்த சிக்கந்தர் ராஜா இடம் பிடித்துள்ளார்.
இம்மாத இறுதியில் சிம்பாப்வே சுற்றுப்பயணம் செய்யவுள்ள இந்திய அணி ஐந்து போட்டிகள் (ஜூலை 24 - ஓக. 3) கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது.
முதல் போட்டி வரும் ஜூலை 24ம் திகதி ஹராரேயில் நடக்கவுள்ளது. இத்தொடருக்கான 16 பேர் கொண்ட அணியை, சிம்பாப்வே கிரிக்கெட் சபை நேற்று அறிவித்தது.
அந்த அணியில் 1986ஆம் ஆண்டு பாகிஸ்தானில் உள்ள சியால் கோட் நகரில் பிறந்த சிக் கந்தர் இடம் பிடித்துள்ளார். 2007ஆம் ஆண்டு சிம்பாப்வே அணிக்காக முதல் தர போட்டியில் விளையாடிய இவர், கடந்த மே மாதம் நடந்த பங்களாதேஷுடனான ஒருநாள் மற்றும் '20/20' தொடர் மூலம் சர்வதேச ஆட்டங்களில் முதன் முறையாக களமிறங்கினார்.
முதல்வரிசை துடுப்பாட்ட வீரரான இவர் இதுவரை 3 ஒருநாள் (63 ஓட்டங்கள்), 2 சர்வதேச '20/20' (45 ஓட்டங்கள்) ஆட்டங்களில் விளையாடி உள்ளார்.
அறிவிக்கப்பட்டுள்ள அணியில் வேகப்பந்துவீச்சாளர் மசகட்சா, டினாஷே பன்யன்கரா ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர். அதேபோல் விக்கெட் காப்பாளர் ரெஜிஸ் சகப்வாவுக்கும் இடம் கிடைக்கவில்லை.
விக்கெட் காப்பாளராகவும், அணித்தலைவராகவும் பிரண்டன் ரெய்லர் செயற்பட உள்ளார். இந்த அணியில், ஜார்விஸ், டென்டாய் சடாரா, பிரைன் விடோரி, எல்டன் சிகும்புரா, மைக்கேல் சினோயா உள்ளிட்ட ஐந்து வேகப்பந்துவீச்சாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
அறிவிக்கப்பட்டுள்ள சிம்பாப்வே அணி:
பிரண்டன் ரெய்லர் (அணித் தலைவர் + விக்கெட் காப்பாளர்), சிக்கந்தர் ரஜா, டென்டாய் சடாரா, மைக்கேல் சினோயா, எல்டன் சிகும்புரா, கிரிமர், ஜார்விஸ், டிமிசன் மருமா, ஹாமில்டன் மசகட்சா, நட்சாய் மஷாங்வே, டினோடென்டா முடோம்போடிசி, விசிமுசி சிபண்டா, உட்சேயா, பிரைன் விடோரி, மால்காம் வாலர், சீன் வில்லியம்ஸ். (ற)

# வீரரைத் தாக்கிய நடுவரை கொலை செய்த இரசிகர்கள்

பிரேஸிலில் உதைபந்தாட்ட வீரரை தாக்கிய நடுவரை ரசிகர்கள் தலைதுண்டித்து படுகொலை செய்தது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
பிரேஸில் தலைநகர் ரியோ டிஜெனிரோ அருகே உள்ள பியோ நகரில் கடந்த மாதம் 30ஆம் திகதி உள்ளூர் உதைபந்தாட்டப் போட்டி நடைபெற்றது.
உதைபந்தாட்டப் போட்டியின் போது உதைபந்தாட்ட வீரர் ஜோசெனிர் டோஸ் சாண்டோஸ் மற்றும் நடுவர் ஆக்டேவியோ டா சில்வா ஆகியோருக்கு இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.
வாக்குவாதம் முற்றி கைகலப்பாக மாறவே உதைபந்தாட்ட வீரரை மைதானத்தை விட்டு வெளியேறுமாறு நடுவர் கூறினார். அவர் வெளியேற மறுக்கவே ஆவேசமடைந்த நடுவர், வீரரை கத்தியால் குத்தினார்.
இந்நிலையில் படுகாயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த வீரர் டோஸ் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தார்.
இதனால் ஆத்திரமடைந்த அவரது ரசிகர்கள் மைதானத்திற்குள் புகுந்து நடுவர் சில்வாவை கல்லால் அடித்து தாக்கி, அவரது தலையை துண்டித்து படுகொலை செய்துள்ளனர். இச்சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



# கெவின் பீற்றர்ஸன் அற்புதமான வீரர்




இங்கிலாந்து அணியின் துடுப்பாட்ட வீரர் கெவின் பீற்றர்சன் ஓர் அற்புதமான வீரர் என அந்த அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் அன்டர்சன் தெரிவித்துள்ளார். அத்தோடு, இங்கிலாந்து அணிக்கு கெவின் பீற்றர்சன் முக்கியமானவர் எனவும் குறிப்பிட்டுள்ளார். கடந்தாண்டு அணியின் சக வீரர்களுடன் கெவின் பீற்றர்சனுக்கு ஏற்பட்ட கருத்து முரண்பாடுகளை அடுத்து அவருக்கும், சக வீரர்களுக்குமிடையில் முறுகல் ஏற்பட்டிருந்தது.

தற்போது முரண்பாடுகள் தீர்க்கப்பட்டு கெவின் பீற்றர்சன் போட்டிகளில் பங்குபற்றி வரும் நிலையிலேயே ஜேம்ஸ் அன்டர்சன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து அணியில் கெவின் பீற்றர்சன் இணையும்போது இங்கிலாந்து அணி நிச்சயமாக சிறந்த அணியாக மாறுகிறது எனத் தெரிவித்துள்ள ஜேம்ஸ் அன்டர்சன், கெவின் பீற்றர்சன் ஓர் அற்புதமான வீரர் எனக் குறிப்பிட்டுள்ளார். கெவின் பீற்றர்சனுக்கும், அணி வீரர்களுக்குமிடையில் முரண்பாடு ஏற்பட்ட தொடரான தென்னாபிரிக்கத் தொடரில் இங்கிலாந்து அணி தோல்வியடைந்திருந்த நிலையில், அத்தொடரில் இங்கிலாந்து அணி எதிர்பார்த்த அளவில் திறமைகளை வெளிப்படுத்தியிருக்கவில்லை என ஜேம்ஸ் அன்டர்சன் ஏற்றுக் கொண்டுள்ளார். ஆஷஷ் தொடரில் அவுஸ்திரேலிய அணியின் தலைவர் மைக்கல் கிளார்க்கே தங்களுக்கான பிரதானமான சவாலாகக் காணப்படுகிறார் எனக் குறிப்பிட்ட ஜேம்ஸ் அன்டர்சன், ஆனால் உலகின் சிறந்த டெஸ்ட் துடுப்பாட்ட வீரர் என ஜொனதன் ட்ரொட்டையே தான் தெரிவு செய்வதாகக் குறிப்பிட்டார். (ற)

# நியூசிலாந்து அணி அறிவிப்பு

நியூஸிலாந்து சர்வதேச கிரிக்கெட் அணிக்கான புதிய ஒப்பந்த விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. 2013-14 ஆண்டு பருவகாலத்திற்கான 20 பேர் கொண்ட ஒப்பந்த விபரங்களே அறிவிக்கப்பட்டுள்ளன.

கடந்த வருடம் ஒப்பந்தம் வழங்கப்பட்ட வீரர்களிலிருந்து ஜேம்ஸ் பிராங்ளின், டானியன் பிளின், அன்ட்ரூ எலிஸ், தருண் நெதுலா, றொப் நிக்கல், ரூகர் வாகர் வைக், ஜேக்கப் ஓரம் ஆகியோருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டவில்லை.

அத்தோடு மிக அண்மையில் ஓய்வுபெற்ற கிறிஸ் மார்ட்டின், ஒப்பந்தத்தில் இடம்பெற விரும்பவில்லை என அறிவித்த டானியல் வெற்றோரி ஆகியோரும் ஒப்பந்தப் பட்டியலில் இடம்பெறவில்லை.

அண்மைக்காலமாக நியூஸிலாந்து அணியில் இடம்பெற்றிருந்த வீரர்களான அன்ட்ரூ எலிஸ், லூக் றொங்கி, அடம் மில்ன், இயுன் பட்லர், ஜீதன் பட்டேல் ஆகியோருக்கும் இந்த ஒப்பந்தப் பட்டியலில் இடம் வழங்கப்படவில்லை.

அறிவிக்கப்பட்டுள்ள ஒப்பந்தப் பட்டியல்:
கொரே அன்டர்சன், ட்ரென்ட் போல்ட்ற், டக் பிரேஸ்வெல், டீன் பிரௌண்லி, கிரான்ற் எலியட், பீற்றர் புல்ற்றன், மார்ட்டின் கப்ரில், றொம் லதம், புரூஸ் மார்ட்டின், மிற்சல் மக்லநகன், பிரென்டன் மக்கலம், நேதன் மக்கலம், கைல் மில்ஸ், கொலின் முன்ரோ, ஹேமிஸ் றதர்போர்ட், ரிம் சௌதி, றொஸ் ரெய்லர், நீக் வக்னர், பி.ஜே.வற்லிங், கேன் வில்லியம்ஸன். (ற)

**SHAMROCK (25 yrs)**
**ஈச்சமோட்டை, யாழ்**
C.ma. -G. கண்ணன் (B.Sc)
Bio. -R. குகானந்தன் (B.Sc)
Phy. -S. சசி (B.Sc)
Che. -M.A. நிரோஜன் (B.Sc)
**A/L 2014, 2015**
**நடைபெறுகிறது.**
(30690)
(10.6.3)

**Sky Computers (Pvt) Ltd**
**இல. 89, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.**
(கச்சேரிக்கு அருகில்)
**புதிய பிரிவுகள் ஆரம்பம்**
(வியாழன்–10:00 am) TP:021-222-1417
➔**Dip. in Mobile Phone Repairing**
(காலம் – 3 மாதங்கள்)
➔**Dip. in Hardware & Networking**
(காலம் – 3 மாதங்கள்)
யாழ் பிரபல ஆசிரியரினால் கற்பிக்கப்படுகின்றது.

**கருத்தரங்கு**
**தமிழ்**
ஆரம்பம்:
11.07.2013 வியாழன்
(5 நாள்கள்)
இடம்:
**யூனிவேர்சல்**
ஆசிரியர்:
திரு. T.S. **குகன்**
அனுமதிகள், கட்டண விவரங்கள் அலுவலகத்தில்.



காரைநகர் மணற்காடு
கும்பநாயகி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய
**இராஜகோபுர அடிக்கல் நாட்டு விழா**

அம்பிகை அடியார்களே!

நாளை 10.07.2013 புதன்கிழமை காலை 9.05 மணி முதல் 10.05 மணிவரையுள்ள சுப வேளையில் மேளவாத்தியங்கள் முழங்க ஈழத்தின் தலைசிறந்த சிவாச்சாரியார்கள் ஆகம முறைப்படி வேதபாராயணம் ஓத சைவப்பெரியோர்கள், அம்பிகையின் அடியார்கள் முன்னிலையில் ஆலயத்தின் இராஜகோபுரம், மணிமண்டபம், மணிக்கோபுரம் ஆகியவற்றிற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெறும். முன்பதாக அன்றைய தினம் காலை 6.30 மணிமுதல் அம்பாளிற்கு விஷேட அபிஷேக ஆராதனைகள் நடைபெறும்.

அத்தருணம் அம்பிகை அடியார்கள் யாபேரும் ஆசார சீலர்களாக வருகைதந்து அம்பாளின் திருப்பணி விரைவில் நிறைவேற பிரார்த்தித்து அம்பாளின் அருட்கடாட்சத்தை பெற்றுய்யும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

திருப்பணிச்சபை
மணற்காடு கும்பநாயகி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்.

(C/10264)

# பாகிஸ்தான் அணி வீரர்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும்



பாகிஸ்தான் அணியின் வீரர்கள் பொறுப்பை உணர்ந்து கிரிக்கெட் ஆட்டங்களில் விளையாட வேண்டும் என பாகிஸ்தான் அணியின் தலைவர் மிஸ்பா உல் ஹக் தெரிவித்துள்ளார். மேற்கிந்தியத் தீவுகளுக்கான தொடருக்குப் புறப்படும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். எதிர்வரும் 14ஆம் திகதி முதல் ஆரம்பித்து இடம்பெறவுள்ள மேற்கிந்தியத் தீவுகளுக்கெதி ரான தொடருக்காக பாகிஸ்தான் அணி மேற்கிந்தியத் தீவுகளுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளது.

இந்நிலையில் கருத்துத் தெரிவித்த மிஸ்பா உல் ஹக்,

மேற்கிந்தியத் தீவுகள் அணி தங்களுடைய சொந்த நாட்டில் வைத்து எதிரணிகளுக்குக் கடுமையான சவாலை வழங்குகின்ற நாடாகக் காணப்படுகிறது. எனினும், பாகிஸ்தான் அணி அங்கு வைத்து சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்த வேண்டும்.

பாகிஸ்தான் அணி தனது இறுதி 2 தொடர்களான தென்னாபிரிக்காவிற்கெதிரான தொடர், சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் இரண்டிலும் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தத் தவறியிருந்தது. எனினும் இம்முறை பெறுபேற்றை வெளிப்படுத்தும் தேவையுள்ளது என்று குறிப்பிட்ட மிஸ்பா,

முழு அணியும் பொறுப்பை உணர்ந்து ஆட வேண்டியுள்ளது. ஓரிரு வீரர்கள் மாத்திரம் வெற்றியைப் பெற்றுக் கொடுக்க முடியாது என்றும் குறிப்பிட்டார். பாகிஸ்தான் அணி 5 ஒரு நாள் சர்வதேச ஆட்டங்களிலும், இரு '20/20' சர்வதேச ஆட்டங்களிலும் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

# சண்டிலாதான் ஏமாற்றினார்



''சண்டிலாதான் என்னை ஏமாற்றி, சூதாட்டத் தரகர்களைச் சந்திக்க வைத்தார்'' என்று ராஜஸ்தான் அணியின் ஹர்மீத் சிங் தெரிவித்தார்.

ஆறாவது பிரிமியர் கிரிக்கெட் தொடரில் ராஜஸ்தான் அணியின் ஹர்மித் சிங்கை சூதாட்டத் தரகர்கள் அணுகிய தகவல் தற்போது வெளிவந்துள்ளது. ஹர்மீத் அதை மறைத்ததால் இவரை, இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை இடைநிறுத்தியது. அத்துடன் அவரிடம் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் ஊழல் கண்காணிப்பு பிரிவு தலைவர் ரவி சவான் விசாரணை நடத்தினார்.

அதன்போது, ''சண்டிலாதான் என்னை ஏமாற்றி தரகர்களைச் சந்திக்க வைத்தார். எனக்கு இவர்களின் பெயர் கூட தெரியாது. அது பற்றி சண்டிலா விடம் கேட்டபோது, 'இவர்கள் என் சகோதரர்கள் போல' என பதிலளித்தார். டில்லி பொலிஸார் புகைப்படத்தை காட்டி விசாரித்தபோதுதான், இவர்களை பற்றி எனக்கு தெரியவந்தது. அவர்கள் எனக்கு பணமோ, பொருளோ கொடுப்பதாகக் கூறவில்லை. எனவேதான், இவர்களை பற்றி எதுவும் தெரியப்படுத்தவில்லை'' என்று ஹர்மீத் கூறியுள்ளார். (ற)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.07.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.